TH[illegible]GARAJAN

AN INTERESTING
TAMIL NOVEL

BY

S. T. MOORTHY

Author of

Kannammal, Nagaruthnam

and

other Novels.

PRINTED AT THE

[illegible] V. S. PRESS., MOUNT ROAD, MADRAS.

Price Annas 8.

உ

பரமபதிதுணை.

தியாகராஜன்.

(ஓர் இனிய தமிழ் நாவல்)

'கலியாணம்மாள்' 'நாகரத்தினம்'

முதலான நாவல்களின் ஆசிரியராகிய

இரங்கூன்,

ச. தா. மூர்த்தி முதலியார் அவர்கள்

இயற்றியது.

களத்தூர் - முனிசாமிப் பிள்ளையவர்களால்

சென்னை மலைச்சாலை

ஸ்ரீஜீவரத்திந விநாயக சம்பந்தர் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

விலை அணா 8.] [தபாற் கூலி வேறு.

இந்நூலிலுள்ள அச்சுப்பிழை திருத்தங்கள்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
தந்துரை	9	ாயிலாக	வாயிலாக
8	9	ஓருவாறு	ஒருவாறு
12	13	விருத்தாந்தை	விருத்தாந்தத்தை
138	10	சர்வ ஞஞஞகிய	சர்வஞ்ஞஞகிய
143	10	சாதலித்து	காதலித்து
165	1	ஒர்விநோத	ஓர்விநோத

Eulogium.

THIS is an interesting Tamil Novel called THIYAGARAJAN written by Mr. S. Thandava Moorthy Mudaliar of Post Master General's Office Rangoon. The author once before presented to the Tamil world a novel by the name of Nagaruthnam or Poisoned Pin, and he succeeded also for the second time in the compilation of the life of Ambigapathy (Emperor poet Kambar's son) in last December. Both of his above works are well recognized by the Tamil reading public of Southern India and Burma. In this connection, I may say, that the author has a sound knowledge in the Western thoughts and ideas and as such has a masterly command of them to bring them out through his able pen. I introduce this novel to the Tamil world as one of the model novels that have recently come out.

The author has asked me to peruse his work and thus I had a chance to go through his work more than once and pass my humble opinion. I should say that Mr S. T. Mudaliar has taken a good deal of pain in describing fully, the life of Thiyagarajan and his behaviour in his scholastic career with his true friend Sivaneson. The dialogue portion is really appreciable.

The author clearly points out in the 2nd and 3rd chapters, the true manly struggles under the various headings of mutual hate and strife, deceit and contention, jealous ambition and petty selfishness on the part of MANICKUM the deadly enemy of the hero: In consequence the exile of Manickum from his native country is really very instructive to the younger generation.

Referring to the 3rd and 5th chapters, the author has woven the plot to prove that Education of females is really necessary and in so doing brought an example in the person of "VADIVUDAYAMMAI" the heroine of the novel.

He has also shewn the way in which love tends to move in the centre of the hearts of true lovers, and analysed fully from its growth. It is very strange to note, that the author, whose heart has not been touched by the wordly pleasures, yet, has been able to describe about love with emotional passions. It is clear therefore the writer of this work when he matures in the wordly ideas, may supersede the very few scholars now doing the pioneer work of the stage.

I have no hesitation in saying that the skill of the author has been fully displayed in the compilation of Thiyagarajan. It is my sincere wish that this work will be appreciated greatly by the Tamil reading public.

May God spare the author for us for many years to come and enable him to produce many more similar works.

Rangoon, 10th Febry 1912. — SHUNMUGANANDHA MUDALIAR.

உ

திருச்சிற்றம்பலம்.

தந்துரை.

மலர்தலை யுலகத்தில் மக்க ளாக்கையைப் பெற்ற வுயிர்கள் அறநெறியினின்றொழுக வேற்பட்ட நூற்பல வுள. இனிய தமிழிலுள்ளன பெரும்பாலும் செய்யுணடையிலிருத்தலின், அவை கல்வி வல்லுந ரல்லாத மாதராடவர்க்கும், முக்கியமாய் இளையோர்க்கும் பயன்தராதிருக்கின்றன. நீதி யநீதிகளாலாம் நலந்தீங்கினை வறிதேயன்றிச் சரிதங்கள் ாயிலாக விளக்கும் இதிகாசங்களும், தற்காலத்திய பலருக்குப் புராதன தெய்வத கதைகளாகவும், சிலருக்குப் பொய்ப் புனைந்துரைகளாகவுங் காணப்படுகின்றன. வாசக நடையி லெழுந்தவற்றுள் சிற்சில 'நெடுங்காம முற்பயக்குஞ் சின்னீர வின்பம்........பிற் பயக்கும் பீழை பெரிது' என்றாங்கு சிற்றின்பக் கதைகளாயும், வேறுசில வறிதே நாள் போக்கும் விநோதகதைகளாயு மிருந்தொழிகின்றன. இத்தியாதிவிகற்பங்களைத்தேர்ந்து உலகம் விரும்பும் வகையில் ஒழுக்கங்களைப் போதிப்பதே அறிவுடையோர் கடனாகும்.

"திறனறிந்து சொல்லுக சொல்லை யறனும்
பொருளு மதனினூஉங் கில்."

என்று தெய்வப்புலவர் கூறியதூ மிதுபற்றியேயாம்.

இதனை வடநூலார் 'குலாஜிஹ்வா ந்யாயம்' என்பர். (தித்திப்போடு மருந்தூட்டல்). ஸ்ரீமாந்: ச. தா. மூர்த்தி முதலியார் அவர்களும் இத்துறையை யநுசரித்தே தற்கால ஒழுக்க வழக்குகளுக் கேற்ற படி "தியாகராஜன்" என்னு மிந்நாவலை எழுதி யிருக்கின்றனர். இதில் கல்வி, அடக்கம், சீவதயை, தீயன விலக்கல், நல்லார்கேண்மை, தேவதாபக்தி ஆதிய சிறந்த பல்விஷயங்களும்; விசேடமாகப் பெண்கல்வி ஆவசியகம்; அப்பெண்களுக்குரிய கற்பு, காதல் இனையன, தீயார் தீங்கடைவர், நல்லார் நன்குறுவர் என்றற்றொடக்கத்தனவும் கதை வழியாகவே நன்கு விளக்கப்பட்டிருப்பதால் இதனாசிரியர் இதற்குமுன் பெழுதியுள்ள 'கண்ணம்மாள்' என்னும் நாவலைப் போலவே இது நல்லொழுக்க நூலேயாம். ஆகவே இத்'தியாகராஜன்' சிறுவர் சிறுமியர்க்கும், ஏனையர்க்கும் விவேகத்தை யுண்டாக்குவதா யிருத்தல்பற்றி யாவரும் வாங்கி வாசிக்கத் தகுந்ததென்பது சொல்லாமலே விளங்கும்.

இத்தன்மைய நாவல்களையியற்றி இதம்புரியும் ஷை முதலியாரவர்கட்கு உலகம் நன்றி பாராட்டுமாறு எல்லாம் வல்ல இறைவனும் அருள்புரிக.

சிந்தாதிரிப்பேட்டை, சென்னை. (1-1-13.) } களத்தூர். முனிசாமி.

உ

சிவமயம்

தியாகராஜன்.

(ஓர் இனிய தமிழ் நாவல்.)

திருக்குறள்.

"நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கந் தீயொழுக்கம்
என்று மிடும்பை தரும்."

அத்தியாயம் 1.

புதுமாணாக்கன்.

கஞ்சம் ஜில்லாவில் வைரவபுரமெனப் பெயரிய ஒரு பட்டணம் உண்டு. அப்பட்டணத்தைச் சார்ந்த ஒரூரில் பெயர்பெற்ற பாடசாலையொன்று முன்னொரு காலத்தி லிருந்தது. ஆனால் அவ்வூரின் பெயர் தற்காலம் மாற்றப்பட்டிருக்கிறபடியால் அதைக் கண்டுபிடிக்க முயலுவது கஷ்ட சாத்தியமாக முடியும். அந்தப் பாடசாலையும் இக்காலத்தில் இருக்கிறதோ அல்லது இல்லையோ நாமறியோம். இனிமேல் நிகழும் விஷயங்களில் அந்த ஊரின் விசேஷங்கள் அதிகமாக எழுத நேரிடுவதனால் இதை எழுதவேண்டிய அவசியமுமில்லை.

நம்முடைய கதை மார்கழி மாதத்தில் தொடங்குகிறது. அந்த மாதமும், அதற்கடுத்த தை மாதமும் முன்பனிக் காலமாகையால் அவ்விரு மாதங்களிலும் குளிரால் கஷ்டப்படும் ஜனங்கள் அடுத்து வரும்படியான மாசி மாதத்தை எதிர் பார்த்திருப்பதுண்டு. ஏனப்படி யெதிர் பார்த்திருப்பதென்றால், அம்மாதத்தில் வரும் சிவராத்திரியின்போது குளிர் "சிவசிவா" என்று போய்விடுமென்னும் சித்தாந்தம் பற்றியேயாம். ஆகவே, குளிர்காலமாகிய மார்கழி மாதத்தில் ஒரு நாள் காலையில் ஒரு ஒற்றை மாட்டுவண்டி அவ்வூர்ப் பாடசாலையை நோக்கி வந்து கொண்டிருந்தது. அப்பாடசாலை அவ்வூரிலுள்ள ரயில்வே ஸ்டேஷனிலிருந்து ஊருக்குள்ளேபோகும் ராஜ பாதையின் ஓரத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. வண்டி பாடசாலையண்டை வந்து நின்றதும், அதிலிருந்து பதினைந்து பிராயமுள்ள ஒரு சிறுவன் கீழேயிறங்கினான். பிறகு அவ்வண்டியிலிருந்த தனது பெட்டியையும் எடுத்துக்கொண்டான். உடனே அவ்வண்டி வந்தவழியே திரும்பிப்போய்விட்டது. வந்திறங்கிய சிறுவன் எவ்வாறிருந்தானென்றால், அவனுடைய முகப்பொலிவை ஒருகணம் பார்த்தவர்களும் அதில் கபடமின்மை, அகக்களிப்பு, ஊக்கமுடைமை ஆகிய இவைகள் பதிந்திருக்கின்றன வென்று சொல்லாமலிருக்க மாட்டார்கள். முகமானது மனதிற்குச் சூசகமாகையால், அது முகத்தின்கணுள்ளவற்றை யெல்லாம் எடுத்துக்காட்டும். இதனையே ஆசிரியர் பொய்யாமொழியாரும்,

"அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சங்
கடுத்தது காட்டும் முகம்." என்றார்.

அந்தப்பாடசாலையில் கல்விபயின்றுவந்த மாணவர்களெல்லாம் அவ்விடத்திலேயே உண்டு, வசித்து வந்தார்கள். பாடசாலை காலையில் தொடங்கும் நேரத்திற்கு முன்னும், மாலையில் முடியும் நேரத்திற்குப் பின்னும் அம்மாணவர்கள் சமீபத்திலுள்ள மைதானங்களில் விளையாடியும், உலாவியும், கதைபேசியும், படித்தும் பொழுதுபோக்கிக்கொண்டிருப்பார்கள். ஆகவே, வந்த சிறுவன் வண்டியிலிருந்து இறங்கிய தருணம் பாடசாலை இன்னும் திறக்கப்படவில்லையானபடியால், பாடசாலை மைதானத்தில் விளையாடிக்கொண்டிருந்த மாணவர்கள் அவனைப்பற்றிக் கீழ்க்கண்டவாறு பேசிக்கொண்டார்கள்.

"ரொம்பவும் போக்கிரிப்பையனைப் பிள்ளையாண்டான் போல் தோற்றமளிக்கிறான்" என்றான் ஒருவன். "தனித்தவனாய், அதனால்தான் ஒருவர் துணையுமின்றித் தானே வந்தான்" என்றான் மற்றொருவன்.

இரண்டாவதாக இப்படிச் சொன்னவன் அங்கேயிருந்த எல்லாரைப்பார்க்கிலும் வயதில் மூத்தவன். அவன்பெயர் மாணிக்கம்-வெகு போக்கிரி. மாணவர்களெல்லாம் அவனுக்குப் பயந்து நடப்பதுண்டு. அவன் ஒரு தனவானுடைய மகன். அவனுடைய தகப்பனார் கடகம்ஜில்லாவில் ஒரு பெரிய வியாபாரி. அதனால் மாணிக்கம் டம்பமாய் உண்டு, உடுத்து வீணேகாலங்கழிக்க அவனுக்கு வேண்டிய பொருள்

தகப்பனிடத்திலிருந்து உடனுக்குடனே கிடைத்து வந்தது. அவன் அப்படிச் சொல்லவும், இன்னொருவன்

“தனியாய் வந்தால் தமிழ்ப்பார்க்கும். மாணிக்கம், உன்னுடைய அபிப்பிராயமே அபிப்பிராயம். அவனுடன் வருவதற்குச் சௌகரியப்படாமல் யாரும் வராமலிருந்தாலோ” என்றான். “அடே ராமா, எனக்கென்ன தெரியும்? அம்மாவோடே என் வாயையடக்கு” என்றான் மாணிக்கம்.

உடனே எல்லா மாணவர்களும் ஒன்றும் பேசாமலிருந்துவிட்டார்கள். இதனாலேயே மாணிக்கத்திற்கு பிள்ளைகளெல்லாரும் பயபக்தியாயிருந்தார்களென்பது நன்றாக விளங்கும். பிள்ளைகள்மேல் இவ்வளவு அதிபத்தியம் செலுத்திக்கொண்டு வந்தவன் எவ்வளவோ இருக்கிறபடியினாலே அவர்களையெல்லாம் நல்ல வழியில் கொண்டுவந்திருக்கலாம். ஆனால் நாம் முன்னமே சொல்லியபிரகாரம் மாணிக்கம் ஒரு பெரும் குட்டிப்போக்கிரியாவன். அன்றியும் அவன் தன்னை அலங்கரித்துக்கொள்ளுவதென்னமோ, தன்னைப்பற்றியும், தனது குடும்பத்தைப்பற்றியும் சிலாக்கித்துப் பேசிக்கொள்ளுவதென்னமோ அவைகளிற்றிலொன்றும் சன்மார்க்கமாகச் செய்வதுகிடையாது. அவன் அப்படியானதற்குக் காரணம் அவனுடைய மாதாபிதாக்கள் அவனைச் செல்வமாய் வளர்த்து வந்ததேயாம். தங்களுக்கிருக்கும் செல்வச்செருக்கினால் உலகத்திலுள்ள தாய்தந்தையர்களில்

பலர் தங்களுடைய பிள்ளைகளைச் சீர்திருத்த முயற்சிப்பது கிடையாது. அவர்கள் இஷ்டப்பட்டதை உண்டு அழகாய் உடுத்தி, ஊர் வம்புகளை யெடுத்துக்கட்டிக் கொண்டு வந்தால் போதுமென்று இருந்து விடுவார்கள். அவர்களும், அவர்கள் செல்வமும் இருக்குமளவும் இவ்வா றிருந்துவிட்டால் பிறகு தம்மக்கள் போகிறகதியென்ன? இதைக் கொஞ்சமாகிலும் கவனிப்பார்களேயானால் பெற்றோர்கள் தம்பிள்ளைகளைச் சற்புத்திர மார்க்கத்தில் கொண்டு வராமற் போகமாட்டார்கள். மக்களைப் பெற்றுவிட்டால் மாத்திரம் என்ன பிரயோசனம்? தந்தையும், தாயும் மக்களுக்குச் செய்யவேண்டிய கடமைகள் பலவிருந்தனவாக இருக்கின்றனவே. அவற்றுள், முக்கியமாகத் தந்தை மகனுக்குச் செய்யவேண்டிய கடமை கல்வி பயிற்றுவித்தலேயாம், இது பற்றியன்றோ நாயனாரும்,

" தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல். " என்றார்.

அன்றியும் அவ்வாசிரியர்

" ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய். "

என்று கூறியிருப்பதனால், தாயார் தன் மடியின் கண் வைத்து மகனைக்கொஞ்சி மகிழும் மகிழ்ச்சியை விட அவன் பெரியவனாகிக் கல்வி, கேள்வியுடையவனாய் நல்லொழுக்கத்தில் சிறந்தவனாய் இருக்கின்றா னெனப் பிறர் சொல்லக் கேட்டபோது, முன்பு மகிழ்ந்ததைவிட அதிகமாக மகிழ்வாள் என்று ஏற்படுகி

கிறது. எனவே தாயுந் தந்தையுந் தம் மக்களுக்குக் கல்வி பயிற்றுவித்துச் சன்மார்க்கத்தில் அவர்களைக் கொண்டு செலுத்தவேண்டுமென்பது விளங்குகிறது.

மாணிக்கத்தின் தந்தையாகிய நடராஜ முதலியார் தன்னூரில் தமிழ்ப்பாஷை பயிற்றுவிக்கும் சரியான பாடசாலையில்லாமையால் பல காததூரத்திற் கப்புறமிருக்கும் வையைப்பட்டிற்குத் தன்னுடைய குமாரனைத் தனியாக அனுப்பியிருந்தார். அவர் என்ன தான் செய்வார், மாணிக்கத்தைச் சிறுவயதில் அடக்கி வளர்க்காமையால், இப்பொழுது அவன் கல்வி பயின்று வந்த பாடசாலையில் தான் கெட்டுப் போனதுமல்லாமல் தன்னோடு வாசிக்கும் சகோதரர்களையுங் கெடுக்குங் கருவியாய் ஏற்பட்டிருந்தான்.

புதிதாக வந்த மாணவன் பாடசாலையின் தாழ்வாரத்தில் போடப்பட்டிருந்த ஒரு விசிப்பலகையின் பேரில் உட்கார்ந்துகொண்டு பிரதம உபாத்தியாயரின் வருகையை எதிர்பார்த்திருந்தான். மணி ஒன்பதானதும், பிரதம உபாத்தியாயருள்பட பாடசாலை உபாத்தியார் எல்லோரும் வந்துசேர்ந்தார்கள். உடனே மணியடிக்கப்பட்டுப் பிள்ளைகளெல்லாம் பிரார்த்தனை மண்டபம் போய்ச்சேர்ந்தார்கள். அவ்விடத்தில் அவர்களெல்லோரும் ஒரே குரலில்,

“ அங்கிங் கெனாதபடி யெங்கும் பிரகாசமாய்
ஆனந்த பூர்த்தியாகி
அருளொடு நிறைந்ததெது தன்னருள் வெளிக்குளே
அகிலாண்ட கோடியெல்லாந்

தங்கும்ப டிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த்
தழைத்ததெது மனவாக்கினில்
தட்டாம னின்றதெது சமயகோ டிகளெல்லாந்
தந்தெய்வ மெந்தெய்வமென்
றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவு நின்றதெது
எங்ஙணும் பெருவழக்காய்
யாதினும் வல்லவொரு சித்தாகி யின்பமாய்
என்றைக்கு முள்ளதெதுமேற்
கங்குல்பக லறநின்ற வெல்லையுள தெதுவது
கருத்திற்கி சைந்ததுவே
கண்டனவெ லாமோன வுருவெளிய தாகவுங்
கருதியஞ் சலிசெய்குவாம்.

என்று பாடிக்கடவுளைப் பிரார்த்தித்துத் தங்கள் தங்கள் வகுப்புகளுக்குப் போய்விட்டார்கள். அந்தப் பாடசாலையில் ஆங்கிலமும், தமிழுங் கலந்து கற்றுக் கொடுக்கப்பட்டன. தமிழில் மதசம்பந்தமாயுள்ள புராண, இதிகாசங்களும், நீதி நூல்களும் பாடபுத்தகங்களாக ஏற்படுத்தப் பட்டிருந்தன.

பாடசாலை திறக்கப்பட்ட கொஞ்சநேரத்திற்குப் பின் புதுமாணவன் பிரதம உபாத்தியாயரின் முன்னிலையிற்போய் நின்றான். அவன் கொண்டுவந்திருந்த சிபாரிசுக் கடிதத்தை அவர் படித்துப்பார்த்து, பல விஷயங்களில் அவனைப் பரீட்சித்து அவனுடைய தரத்திற்குத்தகுந்த வகுப்பில் சேர்த்துக்கொண்டார். அந்தப் பாடசாலையில் இருந்தவையெல்லாம் பத்து வகுப்புகளே. அவைகளில் அப்புது மாணவன் 10-ம்

வகுப்பில் சேர்க்கப்பட்டான். அதேவகுப்பில்தான் மேற்சொல்லிய மாணிக்கமும் வாசித்து வந்தான். அன்றைய தினமே பாடசாலைச் சட்டபுத்தகங்களில் "தியாகராஜன்" என்னும் அப்புதுமாணவனுடைய பெயர் பதிவு செய்யப்பட்டது.

அன்று மாலையில் பாடசாலை முடிந்ததும் ஒரு சிறு பையன்—அவன் பெயர் சிவநேசன், தியாகராஜனை யணுகி,

"என்ன தியாகு- புதுஇடமாகையால் ஒருவாறு சோர்ந்திருக்கிறாய்போல் தோன்றுகிறது" என்றான்.

"நீகேட்ட உபசாரணைக்காக நான் மிகவும் நன்றியுள்ளவனாக விருக்கின்றேன். உன்பெயரென்ன? அப்பா" என்று கேட்டான் தியாகராஜன்.

"என் பெயர் சிவநேசன், வீட்டு ஞாபகம் ஒன்றும் வையாதே. ஒரு வருஷத்திற்கு முன்பு இந்தப் பள்ளிக்கூடத்தில் நான் வந்து சேர்ந்தேன். முதலில் எனக்கும் மனது ஒருவாறாயிருந்தது. பிறகு பழகிவிட்டது" என்றான் சிவநேசன்.

தியாகராஜன்— ரொம்ப சந்தோஷம். உன்னுடைய பேச்சு எனக்குப் பெரிதும் தைரியத்தை யூட்டுகிறது. நீ சாயங்காலங்களில் உலாத்தப்போவது வழக்கமானால் என்னோடு வருவாயா? நான் இந்த ஊருக்குப் புதியவனாகையாலும், உலாத்துவது எனக்குப் பிரியமாகையாலும் உன் துணையை நான் வேண்டுகிறேன்.

சிவநேசன்—அதென்ன, அப்படிக் கேட்கிறாய்? எங்களுடைய உபாத்தியாயர் உலாத்துதலினால் ஏற்படும் நன்மைகளைப்பற்றி அநேக தடவைகளில் பெரிய பிரசங்கங்கள் செய்திருக்கிறார். நாங்களும் அதனை யனுசரித்து அதனுடைய பலன்களைப்பற்றிப் பல பெரிய வியாஸங்கள் எழுதியிருக்கிறோமே!

தியாக—(ஆச்சரியத்துடன்) வியாசங்கள் எழுதியிருக்கிறீர்களா! நீங்களும் உபந்நியாஸங்கள் செய்வதுண்டா?

சிவ—அந்த சமாசாரம் உனக்குத் தெரியாதா? ஆம், எப்படித்தெரியும்? இன்றைக்குத்தானே நீ வந்து சேர்ந்தாய். நாங்களெல்லாம் அதாவது, ஆண்பிள்ளைகளும், பெண் பிள்ளைகளும் மாதமிருமுறை சனிக்கிழமைகளில் ஒரு பெருங் கூட்டமாகக் கூடுவோம். அக்கூட்டத்தில் ஏதாவதொரு நன்னெறியைப்பற்றி மாணாக்கரில் ஒருவன் உபந்நியாஸிப்பான். அப்படி உபந்நியாஸஞ்செய்வதற்கும் முறையுண்டு. ஒவ்வொரு மாணாக்கனுக்கும் நாள்ஏற்படுத்தப்படும். அவன் இன்னவிஷயத்தைப்பற்றிப் பிரசங்கிக்கவேண்டுமென்று உபாத்தியாயரால் நிர்ணயிக்கப்படும். குறிப்பிட்ட விஷயத்தைப்பற்றி உபந்நியாஸிக்கப்போகும் மாணவன் முன்னதாக எழுதி உபாத்தியாயருக்குக் காட்டிப்பிறகு குறித்த தினத்தில் உபந்நியாஸிப்பான். நான் வந்து சேர்ந்ததிலிருந்து நேர்த்தியான உபந்நியாஸம் ஒன்றாவது கேட்டது கிடையாது. "கற்பு" "காதல்" "அன்பு" "தெய்வங் கொள்கை" "சன்மார்க்கம்" "கூடாவொழுக்க விலக்கு" "சூது விருப்பேல்" என்

பதாகப் பல விஷயங்கள் இதுவரைக்கும் உபந்நியா ஸிக்கப்பட்டன. அவைகளில் ஒன்றேனும் எனக்கு ருசிக்கவில்லை.

தியாக—அப்பா! பெண்பிள்ளைகளும் படிப்பதாகச் சொன்னீரே, ஒரு பெண் பிள்ளையை யாவது நான் பார்க்கவில்லையே!

சிவ—இன்றையதினம் வெள்ளிக்கிழமையாகையால் இன்றையிலிருந்து மூன்று நாட்களுக்கு அவர்களுக்கு விடுமுறை. பெண்களுக்கெல்லாம் சனியும், ஞாயிறுந்தாம் ஒழிவு. மேலும் நம்மைப்போல் இங்கேயே உண்டிருந்து படிப்பான ஏற்பாடு அவர்களுக்குக் கிடையாது. அருகாமையில் வீடுள்ளவர்கள் தாம் இப்பாடசாலையில் சேர்க்கப்படுவார்கள். அதிருக்கட்டும், தியாகு! உன்னால் உபந்நியாஸஞ் செய்யமுடியுமா?

தியாக—நான் இதுவரையில் செய்தது கிடையாது. ஆனாலும், அதென்ன ஒரு பிரமாதமா? முயற்சியெடுத்துக் கொண்டால் எது தான் முடியாது? தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனாரும்,

“ தெய்வத்தா னாகா தெனினு முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும். ”

என்று சொல்லியிருக்க வில்லையா?

இவ்வளவு பேச்சுக்குமேல் இருவரும் உலாவப் போனார்கள். போகும்பொழுது “ உன்னுடைய ஊரெது ” என்று கேட்டான் சிவநேசன்.

"என்னுடைய ஊர் நகரி. நான் அந்த ஊர் ராஜா" என்றான் தியாகராஜன்.

சிவ—அம்மாடி! நீங்கள் ஒரு ராஜாவா! முதல் முதலில் உங்களைக்கண்டு உங்களுடைய அறிமுகத்தைப்பெற்ற என்னுடைய பாக்கியமே பாக்கியம்.

தியாக—எனக்கு அந்தப்பட்டம் எப்படி வந்ததென்பதை அறிவாயேயானால் நீ இப்பொழுது கொண்ட அவ்வளவு சந்தோஷங்கொள்ள மாட்டாய். என்னுடைய விருத்தாந்தத்தைச் சொல்லுகிறேன் கேள். முதலாவது எனக்குப்புத்தி தெரிந்தபோது நான் ஒரு தர்மப்பாடசாலையில் வாசித்து வந்தேன். மாதா பிதாக்கள் யாரென்பதுந் தெரியாது. கொஞ்சம் பெரிய பையனானதின்மேல் ஒரு மிராசுதார் என்னைக்கொண்டுபோய் வளர்த்து வந்தார். அவர் ரொம்பவும் நல்லவர் என்னுடைய துர் அதிர்ஷ்டத்தினால் எனக்கு 12-வது வயது பூர்த்தியான போது அவர் காலமாய் விட்டார். அவருக்குப்பிறகு அந்தக் குடும்பத்தில் என்னை யாதரிப்பார் யாருமில்லாமற் போகவே நான் நகரிக்குப் போனேன். அங்கே ஒரு சத்திரத்தில் பரிசாரகனாகப் போயமர்ந்தேன்.

சிவ—(அதிக ஆச்சரியத்துடன்) பரிசாரகனாக வா இருந்தாய்!

தியாக—அதனால் என்ன? உண்மையை ஏன் ஒளிக்கவேண்டும்? பொய் சொல்லித்திரிய எனக்குப் பிரியங்கிடையாது.

* "தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்."

என்ற திருக்குறள் கூறுவதும் உண்மையன்றோ?

சிவ—உன்னுடைய தாயார் தகப்பனுரைப் பிறகாகிலும் கண்டு பிடித்தாயா?

தியாக—இல்லை.

சிவ—அப்படியானால் அதிக தொகை சம்பளமாகக் கொடுக்கவேண்டிய இந்த பாடசாலைக்கு எப்படி வந்தாய்?

தியாக—அவைகளெல்லாம் நான்சொல்லுகிறேன்கேள். ஆனால் நான் ஒரு காலத்தில் பரிசாரகனாக விருந்தேனென்பதை யுத்தேசித்து என்னுடைய விருத்தாந்தைக் கேட்கப் பிரியமில்லாம லிருக்கலாம்.

சிவ—அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. உன்னுடைய உண்மையான பெயர்தானென்ன?

தியாக—என் பெயர் உண்மையிலேயே தியாகராஜன்தான். என்னுடைய கதையைக்கேள். யாரோ

---

*(இ-ள்) ஒருவன் தனது நெஞ்சிற்கு அறியப்படுவதாகிய ஒன்றைப் (பிறர் அறியாரென்று) பொய்யாகக் கூறாதிருப்பானாக. பொய்யாகக் கூறுவானாயின் அப் பொய்யை யறிந்த தனது நெஞ்சே (பாவத்துக்குச் சாட்சியாக நின்று) தனக்கு (அப்பாவத்தின் பயனாகிய) துன்பத்தை அடைவிக்கும்.

என்னைத் தருமபாடசாலைக்குக் கொண்டுவந்து விட்டுப் போனார்களாம். அப்பொழுது என்னுடைய உடையில் "தியாகராஜன்" என்று பெயரெழுதிய ஒரு துண்டுகடிதம் தைக்கப்பட்டிருந்ததாம். என்னுடைய தாய் தந்தையர்கள் என்னை அநாதையாய் விட்டதற்குக் காரணம் எனக்குப் புலப்படவில்லை. நான் தர்ம பாடசாலையை விட்டு மிராசுதாரின் சவரட்சணையி லிருந்துகொண்டு படித்துவந்தபொழுது என்னுடைய தோழர்கள் யாராகிலும் எனது விருத்தாந்தத்தைக் கேட்டால் "நான் நகரி ராஜா" வென்றும், கலகதியால் என்னுடைய தகப்பனார் அந்நாட்டைவிட்டு ஓடும்படி நேரிட்டதனால் எனக்கு அந்த உன்னத பதவி கிடைக்காமல் போய்விட்டதென்றும் சொல்லி வருவது வழக்கம். என்னுடைய தோழர்களெல்லாம் நான் சொல்லிவந்தவற்றை நிஜமென்றே நம்பி என்னை "நகரி ராஜா" "நகரி ராஜா" வென்று அழைத்து வந்தார்கள். நான் முன்னமே சொல்லிய வண்ணம் மிராசுதார் இறந்த மறுநாளே நான் அவருடைய வீட்டைவிட்டு வெளிப்பட்டு நகரிக்குப் போய் அங்கே ஒரு சத்திரத்தில் பரிசாரகத் தொழிலமர்ந்தேன். எனக்குச் சமையல் நேர்த்தியாகச் செய்யத் தெரியும். அந்தத்தொழிலி லிருந்தபொழுது ஒருநாள் அந்தச் சத்திரத்தில் சாப்பிடுவதற்கு ஒரு பெரிய மனுஷர் வந்திருந்தார். அவரைப் பார்த்ததும் அவர்மேல் எனக்கு ஓர்வித பிரியமேற்பட்டது. அதனால் தக்க மரியாதையோடு உபசரித்து அவருக்கு அன்னமிட்டேன். போஜனமானதின்மேல் "சேர

வேண்டிய தொகை எவ்வளவு?" என்றுகேட்டார். நான் ஐந்தணாவென்றேன். "சாப்பாட்டிற்கு ஐந்தணா, நீ செய்த உபசாரணைக்கு எவ்வளவு கொடுப்பது?" என்று கேட்டார். உபசாரணைக்கு ஒன்றும் பெறுவதில்லை என்று புன்னகையோடு சொன்னேன். பிறகு 'உன் பெயரென்ன?' என்று கேட்டார். என் பெயர் "நகரி ராஜா" வென்றேன். தன்னுடைய கண்களை நன்றாய் விழித்துப் பார்த்து, 'உன்னுடைய நாமதேயந்தாமென்ன?' என்றுகேட்டார். தியாகராஜனென்று சொன்னேன். 'உன்னுடைய தகப்பனார் யார்? என்று கேட்டார்.' என்னுடைய தகப்பனாரை நான் பார்த்தறியேனென்றும், எனக்குப் புத்தியறியும் பருவத்தில் தரும பாடசாலையிலிருக்கத் தெரிந்தது என்றும் சொன்னேன். பிறகு மிராசுதார் அழைத்துப்போன சமாச்சாரம், அவர் இறந்ததன்மேல் ஓடிவந்து அந்தச் சத்திரத்தை யடைந்தது ஆகச் சர்வமும் சொன்னேன். நான் இவ்வளவு சொல்லிமுடித்ததும், "தியாகராஜா உன்னை இவ்வளவு காலமாகத் தேடித் திரிந்து கொண்டிருந்தேனே" என்றார். என்னையா தேடினீர்கள்? என்ன காரணத்திற்காக? என்று கேட்டேன். 'நான் ஒரு வக்கீல்' என்றார், நல்லது வக்கீலாகவிருந்தால் இருக்கட்டும்; என்னை ஏன் தேடித் திரிந்தீர்கள்? என்று கேட்டேன். "இவ்வளவு காலமாய் உன்னைக் கண்டு பிடிப்பதற்காக நான் செலவு செய்த பணத்திற்குக் கணக்கே கிடையாது. அவைகளையெல்லாம் நீயெனக்குக்கட்டித்தரவேண்டும்" என்றார். நீங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லையே! யென்றேன். 'உனக்கு விளங்காமலிருக்கலாம். தெய்வா

நீனமாய் உன்னை இன்று கண்டுபிடித்தேன். இல்லா விட்டால், இது வரையில் செலவு செய்ததல்லாமலும் பத்திரிகைகளிலும், தனித் தனியாகவும், உன்னைப் பற்றி விளம்பரஞ் செய்ய இன்னுஞ் செலவு செய்ய வேண்டியிருக்கும்' என்றார். எனக்குச் சந்தேகம் ஓர் பக்கத்திலும், திகில் ஓர் பக்கத்திலும் உண்டாயின. அதன் பிறகு அந்த வக்கீல் "தியாகராஜா, மிராசுதார் ஐயாக்கண்ணு முதலியாரின் மைத்துனன் நான். அவர் இறந்துபோம்பொழுது அவருடைய ஆஸ்திக்கு என்னைத்தான் டிரஸ்டி (ஒப்படையாளி)யாக ஏற்படுத்தினர். அவர் எழுதிவைத்துப் போன மரண சாஸனத்தைத் திறந்து பார்க்கையில், அதில் வருஷத்திற்கு 720 ரூபாய் வரும்படி தரக்கூடிய நிலங்களை உன்னுடைய பாதுகாப்பிற்காக உன்னுடைய பெயர்வழிக்கு எழுதிவைத்திருந்தார். இந்த தொகை முக்கியமாய் நீ கல்வி பயிலுவதற்கே யென்றும், அஃதும் உன்னுடைய 21-ம் பிராயம் வரைக்குந்தான் கிடைக்கும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது." என்று சொன்னர்.

இவைகளைக் கேட்டதும் நானடைந்த ஆநந்தத்திற்கு எல்லையேயில்லை. ஏனென்றால், எனக்குப் படிப்பில் அதிக ஆசை யிருந்தது. கையில் திரவியம் ஒன்றுமில்லாக் குறையால் பரிசாரகத் தொழிலில் அமர்ந்திருந்தபோதிலும் இரவில் என்னுடைய வேலையெல்லாம் முடிந்ததின்மேல் ஒருமணி நேரமாவது விளக்கண்டை உட்கார்ந்து படிக்காமலிருக்கிறதில்லை. அப்படி யிருந்தவனுக்குப் படிப்பதற்கு ஏது

வாகிய பொருள் கிடைத்தபோது எவ்வளவு சந்தோஷ மேற்பட்டிருக்குமென்று சிவநேசா, நீயே யூகித்துக்கொள்ளலாம். சந்தோஷ மிகுதியால் அழவாரம்பித்துவிட்டேன். உடனே வக்கீல் ஏன் அழுகிறாய்? அப்பா, நீ சொல்லவேண்டியவர்களுக்குச் சொல்லிவிட்டு உடனே புறப்படு என்று சொன்னார். அப்படியே உத்தரவு பெற்றுக்கொண்டு அவருடன் பிரயாணப்பட்டுச் சென்றேன். அவருடைய ஆபிஸுக்குப் போனதும், தன்னுடைய இருப்புப்பெட்டியிலிருந்து 3-வருஷத்திய வரும்படியாகிய 2160-ரூபாயை எனக்குக் காண்பித்து என்னுடைய பெயர் வழிக்கு அதை ஒரு பாங்கிலிட்டு அதில் கொஞ்சந் தொகையைக் கொண்டு துணி மணிகளை வாங்கிக் கொடுத்து அவருடைய பாது காப்பிலேயே ஆறு மாதகாலம் வைத்திருந்தார். பிறகு இந்தப் பாடசாலைக்குச் சிபாரிசுக் கடிதங் கொடுத்து அனுப்பி வைத்தார்.

சிவ— தியாகு, என்னிடத்தில் உன்னுடைய விருத்தாந்தத்தை உள்ளபடியே சொன்னதற்கு நான் மிகவுஞ் சந்தோஷப்படுகிறேன். ஆனால் என்னிடத்தில் சொல்லிய மாதிரி இன்னும் மற்றவர்களிடத்தில் சொல்லாதே. முக்கியமாக மாணிக்கம் என்கிற பையனிருக்கிறானே, அவனிடத்தில் அதிக பழக்கமும் வைத்துக்கொள்ளாதே. உன்னுடைய விருத்தாந்தத்தையுஞ் சொல்லாதே. பரிசாரகனாய் ஒரு காலத்தில் இருந்திருந்தால் அதனால் என்ன இழிவு. அதைப்பற்றி அசங்கியம் கொள்ளுவேனென்று நீ ஒருக்காலும் நினைக்காதே.

தியாக—நான் சொல்லாவிட்டாலும், என்னுடைய விருத்தாந்தத்தை என்றைக்காகிலும் ஒரு நாளைக்குத் தெரிந்துகொள்ளாமலா போவார்கள்?

சிவ—நீ சொல்லாதிருந்தால் எப்படித்தெரிந்து கொள்வார்கள்? உன்னை அவர்கள் "நகரி ராஜ" னென்றே தெரிந்துகொள்ளுவது நல்லது. உன்றல் யாதொரு ஆட்சேபனையு மில்லாவிட்டால் அந்தப் பெயரைக்கொண்டே நான் மற்றப் பிள்ளைகள் எதிரில் உன்னை யழைக்கிறேன். இந்தப் பாடசாலையில் படிக்கிறவர்களெல்லாம் பெரிய வியாபாரிகளுடைய பிள்ளைகள். நானே ஒரு சாதாரண குடியானவன் பிள்ளை. அதனால் என்னை எல்லோரும் இகழ்ச்சி பண்ணுகிறதுண்டு. உன்னை நான் "நகரிராஜா" என்றே கூப்பிடுவேன். யாராகிலும் அப்படிக் கூப்பிடுவதற்குக் காரணங்கேட்கவந்தால் நான் ஏதாவது ஒரு கதையை ஜோடித்துச் சொல்லிவிடுவேன்.

தியாக—சரி, உன்னுடைய இஷ்டப் பிரகாரமே செய். ஆனல், உண்மை என்றைக்காகிலும் வெளிவராமல் போகாது. அப்பொழுது எல்லோருங் கை கொட்டிச் சிரிப்பார்களே! பரவா யில்லை.

என்று இவ்வாறு இருவரும் சம்பாஷணை செய்து கொண்டே பாடசாலை வந்து சேர்ந்தார்கள்.

அத்தியாயம் - 2.

மாணிக்கமும், சிவநேசனும்.

மேல் அத்தியாயத்தில் நடந்த சம்பாஷணை முடிந்து இருவரும் தன் தன்னுடைய சொந்த அறைக்குப் போவதற்குமுன் சிவநேசன், தியாகராஜனிடத்திலிருந்து ஓர் வாக்குத் தத்தம் வாங்கிக்கொண்டான். அவ்வாக்குத்தத்தமாவது:—எப்பொழுதாவது தன்னுடைய சொந்த விருத்தாந்தத்தை விவரிக்கவேண்டியது தியாகராஜனுக்கு நேரிடுமேயானால் தன்னை முதலில் அது விஷயத்தைப்பற்றிக் கலந்து பேசாமல் செய்யப்படாதென்றும், மாணிக்கம் என்னும் பையனுடன் சிநேகம் வைத்துக் கொள்ளக் கூடாதென்றுமே.

தியாகராஜனைப் பார்த்ததிலிருந்து அவனிடத்தில் மாணிக்கம் விரோதம் பாராட்டத் தலைப்பட்டான். காரணமில்லாமலே இவ்விதம் ஏன் விரோதம் பாராட்டவேண்டுமென்றால் அதைக் குறித்து எழுதி விஸ்தரிக்க நம்மால் முடியாது. 'நட்புந் தயையுங் கொடையும் பிறவிக்குணம்' என்றாள் ஔவை பிராட்டி. எதனால் நட்பு பிறவிக்குணமென்று ஏற்படுகிறதோ அதனால் அந்நட்புக்கு எதிர்மறையாகிய விரோதமும் பிறவிக்குணமென்றே ஏற்படவேண்டும். அப்படி யில்லாமலா, நாம் சில சமயம் சிலரைக் கண்ட போது வெகுநாள் பழகியவர்களைப் போல அத்தியந்த பிரியங்கொள்ளுகிறோம். இவ்வாறே வேறு சில

ரைக் கண்டபோது அவர்களை அதற்குமுன் பாராம லிருந்தும்வெறுப்படைகிறோம். இப்பொழுது மாணிக்கமும் தியாகராஜனை இதற்கு முன் பார்த்தறியாதவனாயினும் அவனைக் கண்டதும் அவன்பேரில் வெறுப்புற்றுக் காணவும் மனஞ்சகியாதவனா யிருந்தான். அன்றியும், மாணிக்கத்தின் சுபாவம் எப்படிப்பட்டதென்று முன் கூறப்பட்டுள்ள விஷயங்களாலேயே நன்றாக விளங்குவதனால் அவன் தியாகராஜன்பேரில் கொண்ட விரோதம் ஒரு ஆச்சரியமாகத் தோன்றாது.

தியாகராஜன் பாடசாலையைச் சேர்ந்தது முதல் சில நாளாக அவனோடு சிவநேசன் நெருங்கிப் பழகி வந்தானதையால் அவன் பேரிலும் மாணிக்கம் வெறுப்படையலானான். தியாகராஜன் அந்தப் பள்ளிக்கூடம் வந்து சேர்ந்து ஒருவாரமிருக்கும். அவனுடைய பாடத்தைப் படிப்பதும், காலை, மாலையில் வெளியே உலாவப் போவதும், மற்ற சமயங்களில் தன்னுடைய அறையில் இருந்துகொண்டு பக்தி நூல்களையும், நீதி நூல்களையும் ஓதியுணர்வதுந்தவிர்த்து அவன் வேறு காரியங்களிற் பிரவேசிக்கிறதில்லை.

ஒருநாள் மாலை மணி 6 இருக்கும். அப்பொழுது மாணிக்கம் நாலைந்து பிள்ளைகள் தன்னைச்சூழப் பள்ளிக்கூடத்திற்கு அருகாமையிலுள்ள மைதானத்தில் உட்கார்ந்து பாடிக்கொண்டிருந்தான். அவன் பாடியதென்னவென்று கேட்பீர்களோ? அது திருப்புகழ். வேறு பாடல்களைப் பாடாமல் அவன் திருப்

புகழைப் பாடியதற்குக் காரணம், அதில் ஸ்திர வருணனைகள் அதிகமாக வருவதனாலேயாம். திருப்புகழைப் படித்து வந்தவன் அதனுடைய உண்மையான கருத்தையறிந்து பாடி புணர்ந்து வருவானேயானால் அது அவனுக்குப் படிப்படியே நற்குணத்தை யுண்டாக்கி மேலான பயனையு முண்டாக்கும். ஆனால் மாணிக்கங் கொண்ட விபரீத கருத்தின்படி அவன் அதனைக் கையாண்டு வருவானேயானால் அதிற் சொல்லப்பட்டிருக்கும் வருணனைகளிற் சிக்கிக் கடைசியாக அவன் நாசமடைய வேண்டியதுதான்.

புத்தகங்களோடு பழகுவது சாமானிய காரியமல்ல. இன்னின்ன புத்தகம் இன்னின்ன வயதுக் குரித்தானதென்று எல்லை ஏற்பட்டிருக்கின்றது. அந்தப் பருவ நிலைமையைத் தெரியாமல் கையாளுவது பாஷாணத்தின் குணத்தைத் தெரியாத ஒருவன் அதை யருந்தி அதனால் நேரிடுங் கதியை யடைவதற் குச் சமானமாகும். இதை யனுசரித்தே நம் பெற்றோர்களும், குருக்களாகிய பெரியோர்களும் பிள்ளைகளுடைய வயதிற்குத் தகுந்தமாதிரியாகப் பாட புத்தகங்களை அமைக்கக் கற்பித்து வருகிறார்கள். என்னதான் மாணிக்கத்திற்கு வயது இப்பொழுது 17 ஆகிறதென்றாலும், திருப்புகழைக் கையாண்டு அதனுடைய சாராம்சத்தை உள்ளபடி யுணருந் தன்மை யவனிடத்தில் அமைந்திருக்கவில்லை.

நிற்க மேலே குறித்த தினம் சாயங்காலம் மாணிக்கம் பாடிக்கொண்டிருந்த பாடலை வாசகர்கள் அறியும் வண்ணம் கீழே வரைவோம்.

மலரளி கொண்டைச் சொருக்கிலே யவள்
சொலுமொழி யின்பச் செருக்கிலே கொடு
மையுமடர் நெஞ்சத் திருக்கிலே முக மதியாலே

மருவு நிதம்பத் தடத்திலே நிறை
பரிமள கொங்கைக் குடத்திலே மிக
வலியவும் வந்தோத் திடத்திலே விழி வலையாலே

நிலவெழி யங்கக் குலுக்கிலே யெழில்
வளைபுனை செங்கைக் கிலுக்கிலே கன
நிதிபறி யந்தப் பிலுக்கிலே செயு மொயிலாலே

நிதமிய லுந்தூர்க் குணத்திலே பர
வசமுட னன்புற் றிணக்கிலே யொரு
நிமிஷமி ணங்கிக் கணத்திலே வெகு மதிகேடாய்

அலையநி னைந்துற் பனத்திலே யநு
தினமிகு மேன்சொப் பனத்திலே வர
வறிவும ழிந்தற் பனத்திலே நித முழலுவேனோ

வசடனை வஞ்சச் சமர்த்தனு கிய
கசடனை யுன்சிற் கடைக்கணு டியு [ராய்
மலர்கொடு நின்பொற் பதத்தையே தொழ வருமா

பலபல பைம்பொற் பதக்கமா ரமு
மடிமைசொ லுஞ்சொற் றமிழ்ப்பனீ ரொடு
பரிமள மிஞ்சக் கடப்ப மாலையு மணிவோனே

பதியினின் மங்கைக் கதித்தமா மலை
பொடுசிவ குன்றிற் றரித்துவாழ் வுயர்
பழநியி லின்புற் றிருக்கும்வா னவர் பெருமாளே.

என்பதேயாம்.

இப்பாடலைப் பாடி, பக்கத்திலிருந்தவனைப் பார்த்து அடே ராமு, என்ன அருமையான வருணனைகள் பார்த்தாயா? மலரளி கொண்டையாம், முகமதியாம், மருவு திதம்பத் தடமாம், நிறை பரிமள கொங்கைக் குடமாம், நிலைவறி அங்கக் குலக்காம் எழில் வளையுனை செங்கைக் கிலக்காம், அடடா! அருணகிரிநாதர் அந்த விஷயத்தில் மகா அநுபவியாயிற்றே! மில்டன், ஷெரிடன், அவன், இவனென்று எவ்வளவு ஆங்கில கவிகள் கவி யியற்றி யிருக்கிறார்கள்? ஸ்திரீ வருணனையில் நம்முடைய அருணகிரிநாதரைப்போல் யார்வருணித்திருக்கிறார்கள்? என்று பிரயோசன மில்லாத விஷயத்தைப்பற்றி மாணிக்கம் பேசினனே யொழிய அதில் கொள்ளவேண்டிய பாகத்தை அறவே மறந்தான்.

மாணிக்கம் கடை மாணாக்க ரையைால் குணத்தைக் கைவிட்டுக் குற்றத்தை மாத்திரங் கைக்கொண்டான். கடை மாணாக்கர்களுக்குள்ள இலட்சணமெல்லாம் நம்முடைய மாணிக்கத்தினிடத்தில் அமைந்திருந்தன. நன்னூலில், கடை மாணாக்கர்கள் இல்லிக்குடத்திற்கும், ஆட்டிற்கும், எருமைக்கும், பன்றைக்கும் ஒப்பிடப்பட் டிருக்கின்றார்க ளல்லவா? மேற்சொன்ன இல்லிக்குடம் முதலியவற்றின் தன்மைகளெல்லாம் மாணிக்கத்தின் விஷயத்தில் அப்படியே பொருந்தி யிருந்தன. எவ்வாறெனின்:—
உபாத்தியாயர் கற்றுக்கொடுப்பதை உடனுக்குடனே

மறந்து விடுவதில் * இல்லிக் குடத்தையும், ஒரு உபாத்தியாயரிடத்திலாவது பொருந்திப் பாடங் கற்றுக் கொள்ளாமல் தன்னுடைய அறைக்கு வந்து பாடஞ் சொல்லிக் கொடுப்பதற்காக மாதம் ஒரு உபாத்தியாயரை நியமித்துக்கொள்வதில் ‡ ஆட்டையும், உபாத்தியாயரைத் தொந்தரை செய்து பாடங் கேட்பதில் ○ எருமையையும், கற்கவேண்டிய அரும்பொருளைக் கற்காமல் கற்கப்படாத வீண் விஷயங்களைக் கற்பதில் ? பன்றாடையையும் அவன் ஒத்திருந்தான்.

மேலே எழுதிய அவனுடைய திருப்புகழ் ஆராய்ச்சியினிடமிருந்தே அவன் பன்னாடையையு மொத்திருக்கிறானென்பது ஸ்திரமாக விளங்குகிறதல்லவா?

---

* இல்லிக்குடம் = ஓட்டைக்குடம். இது மொண்ட நீரை யெல்லாங் கீழே ஒழுக விட்டுவிடும்.

‡ ஆடு—இது நிரம்பத் தழை யிருந்தாலும் ஓரிடத்திலாவது நிலைக்காமல் பலவிடங்களிலும் மேய்ந்து திரியும்.

○ எருமை—இது குளம் முதலியவற்றிலுள்ள நீரைக் கலக்கிச் சேற்றொடு அந்நீரை யருந்தும்.

? பன்னாடை—இது தன்பால் வடிகட்டிய மது முதலானவற்றை விட்டுக் கிருமி அழுக்கு ஆகிய இவைகளைப் பற்றிக்கொள்ளும்.

இவ்வாறே கடைமாணாக்கர்க ளிருப்பதனால் இவர்களை அவ்வில்லிக்குடம் முதலான வைகளோடு ஒப்பிட்டுரைப்பது நூல்களின் வழக்கு.

கிற்க, மாணிக்கம் திருப்புகழைப் பாடி அத னுட்பொருள்களை (தன்னுடைய சொந்த வழியில்) எடுத்துக் காட்டிக்கொண் டிருக்கும்போது சிவ நேசன் அவனிடம் போனான். அவனைப் பார்த்த மாணிக்கம் 'என்ன, சிவநேசன், புதுப்பையனுக்கு வால் பிடித்துக்கொண்டிருக்கிறாய்?' என்றான்.

சிவநேசன்—அவன் யார் தெரியுமா? "நகரி ராஜா"

மாணிக்கம்—நகரி ராஜாவென்று உனக்கு யார் சொன்னது? நகரிக்கு ராஜாவே கிடையாதே!

சிவ—அவனுக்குத் தெரிந்த ஒரு ஆளை நான் கேட்டதில், அவன் நகரி ராஜாவென்றே சொன்னான்.

மாணி—ராஜாவிற்குள்ள குணம் அவனிடத்தில் ஒன்றுமில்லையே?

சிவ—ஏனில்லாமல்? ஐஸ்வரியத்தில் குறைவா? ரூபத்தில் குறைவா? குணத்தில் குறைவா? அவனுக்கு எதிலுமே குறைவில்லை.

மாணி—போடா அடி முட்டாள். நீ எப் பொழுதும் உன்னுடைய முட்டாள் தனத்தையே காட்டுகிறாய்.

சிவ—நீ என்னை முட்டாளென்று அழைத்தால் பரவாயில்லை. நகரிராஜன் விஷயத்தில் ஜாக்கிரதையா யிரு!

என்று இருவருக்கும் விவாதமேற்படவே சிவநேசன் மாணிக்கத்தை விட்டு நீங்கி மைதானத்தினின்று புறப்பட்டுத் தன்னுடைய அறைக்குப் போய்விட்டான்.

மறுநாள் காலை தியாகராஜனைச் சிவநேசன் சந்தித்து முந்திய நாள் சாயந்திரம் தனக்கும், மாணிக்கத்திற்கும் நடந்த சம்பாஷணையைத் தெரிவித்தான். அதைக் கேட்ட தியாகராஜன், "சிவநேசா, நான் சொன்னதைக் கேட்கவில்லையே. என்றைக்காகிலும் என்னுடைய உண்மையான நிலைமை வெளிவராமற் போகாது. ஒரு பொய்யை மறைக்க எத்தனை பொய்யை நீ சொல்லவேண்டியதாயிற்று பார்த்தாயா?" என்று சொன்னான்.

அத்தியாயம் 3.

தியாகராஜனுடைய கல்வித்திறம்.

இப்பொழுது தியாகராஜன் பள்ளிக்கூடம் வந்து சேர்ந்து ஒருமாத மிருக்கும். அவனுடைய புத்தி சாதுரியத்தைக்கண்டு அவனை மெச்சாத உபாத்தியாயராவது மாணவனாவது கிடையாது. பெண் பிள்ளைகளெல்லாமும், அவன்மேல் அதிகப் பிரியம் வைக்கத் தொடங்கினார்கள். அப்பெண்களில் முக்கியமான ஓர் பெண் இருந்தாள். அந்தப் பெண்ணின் பெயர்

வடிவுடையம்மை வயது பன்னிரண்டேயாயினும் அதற்குமேல் ஒன்றிரண்டு அதிகமிருக்கலாமென்று சொல்லும்படியாய் வளர்ந்திருந்தாள். அவளைத் தனது பௌத்திரியைப்போல் யாவரும் ஒரு அழ சமைந்த பெண்ணென்று சொல்லுவரேயொழிய அதற்குமேல் ஒன்றுஞ் சொல்லமுடியாது. ஏனென்ருல், பெண் பிள்ளைகளுக்கெல்லாம் மன்மதன் திறையிட்டதின் மேல்தான் உருவ அமைப்பு, சோபை முதலியவைகள் ஏற்படும். ஆகவே, வடிவுடைய கனைக்கு நாயகியாக அமைந்துள்ள இப் பெண்மணியின் அங்க லட்சணங்களைப்பற்றிக் காலம் நேரும் போது எழுதுவோம். இப்பொழுது அவளுடைய பெற்றோரைப்பற்றி மட்டுந் தெரிவித்துவிட்டுப் பிறகு மேல் நடந்த விஷயங்களை எழுதுவோம்.

அவளுடைய தகப்பனார் அம்பலவாண முதலியார் என்பவர். அவர் ஒரு தனவந்தர். இவ்வைரவபுரத்திலும், கடலூரிலும், சென்னையிலும் அவருக்குப் பெரிய வியாபார ஸ்தாபனங்களுண்டு. தன்னுடைய முன்னோர்கள் வைரவபுரத்திலேயே தங்களுடைய காலங்களை யெல்லாம் கழித்து வந்தார்களானபடியிஞல் அவருக்குச் சொந்த வீடுகளும், நிலங்களும் அவ்வூரிலேயே யிருந்தன. ஆகையினால் தன்னுடைய வியாபாரம் பல ஊர்களில் நடந்து வந்தபோதிலும் அடிக்கடி அவ்வவ் விடங்களுக்குப் போய் மேல் பார்வை பார்த்துவிட்டு அம்பலவாண முதலியார் வைரவபுரத்தையே தனக்கு வாச ஸ்தானமாகக் கொண்டிருந்தார்.

நம்முடைய கதை நடந்த காலத்தில் பெண்கல்வி அதிக விருத்தியடைந்திருந்தது. தற்காலத்தி லிருக்கும் பலவித அசம்பாவிதமான தடைகள் அக்காலத்தி லிருக்கவில்லை. ஆனால், ஒவ்வொரு காரியத்திற்கும் மறைவும், தோற்றமும் இருப்பனபோல் இப்பெண் கல்விக்கும் இக்காலத்தில் மறைவுஏற்பட்டிருக்கிறது. இருந்தாலும் சீக்கிரத்தில் தோற்றத்திற்கு வருமென்பதில் சந்தேகமில்லை. கல்வியானது ஆண், பெண் என்னும் இருபாலார்க்கும் பொதுவானது. இதனாலேயே,

"குஞ்சி யழகுங் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்ச ளழகு மழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யா மென்னு நடுவு நிலைமையாற்
கல்வி யழகே யழகு." என்று

நாலடியார் கூறுகின்றது. இப்பாடலில் குஞ்சி (ஆண் மயிர் அல்லது குடுமி) அழகு என்றது ஆண் மக்களையும், தானைக் கோட்டழகு (ஆடையின் கரை யழகு) என்றது ஆண், பெண், இருபாலாரையும், மஞ்சள் அழகு என்றது பெண் மக்களையுங் குறிக்கிறது. இதனால் ஆண், பெண் ஆகிய இரு திறத்தினருக்குங் கல்வியே அழகென்பது சித்திக்கது. இப்படியிருக்க ஆண் பிள்ளைகளுக்கு மாத்திரங் கல்வி கற்குஞ் சுதந்தரத்தைக்கொடுத்துப்பெண்பிள்ளைகளுக்குக் கொடுக்காமலிருப்பது எது போன்றதென்றால், மக்கள் இரு கண்களைப் பெற்றும் ஒரு கண்ணை உபயோகப் படுத்தாமல் மூடிக்கொண்டு திரிவதற்குச் சமானமாகும். அன்றியும் ஔவையார், தமிழறியும் பெருமாள், வர

துன்மராமபாண்டியன் மனைவி, ஏகம்பவாணன் மனைவி முதலான பெண் மணிகளுடைய சரித்திரங்களாலும் அவர்கள் எழுதியுள்ள பாடல்களாலும், அவர்கள் கல்வி கற்றுஞ் சுதந்தரத்தைத் தாராளமாகப் பெற்றிருந்தார்களென் றேற்படுகிறதல்லவா?

நம்முடைய கதை நடக்குங் காலத்தில், ஆண்கள் படிக்கலாம், பெண்கள் படிக்கலாகாது என்பதாகத் தற்காலத்தி லுள்ளதைப்போன்ற வித்தியாஸமில்லா மற்படி ஆண், பெண் ஆகிய இருதரத்தினர்க்கும் ஒருங்கே கல்வி கற்பிக்கப்பட்டது. அஃதன்றியும் தற்காலத்தவர்கள் கவனிப்பதுபோல் வயதைக் கவனித்துப் பருவகால முற்றுந் தருணத்தில் பெண்களைப் பள்ளிக்கூடத்திற்குப் போகாமல் நிறுத்தும் வழக்கமுங் கிடையாது. தற்காலத்தில் அப்படி நிறுத்துவதன் பல காரணங்களில் முக்கியமான தொன்றுண்டு. அது பெண்கள் தங்களுடைய கற்பின் நிலைமையைக் கெடுத்துக்கொள்ளுவார்களென்னும் பயமே. ஐயோ! என்ன பரிதாபம்! ஒரு பெண் தன்னுடைய கற்பைக் காப்பாற்றிக்கொள்ளத் தன்னுடைய சொந்த மனவுறுதி நிலைமையை உபயோகிப்பதைத் தவிர பிற விஷயம் என்ன பயன் செய்யும்?

* "சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர்
நிறை காக்குங் காப்பே தலை."

என்று திருவள்ளுவர் கூறியதும் இதுபற்றியன்றோ? மேலும் பெண்களுக்குப் பூரணமான கல்வியைக் கற்குஞ் சுதந்தரத்தைக் கொடுப்போமேயானால் அவர்கள்

---

* இ-ள், (பெண்களைக்) காவலிலே வைத்து (த்தலைவர்) காக்கும்படியான காவல் என்ன பயனைத் தரும்? பெண்கள் தங்களுடைய கற்பினாலே தங்களைக் காத்துக் கொள்ளுங் காவலே தலைமையான காவல்.

அதன் வழியாகப்பெற்ற தங்கள் சொந்த அறிவுவிர்த்தியைக்கொண்டே தங்களுடைய கற்பைக் காப்பாற்றிக்கொள்ளுவார்கள். நாளுக்கு நாள் நாகரீகம் அதிகரிக்கவும், ஒருபக்கம் மௌடீகம் அதிகரித்து அதனல் நம்முடைய பெண்களின் சுதந்திரம் கேடடைவது மேலுந் துக்கிக்கத் தக்க விஷயமே. ஆயினும், தற்காலம் இப்படி யிருந்தபோதிலும், எல்லாம்வல்ல முழுமுதற் கடவுளின் கிருபையால் யாவும் சீக்கிரத்தில் சீரடையும் என்பது எமது துணிபு.

மேல் கூறிய கிர்ப்பந்தங்க ளின்றிப் பருவமடைந்த மங்கைகளும் அந்தப் பாடசாலையில் கல்வி பயின்று வந்தார்கள். அம்பலவாண முதலியார் மெத்தப் படித்தவர். ஆகையினல் தன்னுடைய பெண்ணகிய வடிவுடை யம்மைக்குப் பள்ளிக்கூடத்தில் கற்பிக்கும் பாடங்களே யல்லாமலும், தன் வீட்டிலும் ஓர் உபாத்தியாயரை யமர்த்தி மத சம்பந்தமான பல விஷயங்களைக் கற்பிக்க ஏற்பாடு செய்துவந்தார். அஃதன்றியும் சங்கீதமுங் கற்பித்து வந்தார். அம்பலவாண முதலியாருக்குப் புத்திரனில்லாமல் வடிவுடையம்மை ஏக புத்திரியா யிருந்ததால் இவ்வாறெல்லாம் செய்து வந்தாரென்று அவ்வூர் ஜனங்கள் சொல்லிக்கொள்வ துண்டு. அஃது எதுவாயினு மாகட்டும், அவர் செய்த ஏற்பாட்டை யோசிக்க நமக்குச் சந்தோஷமே விளையும்.

நிற்க, தியாகராஜன் அந்தப் பள்ளியில் சேர்ந்து மூன்று மாதம் பொறுத்து ஒரு சனிக்கிழமை 'அறஞ்செய்தல்' என்னும் விஷயமாக ஓர் உபந்நி

யாஸஞ் செய்யும்படி அவனுக்குப் பிரதம உபாத்தியாயரால் கட்டளை யிடப்பட்டது. குறித்த தினத்தில் பாடசாலை பகல் ஒன்றரை மணிக்குத் திறக்கப்பட்டு இரண்டு மணிக்கெல்லாம் உபாத்தியாயர்களும், பிள்ளைகளும், பெண்களும் வந்து சேர்ந்தார்கள். உடனே தியாகராஜன் தனக்கிடப்பட்டிருந்த ஆசனத்திற்குச் சென்று அங்கிருந்து சபையோர்களைப் பார்த்துக் கீழ்க்கண்டவண்ணம் உபந்நியாஸிக்கத் தொடங்கினான்.

"இன்றையதினம் 'அறஞ்செய்தல்' என்னும் அரிய விஷயத்தை உபந்நியாஸிக்கும்படிச் சிறு அறிவுடையோனாகிய எனக்குக் கட்டளையிட்டிருப்பதை எதற்கொப்பிடலா மென்று எனக்கே புலப்படவில்லை. குருவியின் தலையில் பனங்காயைக் கட்டினதற்குச் சமானமென்று ஒரு வேளை சொல்லலாம். உபந்நியாஸஞ் செய்யும்படியான வழியைச் சற்றுமே யறியாத நான் என் பங்குக்கு ஏற்படுத்தப்பட்ட விஷயத்தை இன்றைக்கு உங்களுடைய பக்கபலத்தைத் துணையாகக் கொண்டே பேச முன் வந்திருக்கிறேன். நான் செய்யப் போகும் உபந்நியாஸத்தில் குற்றம், குறைகள் மலிந்து கிடக்கும். அவைகளைக்கொள்ளாமல் குணத்தை மாத்திரங்கொண்டு என்னை ஆசீர்வதிக்கும்படியாய்த் தங்களுடைய மேலான கனத்தைக் கேட்டுக் கொள்ளுகிறேன். (என்றதும் பிள்ளைகளெல்லாரும் கரகோஷஞ் செய்தார்கள். பிறகு) சபையோர்களே, 'அறம்' என்றால் பொதுவாகத் தருமம் என்று ஏற்படும், தானம் என்றுஞ் சொல்லுவார் சிலர். ஆனால்

யானைக்கும், எறும்புக்கும் எவ்வளவு வித்தியாஸமுண்டோ அவ்வளவு வித்தியாஸம் அறத்திற்கும், தானத்திற்குமுண்டு. இதை யனுசரித்தே ஔவைபிராட்டியார் 'அறஞ்செய விரும்பு' என்று ஓரிடத்திலும், 'தானமது விரும்பு' என்று மற்றோரிடத்திலுந் தனித் தனியாகச் சொல்லி யருளினர். ஆகவே அறம் அதாவது தருமம் என்பது விதிக்கப்பட்டவற்றைச் செய்தலும், விலக்கப்பட்டவற்றைச் செய்யா தொழிதலுமாம். வைதீகமாயுள்ள ஈசுர வழிபாடும், இலௌகீகமாயுள்ள நல்லொழுக்கமும் இவ்விதி விலக்கிலேயே யடங்கும். இனி விதிக்கப்பட்டவைகள் சற்கிரியை யென்றும், விலக்கப்பட்டவைகள் துர்க்கிரியை யென்றும், இவற்றால் நாம் பெறுவன முறையே புண்ணியமென்றும், பாவமென்றும் பெரியோர் கூறுவார். நாம் செய்யவேண்டிய விதிக்கப்பட்டவைகள் மநு முதலிய நீதி நூற்களில் கூறப்பட்டிருக்கின்றன. அவைகள் எண்ணிறந்தன வாயினும், முக்கியமாகத் தெரிந்தெடுக்கப்பட்டவைகள் முப்பத்திரண்டு. அவையாவன:—

(1) ஆதுலர்க்குச் சாலை (தரித்திரர்க்கு இருப்பிடம்), (2) ஓதுவார்க்குணவு, (3) அறுசமயத்தார்க்கு உண்டி, (4) பசுவுக்குவாயுறை (கைத்தீனி) (5) சிறைச்சோறு, (சிறைச்சாலையி லுள்ளார்க்குச் சாப்பாடு), (6) ஐயம் (இரப்போர் கலம்.) கொடுத்தல், (7) தின்பண்டம் நல்கல், (8) அறவைச் (அநாதைகளுக்குச்) சோறு, (9) மகப் (பிள்ளைப்) பெறுவித்தல், (10) மகவு வளர்த்தல், (11) மகப்பால்

வார்த்தல், (12) அறவைப் பிணஞ் சுடுதல், (13) அறவைத் தூரியம் (வஸ்திரம்), (14) சுண்ண மளித்தல் (15) நோய்க்கு மருந்து கொடுத்தல், (16) வண்ணாரைக் காப்பாற்றல், (17) நாவிதரைக் காப்பாற்றல், (18) கண்ணாடி, (19) காதோலை, (20) கண்மருந்து, (21) தலைக்கெண்ணெய் (இவைகளை ஈதல்), (22) தெய்வ வழிபாடு, (23) பிறர் துயர் காத்தல், (24) தண்ணீர்ப்பந்தல் வைத்தல், (25) மடம், (26) தடம் (குளம்), (27) சோலை இவைகள் ஏற்படுத்தல், (28) ஆவுரிஞ்சுதறி (பசு உராயுந் தம்பம்), (29) விலங்கிற் குணவு, (30) ஏறு விடுத்தல், (31) விலை கொடுத்துயிர்காத்தல், (32) கன்னிகாதானம் என்பவைகளே. இவைகளை விரிக்கிற் பெருகும். இவ்வளவு அறங்களும் ஒருவனால் செய்யச் சாத்தியப்படாவாகையால் மூவாயிரம்வருஷம் சிவயோகத்திலிருந்து மூவாயிரம் திருமந்திரங்கள் திருவாய்மலர்ந்தருளிய திருமூலநாயனாருடைய உபதேசத்தை உள்ளத்திற்கொண்டு அதன்படி நடந்தால் அதுவே போதுமானது. அவர் 'இறந்தார்க் கீதல்' என்னுந் தலைப்பின் கீழ்,

"யாவர்க்கு மாமிறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயறுகு
யாவர்க்கு மாமுண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே."

என்று சொல்லியருளினார். இப்பாட்டில் யாவராலும் எளிதில் செய்து முடிக்கக் கூடிய நான்கு அறங்களை எடுத்துக் காட்டியிருக்கிறார். இந்நான்கும் அறம் எல்லாவற்றுள்ளும் முதன்மையான அறங்கள். அவை

களை அனுஷ்டிப்பதனால் வரும் ஆதாயம் அளவிடக் கூடாததாயிருந்தும், அநுஷ்டித்தற்கு யாதொரு முதலும் வேண்டியதில்லையென்பது நனி விளங்கும்.

இவற்றுள் முதலாவதாக 'இறைவனை ஆராதிக்க வேண்டு'மென்றது எல்லோராலும் செய்யக் கூடியதாகவே சொல்லப்பட்டிருக்கிறது. கோயில், குளங் கட்டினால்தான் பகவானுடைய அனுக்கிரகம் வரும்; அல்லது விமானம் திருமாளிகைத் தீபதூபாராதனைகள் செய்தலே தெய்வ அருள் பெறற்கு ஏதுவாகும் என்று எண்ணுவது போன்ற வெளிமயக்கமல்ல. இப்படியெல்லாம் செய்வதென்றால் பணக்காரர்களுக்குத்தான் முடியும். ஏழையோர்க்குச் சுவாமியேது? பூதமேது? என்று சொல்லும்படியாகவே நேரிடும். இவ்விதமான விபரீத வுணர்ச்சி கொள்ளாமல் யாவரும் எளிதில் ஈசுர பக்தி செய்யும்படியாகவே திருமூலர் அப்பாடலின் முதலடியிற் கூறியருளினார் போலும். அன்றியும், 'ஒரு பச்சிலை' என்றதனால் வில்வந்தான் வேண்டும்; கோங்கு, மந்தாரைதாம் வேண்டும்; அல்லது பாரிசாதந்தான் வேண்டும் என்று இடமிடமாய்ச் சென்று அலையவேண்டிய கஷ்டமுமில்லாமல் ஏதாவது ஒரு பச்சிலையென்று ஏற்படுகிறது. சாலையோரங்களிலிருந்து தழைகளை உருவினாலும் சில சமயம் சங்கடம் நேரிடும். ஆகையினால் வழியோரங்களில் முளைத்துக் கிடக்கும் புல்லென்றாலும் போதும். அவற்றைக்கொண்டு மனப் பூர்வமாய் இறைவனாக மந்திரப் பிரதிஷ்டை பண்ணப்பட்ட சொரூபத்தை அர்ச்சனை செய்தால் அவ்விறைவனுடைய திருவரு

ளைப்பெறலாம். இதுபற்றியே, பட்டினத்தடிகளும்

" பச்சிலை யிடினும் பத்தர்க் கிரங்கி
மெச்சிச் சிவபத வீடருள் பவனை. " என்றார்

இவ்வாறே,

பரஞ்சோதி முனிவர்.

" குடங்கை நீரும் பச்சிலையு மிடுவோர்க் கிமையாக் குந்
டடங்கொள் பாயும் பூவணையுந் தருவாய். " [சரமும்

என்றும்,

சைவ எல்லப்ப நாவலர்.

" யாரானு மளவிடுதற் கரியவனை யொரு கரத்து
நீரானு மலரானும் நெஞ்சுருகப் பணலாமே. " என்றுங்

கூறியுள்ளனர்.

இதனால் பகவானை ஆராதிப்பதற்கு வேண்டும்ப ங்கள் அநாவசியமென்றும்; யாதாமோரு பச்சிலையும், மனப்பூர்வமான பக்தியுமே அவசியமென்றும் சித்தித்தது. பச்சிலையில்லாமற்படி ஆராதனை செய்யலாகாதோவென்றால், அப்படியுஞ்செய்யலாம். ஆனால் அது சரியையிற் சரியையும், சரியையில் கிரியையுங் கடந்து சரியையிற் யோகத்தை யனுஷ்டிப்பவர்களுக்கே உரியதாகும்.

தாயுமானவர்.

" துரியநிறை சாந்ததே வதையா முனக்கே
தொழும்பனன் பபிஷேகநீர்
உள்ளுறையி லென்னாவி நைவேத்தியம்ப்ராணன்
ஓங்குமதி தூபதீபம். " என்று

கூறியருளியதும் இதனைக் கருதியேயாம். ஒரு பச்சிலைகொண்டு அர்ச்சித்து ஈசுரனைப்பக்தி பண்ணுவது இவ்வளவு சுலபத்திலிருக்க, நாம் அவ்வாறு செய்யாமல் வீணே காலத்தைக்கழிப்பது என்ன பரிதாபம்!

சிவநேசச் செல்வர்களே! எமது அருமைச் சகோதரர்களே, கவனியுங்கள்! இரண்டாவதாக 'பசுவுக்கு ஒரு வாயளவு அறுகம் புல்லைக்கொடுப்பது யாவராலும் முடியும்' என்றார். இங்கு மற்ற ஜீவ பிராணிகளைக் குறிக்காமல் பசுவைக் குறித்ததின் காரணம் சொல்லாமலே விளங்கலாம். பசுவினிடத்திலிருந்து நமக்குக் கிடைக்கும்படியான நன்மை அளவிட்டுச்சொல்ல முடியாது. பிறந்ததிலிருந்து நாம் இறந்து கட்டையேறிய பிறகும் அதனுடைய பொருளால் நமக்குப்பிரயோசனமிருக்கிறது. உலகத்தில் பசுவாலீயப்பட்ட பொருளை ஏதாவது ஒரு வழியில் உபயோகப் படுத்தாதவரே கிடையாது. * பஞ்ச கவ்வியப் பொக்கிஷம் அப்படியே. இவ்விஷயம்,

"மன்றுள் நடம்புரியும் நாயனார்க்கு......திருமுடி மேல் விரும்பி யாடி யருளுதற்குத், தூய திருமஞ்சன மைந்தும் அளிக்குமுரிமைச் † சுரபிகள் தாம்"

என்னும் திருத்தொண்டர் புராணத்தாலும், மற்றைய நூற்களாலும் விரிவாக விளங்கும். அதன் சாணமா

---

* பஞ்ச கவ்வியம் = கோமயம், கோசலம், பால், தயிர், நெய்.

† சுரபிகள் = பசுக்கள்.

கிய தேகமயம் என்ன சாமான்ய மானதா? பரம சாதகத்துக் குரிய நீரு எங்கிருந்து நமக்குக் கிடைக்கிறது? இவையெல்லாம் கன்றும்படியான ஒரு பிராணிக்கு நாம் பிரதியுபகாரம் செய்யாவிட்டால் எல்லா அறிவையும் (ஆறறிவு) பெற்றிருந்தும் ஓரறிவு, ஈரறிவுள்ள தாவர, கிருமிவர்க்கத்திற்கும் நாம் கீழ்ப்பட்டவர்க ளாவோம். தாவரங்களில் தென்னை மரத்தைக் கவனிப்போம். நாம் அதனடியிலிடும் நீரை அதுவன்றி தன்னுடைய தலையினிடமாக நமக்குக் கொடுக்கிறது. இதைப்பார்க்கிலும் வேறு சான்று நமக்கு வேண்டுமா? தாவரமே இப்படியிருக்க, நாம் நமக்கு உபகாரஞ் செய்பவர்களுக்குப் பிரதி யுபகாரஞ் செய்ய வேண்டாமா? அதைத்தான் இம்முனிபுங்கவரும் உபதேசித்திருக்கிறார். நாம் செய்யும் பிரதி யுபகாரம் பிரமாதமானதாக விருக்கவேண்டுமென்கிற ஆவசியமில்லை. பசுவைக்கண்டபோது அருகாமையிலுள்ள அறுகம் புற்கட்டையையேனும் ஒருவாயளவு பிடுங்கி அதனுக்குக் கொடுப்பதேயானால் அதுவே போதுமானதுவென்றார். இது என்ன சேர்க்கியான இதோபதேசம் பாருங்கள்!

மூன்றாவதாக 'உண்ணும்பொழுது ஒரு கைப்பிடி அன்னம் பிறர்க்கிட்டு நீ உண்ணு' என்றார். இதுவும் எல்லோராலும் செய்யக்கூடியதேயாம். உண்ணும் சாதத்தில் ஒருவாயளவு குறைந்தால் நமக்கு நஷ்டமொன்றுமில்லை. 'யாங்குங் கவளத்து ஒரு சிறிது வாய்தப்பின், தூங்குங் களிறோ துயருறாது'

ஆனால் 'ஆங்கது கொண்டு எறும்பு ஒருகோடி யாயிரம் உய்யுமால் அருங்கிளையோ டயின்று' என்று பெரியோர் கூறியிருப்பதைக் கவனியுங்கள்! நாம் ஒவ்வொருவராலும் அன்னசத்திரங் கட்டிவைக்க முடியுமா? அல்லது சகஸ்திர பிராமண போஜனஞ் செய்து வைக்க முடியுமா? ஆனாலோ புண்ணியத்தைச் சம்பாதிக்கவேண்டும். அதையெப்படிச் சம்பாதிப்பது? அதற்கு இது தான் வழி. அதாவது, காலையிலும், மாலையிலும் நீ உண்ணும் உணவில் ஒரு கைப்பிடியளவு மிச்சப்படுத்தித் தெருவாயிற் புறத்திலாவது மற்றெவ்விடத்திலாவது வைத்துவிடு. ஊரும் பிராணிகளோ, பட்சிகளோ, அல்லது நாய் முதலிய மிருகங்களோ அதனையுண்டு களிக்கும். இது ஒவ்வொருவராலுஞ் செய்யக்கூடியதல்லவா? இதனைக் கருதியே அவ்வாரியர் நமக்கு உபதேசித்தருளினார்.

நான்காவதாகவுங் கடைசியாகவும் 'பிறருக்கு இனிமையான வார்த்தை சொல்லுவது எல்லோருக்கும் முடியும்' என்றார். இஃதும் என்ன அருமையான உபதேசம் பாருங்கள்! வலிய பகையும் இனிய சொல்லினால் முறியுபடும். உலகமே இன்சொல்வயப்பட்டது. அதனாலன்றோ 'இன்சொல்லா லன்றி யிருநீர் வியனுலகம், வன்சொல்லா லென்றும் மகிழாதே' என்று சொன்னார்கள் பெரியோர்கள்? அன்றியும்,

"முதுணர்வோர் முற் பழிச்சு பாடலை யரற்கவை விடர்க்
கிளம்பாவைய ருரைபோலும்" என்றும்,
"தமையு ணர்ந்தோர் பாமாலைக் கேநீதான் [நல்லோர்"
பட்சமென்று நன்மாலை யாபெடுத்துச் சொன்னார்
என்றுங் கூறிய

ஆன்றோர் வாக்குகளைக் கவனிக்குங்கால் உலகம்மாத் திரமல்லாமல் கடவுளும் அன்பர்களுடைய இனிய சொற்களுக்கு வயப்பட்டவரென்று தெரிகிறது. நம்மால் பிறருக்கு உதவி செய்ய முடியாவிட்டாலும் கடுஞ்சொல் தவிர்த்து இனிய வசனம் கூறுவோமே யானால், அதுவே உதவி செய்ததினும் பெரியதாகும்.

"அகனமர்ந் தீதலி னன்றே முகனமர்ந்
தின்சொல னாகப் பெறின்" என்று

தெய்வப் புலவர் கூறியதும் இது பற்றியேயாம். பிச்சையென்று வருகின்றான் ஒருவன்: அவனுக்குக் கொடுக்க நம்மிடத்தி லொன்றுமில்லையென்று வைத்துக் கொள்ளுவோம். அச்சமயம் (அவனுக்கு இதமாகச் சொல்லுவதை விட்டுச்) செந்நாயைப்போல் கடிந்து விழுவமேயானால் அவன் மனம் எப்படித் துன்புறும்? தன்னால் சம்பாதிக்குந் திராணியின்றி அவ்வேடங்கொண்டு வருபவனுக்குப் பிச்சை யிடா விட்டால் அவனுக்கு வேறு கதி யேது? அந்நிலைமை யிலிருப்பவனுக்குக் கடிந்தமொழி கூறாமல் முகமலர்ச்சியொடு இனிமையான மொழியில் என்னால் பிச்சையிட முடியாது என்றுசொல்லுவையேயானால் அவ்வினிய மொழி அவன் மனத்தைத் துன்புறுத்தக் காரணமாயிராது. அன்றியும் அது நீ யவனுக்குப் பிச்சையிட்டதிலும் மேலாகும்.

இன்னொரு விஷயம். உன்னுடைய உடைமையைப் கொள்ளை கொள்ள வேண்டுமென்னுங் கருத்தோடு ஒரு பணக்காரனிருக்கிறானென்று வைத்துக் கொள்

வோம். நீ அந்தப் பகையாளியைக் கண்டபோது, அவன் மீது கோபங்கொள்ளாது தாழ்ந்த நடையில் இரக்கமாக அவனோடு பேசுவாயானால் அவனுடைய கோபம் இருந்தவிடமே தெரியாமற் பறந்தோடிப் போம். இவைகளை யெல்லா மனுசரித்தே இன்னுரை யை ஒவ்வொருவருங் கைக்கொள்ள வேண்டியது அத்தியாவசியமென்று பரமாப்தராகிய திருமூலநாய னார் வற்புறுத்திக் கூறி யிருக்கிறார். இப்பேர்ப்பட்ட உபதேசங்களை நமக்கு இனி ஒருவர் பிறந்து செய் யப் போகிறார்களா? ஆகையினால் மேற்கூறிப்போந்த ஆன்றோர்களின் வாக்கியங்களை ஓதியுணர்ந்து அவற் றின்படி நாம் நடக்கக் கடவோம்'' என்று இவ்வாறு மழை பெய்ததுபோல் தங்கு, தடையின்றித் தியாகரா ஜன் உபந்நியாஸித்ததைக் கேட்ட எல்லோருங் கர கோஷஞ் செய்து இனி யில்லாச் சந்தோஷத்தை யடைந்தார்கள்.

அதன் பிறகு தியாகராஜன் சபையோரைப் பார்த்து 'எனக்கு ஏற்படுத்தப்பட்ட காலத்திற்கு மேல் அரை மணிநேரம் அதிகமாய்விட்டபடியால் 'அறஞ் செயல்' என்னும் இவ்விஷயத்தை இவ்வள வோடு நிறுத்துகிறேன். உலக விஷயங்களை நன் கறி யாத நான் சொல்லியவைகளிலுள்ள குற்றங்களைக் கவனியாமல் என்னை ஆசீர்வதிக்கும்படியாய் மறு படியும் உங்களை நான் கேட்டுக் கொள்ளுகிறேன்' என்றான்.

உடனே பிரதம உபாத்தியாயர் எழுந்து தியாகராஜனைப் பார்த்து 'தியாகராஜா, நீ இவ்வளவு சேர்த்தியாய் உபந்நியாசிப்பாயென்று நான் எண்ணவேயில்லை. நீ சிறு பிள்ளையாயிருந்தும், உலக அனுபவம் இவ்வளவு பெற்றிருப்பதைப்பற்றி நாங்களெல்லோரும் சந்தோஷப்படுகிறோம்! இந்தப்பள்ளியில் இதுவரையில் ஒரு மாணவனாவது இவ்வளவு அருமையாய் எது விஷயத்தைப்பற்றியும் பேசியது கிடையாது. நீ கவிப்புருமற்படி இன்னமும் கல்வி பயின்று பிரபலவித்துவானாய் என்பதில் தடையில்லை. உனக்குக்கல்வியில் அபிவிர்த்தியையும், பூரண ஆயுளையும், சகல சம்பத்துகளையும் தரும்படியாய் எல்லாம் வல்ல முழுமுதற்கடவுளை நாங்கள் எங்கள் மனமொழி மெய்களால் வணங்குகிறோம்!' என்றார்.

இவ்வாறு பிரதம உபாத்தியாயர் பேசி முடித்ததும், தியாகராஜனுடைய வகுப்பு உபாத்தியாயர் பிரதம உபாத்தியாயருடன் காதோடுகாதாய் ஏதோ பேசிப் பிறகு, சபையோரைப் பார்த்துச் 'சபையோர்களே! இதோ இப்பொழுது பல அநுபவங்களுடன் உபந்நியாசித்த நமது தியாகராஜனைக்கொண்டே 'காதல்' என்னும் விஷயமாக ஓர் உபந்நியாஸம் இன்றைய பதினைந்தாம் நாள் இந்த விடத்தில் நடத்துவிக்கும்படியாய் ஆலோசித்திருக்கிறோம். அக்காலை நம்முடைய தியாகராஜனுக்கு அவனுடைய கல்வித்திறத்தை உத்தேசித்து ஓர் பட்டம் தருவதாகவும் யோசித்திருக்கிறோம். ஆகையால் நீங்களெல்லோரும் இன்றைய தினம் அவனுடைய உபந்நியா

ஸத்தைக் கேட்டு மகிழ் வடைந்ததுபோலவே, அன்றையதினமும்வந்திருந்து கேட்டுமகிழ்வீர்களென்று நம்புகிறேன். பிள்ளைகளே! மேலும், நீங்கள் ஒவ்வொருவரும் இத்தியாகராஜனைப் போல் கல்வியிற்றேறி முன்னுக்கு வரப் பிரயாசைப் படவேண்டும். உயிருக்கு அருந் துணையா யிருப்பது இக்கல்வியொன்றே. அன்றியும்,

“ இம்மை பயக்குமால் ஈயக் குறைவின்றால்
தம்மை விளக்குமால் தாமுளராக் கேடின்றால்
எம்மை யுலகத்தும் யாம்காணேம் கல்விபோல்
மம்ம ரறுக்கும் மருந்து.” என்றபடி

இகத்திற்கும், பரத்திற் குஞ் சாதனமா யுள்ளது இதைப் பார்க்கிலும் வேறொன்றுண்டோ?’ என்று பேசி முடித்தார். பிறகு சபை கலைந்து அவரவர்கள் தத்தம் இருப்பிடம் போய்ச் சேர்ந்தார்கள்.

அன்றைய தினம் நடந்த உபந்யாஸத்தைக் கேட்டுத் தியாகராஜன்பேரில் மற்றெல்லோரும் பிரியங் கொண்டாடினார்களாயினும், மாணிக்கம் என்பவன் மாத்திரம் அவன் பேரில் அதிகப் பொறாமையும், முன்பிருந்ததைவிட அதிக வெறுப்புங் கொண்டான். தியாகராஜனிடங் கண்ட கல்வித்திறமையைப் பற்றி மாணிக்கம் பொறாமைகொண்டானென்றெண்ணின், அவ்வாறல்ல. கல்வி விஷயத்தில் பொறாமை கொண்டால் அதை முன்னிட்டுத் தானும் படிக்க முயன்று முன்னுக்கு வரமுடியும். ஆனால் துர்க்குணம், துர்நடக்கையும், படிப்பில் பிரியமின்மையும், சிறிது படித்

தானும் அஃதும் தீயவழியில் படிக்கும் படிப்பும் ஆகிய இவைகளுள்ள மாணிக்கம் முன்னுக்கு வாரு வதெப்படி? ஆகவே யாதொரு காரணமுமில்லாமலே தியாகராஜனை விரோதித்து வந்தான்.

பிறகு குறித்த தினத்தில் மறுபடியும் சபை கூடிற்று. அப்பொழுது தியாகராஜன் அவையடக்கங் கூறி 'காதல்' என்னும் விஷயத்தைப் பற்றி உபந்நியாஸிக்க ஆரம்பித்தான். அப்பொழுது சபையோர் இடையிடையே பலவிதமான அச்சரியமும், குதூகலிப்பும், பெரு நகைப்புங் கொள்ளலானார்கள். அவைகளையெல்லாந் தவிர்த்துத் தியாகராஜன் அன்றைய தினம் செய்த உபந்நியாஸத்தை வாசகர்களறியும் வண்ணங் கீழே வரைகிறோம்.

“சகோதர சகோதரிகளே! இன்றையதினம் உபந்நியாஸிக்கும்படியாக எனக்கு அளிக்கப்பட்ட விஷயம் சாமான்யமானதன்று. இருந்தாலும் என்னால் முடிந்தவரையில் விளக்குகிறேன். 'காதல்' என்றால் ஸ்திரீ புருஷர்களுக்குள் ஏற்படும் பரஸ்பரமாகிய அன்பு. இக் காதலானது சாதாரணமாய் எல்லோருக்கும் உண்டாவதரிது. பரஸ்பரமாகிய அன்பினால்தான் உண்டாகுமென வெகு திட்டமாய்ச் சொல்லலாம். சாதாரணமாய்த் தற்காலத்தில் ஸ்திரீ புருஷர்களுக்குள் ஏற்பட்டிருப்பது என்னவென்றாலோ? அது விரகமேயொழிய வேறல்ல. காதலுக்கும், விரகத்திற்கும் என்ன வித்தியாஸமெனின், அது சொல்லுந்தரமுள்ள தன்றேனும் வீறு காணத்திற்கும், முகா

வதிர்ச்சிக்குமுள்ள அவ்வளவு வித்தியாசமென்று ஒருக்கால் சொல்லலாம். இக்காதல் திடீரென்று உண்டாவதுமன்று. செடிகொடிகளைப்போல இதற்கும் வித்து, விளைவு முதலியவைகளுமுண்டு. காதலென்னும் வித்தை ஓர் நிலத்தில் நடவிட்டு, அது முளைத்துத், தளிர்த்துக், கிளைத்துப், பூ விட்டுப், பிஞ்சாகிக் காயாகி, முற்றிக் கனியாகச் செய்யவேண்டும். இக்கனியையே 'காதற்கனி' யென்றும், 'காதற்பயன்' என்றும் பெரியோர் சொல்லுவார். விதையாயிருக்கும் ஒரு பொருள் அவ்விதையின் ரூபத்தில் எப்படியாதொரு பிரயோசனமுந்தராமல், மேற் சொல்லியபடி பருவ மாறுதல்களடைந்து கனியானபின்மேல் பயனைத் தருமோ அப்படியே இக்காதலும் அதனுடைய கனியின் ரூபத்தில் தான் பயனைக் கொடுக்கும். இது தான் சிற்றின்பத்தாலாகிய பரமபயன். எவ்வாறு பேரின்பத்தின் பயனை யாவரு மனுபவிக்கலின்றி (பசு ஞானங்களுமன்று பதிஞானமுடைய) வெகு சிலரே யனுபவிக்கிறார்களோ அவ்வாறே இக்காதற் பயனையும் வெகு சிலரே யனுபவிக்கிறார்கள். பேரின்பப்பயனை எவ்வாறு வெகு சிலர்தான் அனுபவிக்கிறார்களென்பதைப்பற்றி மேற்கோளொன்றை இங்கெடுத்துச்சொல்லுவோம்.

"*குடிலை யென்னுந் தடவய லுப்பன்
அருள்வித் திட்டுக் கருணைநீர் பாய்ச்சி
வேத மென்னும் †பாதபம் வளர்த்தனை
பாதப மதனிற் படுபயன் பலவே—அவற்றுள்

---

* குடிலை = பிரணவம். † பாதபம் = மரம்.

இலைகொண் டேந்தினர் பலரே யிலையோர்த்
தளிர்கொண் டேந்தினர் பலரே தளிரோர் இ
யரும்பொடு மலர்பிஞ் சருங்கா யென்றிவை
விரும்பினர் கொண்டுகொண் டேந்தினர் பலரே
யவ்வா றுறுப்பு மிவ்வாறு பயப்ப
ஒரும் வேதார்த்தமென் னுச்சியிற் பழுத்த
சாரங் கொண்ட சைவ
சித்தாந் தத்தே னருந்தினர் சிலரே.''

இதுபோலவே சிற்றின்பக் கனியாய காதற்கனியின் சுவையை யருந்துபவர் வெகுசிலரே. எனவே பரிபக்குவமாகாத காதலின் ஒவ்வோர்பாகத்தையே பலர் பெறுகின்றனரென்பது வெள்ளிடைமலைபோல் விளங்குகிறது. எப்படி இரண்டறக்கலத்தலுக்கு மிஞ்சிய சுகம் பேரின்பத்தி லில்லையோ அப்படியே காதலினால் பிணைக்கப்பட்ட சுகத்திற்கு மிஞ்சிய சுகம் சிற்றின்பத்திலுமில்லை. இதனைத் தான் மாணிக்கவாசகப் பெருந்தகையாரும் பகவானிடத்தில் சிந்தையை வைத்திருந்தபோது தானிருந்த நிலைமை "மண்ணிடை மாதரா யின்பத்திற்கு ஈடாக விருந்தது" என்றார். இதைவிட வேறு சான்றும் வேண்டுவதின்றும். ஔவைப் பிராட்டியாரும் அறம், பொருள், இன்பம், வீடு என்பவற்றின் தன்மையைச் சுருக்கமாகச் சொல்லியவிடத்து 'காதலிருவர் கருத்தொருமித் தாதரவு பட்டதே யின்பம்,' என்றார். அவ்வாறனுபவித்த வெகு சிலரில் ஒருவர் சாட்சாத் திருவள்ளுவநாயனாரே. காதலாகிய பிணை யொன்று தான் சதிபதிகளை யொன்று படுத்துமே யன்றி, வினைப்பந்

குக்களின் கட்டாயம், தாலிக்கயிறு முதலியவைகள் ஒன்று படுத்த மாட்டா. இவ்வாறு காதலினால் நேர்படாத மற்றைய சம்பந்தங்களெல்லாம் "மண் பாற் காமங் கழித்து மறைவிடந்" தேடுதலையே பொக்கும். முழு அறிவைப்பெறாத பட்சி, மிருகம் முதலியவைகளும் ஒன்றையொன்று பரஸ்பரங்காதலித் தாலன்றி இன்ப நுகர்ச்சிக் கிடங் கொடுப்பதில்லை யென்றால் நமக்கென்ன சொல்லுவது? முற்காலத்தில் அரசர்களுக்குள் ஸ்வயம்வர மிருந்தது மிதுகாரணம் பற்றியேயாம். மற்றெல்லா வொழுக்கமும் சீர் குலைந்தாற்போல இந்தக் காலக்கேட்டினால் நிலை கெட்டுப்போயிருக்கிறது. நம் நாட்டு ஜனங்கள் 'புல்லென்றாலும் புருடன், கல்லென்றாலுங் கணவன்' தாலியைக் கட்டி விளக்கேற்றி விட்டால் எல்லாஞ் சரியாய்ப்போய்விடும். புருஷனைப் பக்குவப்படுத்திக் கொள்ள என்ன நம்முடைய பெண்ணிற்குத் தெரியாதா?" என்று சொல்லிக் கொள்வது வழக்கம். இவர்களேற்றுவதும் விளக்கா? இவர்கள் விளக்கும் பாழாய்ப் போக! ஏற்றுவதற்குப் பதிலாக ஏற்கனவே யெரிந்துகொண் டிருக்கும்படியான சுடர் விளக்கை யவிக்க வந்த சண்டாளர்களே இவர்கள். இதுபற்றியன்றோ,

"வையகத் துயர்ந்த கல்வியும் பொருளும்
விழுவிலா வொழுக்கமுந் தழுவி
வெய்யவன் போலப் புகழொளி பரப்பும்
வீரனோருசுடர் விளக்கைச்

செய்பவாய் கருங்கட் பாவைபாம் பொருள்போய்ச்
சிநேகத்தைக் கவர்ந்துமேல் வீழ
ஐயகோ! காந்தி யனைத்துமே மழுங்கி
யவிந்துபோம் பரிசினைப் பாராய்''

என்று சொல்லி யிருக்கிறார்கள். இவர்களாலேயா புதிதாக ஓர் விளக்கு ஏற்றப்படப் போகிறது? இவர்கள் செய்யவேண்டியதெல்லாம் ஏற்கெனவே எரிந்து கொண்டிருக்கும் விளக்கு அவியாமலிருக்க ஒரு தூண்டுகோல் சம்பாதித்துத் தருவதன்றோ? அப்படித் தேடுந் தூண்டுகோலும், விளக்கிற்குத் தக்கதாக வல்லவா இருக்கவேண்டும்? அவ்வாறின்றி, உள்ளங்கை யளவுள்ள ஓர் மண் அகலுக்கு ஒன்றரை முழ நீளமும், அதற்கேற்ற பருமனுமுள்ள ஒரு தூண்டுகோலைத் தேடினால் தூண்டுஞ் சமயத்தில் (சுடர் விளக்காயினும்) அஃது அவிந்துபோகக் கேட்கவேண்டுமா? இது போலவாகும் நம்மவர் செய்யுஞ் செய்கை. காதலி யென்று மனைவிக்கு ஓர் பெயர் வந்ததின் காரணம், காதலனென்னும் விளக்கைத் தூண்ட ஏற்பட்டதனாலல்லவா?. ஆகையினால் காதலனென்னும் சுடர் விளக்கிற்குத் தக்க காதலி யென்னும் தூண்டுகோலைத்தேடுவதே அறிவுடைமை யாகும்.

மேலே சொல்லப்பட்ட 'புல்லென்றாலும் புருடன், கல்லென்றாலுங் கணவன்' என்பவற்றின் அபிப்பிராய மென்னவென்றால், ஒரு பெண் மகளானவள்

தனது நாயகன் புல்லைப்போன்ற அற்பத் தன்மை யுடையவனு யிருந்தாலும், அல்லது கல்லைப்போன்ற கடினத் தன்மை யுடையவனு யிருந்தாலும் அவன் மீது வெறுப்பும், அவமதிப்புங் கொள்ளாமல் 'குல மகட்குத் தெய்வங் கொழுநனே' யென்னும் முது மொழிக் கிலக்காக நடக்கவேண்டு மென்பதே. இது பெண்களுக் குரிய கற்பு, காதல் என்னும் லட்சணங் களுள் கற்பி லட்சணத்தைக் கூறும் பாகத்தை யடுத் தது. காதலின் இலட்சணத்தைப் பற்றி நமது திரு வள்ளுவ நாயனர் அபாரமாய் விரித்துக் கூறி யுள் ளார். இது திருக்குறள் 'களவியல்' 109-ம் அதி காரத்திலிருந்து 115-ம் அதிகாரம் வரையில் பார்க்க நன்கு விளங்கும்.

மிற்க, ஜனகமஹாராஜனது புத்திரியாகிய சீதை தான் பருவ மடைந்தபின் அநேக ஆடவர்களைப் பார்த்திருக்கலாம். ஆனல் அந்த ஸ்ரீராமபிரானைப் பார்த்த மாத்திரத்தில் தான் அவரையே பர்த்தா வாக அடைய வேண்டுமென்கிற காதல் உடனே அவ ளுக் கேற்பட்டு விட்டது. ஸ்ரீராமரும் அநேகமாதர் களைப் ;பார்த்திருக்கக் கூடும். ஆனல் அந்த சீதா பிராட்டியைப் பார்த்த மாத்திரத்தில் அவளையே தனக்கு மனைவியாக அடையவேண்டு மென்னுங் காதல் அவருக்குண்டாயிற்று. இவ்விதமாகவே ஸ்தி ரீயும், புருஷனும் ஒருவரை யொருவர் பரஸ்பரங் காதலித்துத் தாங்கள் சதிபதியாக வேண்டுமென்று மனதில் நிச்சயித்து அதை வாக்கினல் பிறருக்குச் சொல்லிக் காரியத்தினல் விவாகமூலமாக அடைவது

தான் ஒழுங்கு. உலகெங்கும் பிரசித்திப்பற்ற சாவித் திரியும், சத்தியவானும் இவ்வாறே பொருந்திச் சேர்ந் தார்கள். அப்படிச் சேர்ந்ததனால் விளைந்த பயனை அறி யாதார்யாவர்? விதியினால் சத்தியவானுக்கு ஏற்பட்டி ருந்த அற்ப ஆயுளையும் அப்பெண்கள் நாயகம் தன் னுடைய மெய்க்காதலினால் நீடிய ஆயுளாகமாற்றிச் சுகம்பெற்றாள். அப்படிக்காதற் கலப்பினால் பிணைக் கப்பட்ட தம்பதிகள் இன்றும் பல இடையூறுகளி னின்று விலகிச் சுகமடைந்து வருகிறார்கள். இப்படிப் பட்ட காதலால் விளையும் நாயகவிசுவாசமும் பெண் களுக்குத் தங்களுடைய விசால புத்தியினால் தான் உண்டாகும். அப்புத்தியும் நல்ல நூல்களைக் கற்பத னாலேயே விருத்தியாகும். ஆகவே பெண்கள் காத லால் தங்கள் கணவனைப் பிணைத்து அவர்களுடைய அன்பைக்கவர்ந்து சுகமடைவதற்குக் கல்வியே முக் கிய ஆதாரமா யிருக்கிறது. இதனால் கல்வியைப் பெண்களுக்குக் கொடுப்பது பெற்றோர்களுக்குக் கட மையென்று விளங்குகின்ற தல்லவா.?

நாம் இதுகாறும் சொல்லி வந்ததின் தாற்பரிய மென்னவென்றால், பரஸ்பரமாகிய காதல் ஏற்பட்டுப் பிணைக்கப்படாத விவாகம் விவாகமல்லவென்றும், அகாதலாற் பிணைக்கப்பட்டவர்கள் தங்கள்வாழ்நாட் களைச் சந்தோஷமாகக் கழிக்க முடியாதென்றும், புருஷனுக்கு ஆபத்து நேர்ந்த காலத்து மனைவி அவ னைப்பாதுகாக்க முடியாதென்றும்,ஆனால் காதலினால் பிணைக்கப்பட்ட விவாகமோ இகத்தில் சுகத்தையும், பரத்தில் நற் பதவியையுங் கொடுக்கு மென்றுமே.

ஆகையால் காதல்தான் இகலோக வின்பத்திற்குத் துணைக் கருவியென்று ஏற்படுகிறது.'' என்று தியாகராஜன் சொல்லி முடித்தான். இது விஷயத்தைக் கேட்டுக்கொண்டிருந்த பெண்பிள்ளைகளில் முக்கியமாய் வடிவுடையம்மையே இதன் தாற்பரியங்களை நன்றாயறிந்தது மல்லாமல் தியாகராஜன் மீது இதுவரையிலேற்பட்டிருந்த பிரியத்தைப் பார்க்கிலும் பதினாயிர மடங்கு அதிகப்பிரியங் கொள்ளலானாள். மற்றப் பிள்ளைகளும், உபாத்தியாயர்களும் அப்பொழுது அடைந்த ஆனந்தத்திற்கு எல்லையே கிடையாது.

பிறகு பிரதம உபாத்தியாயர் முன் தடவையைப்பார்க்கிலும் நீண்டதோர் உபசரணைவாசகம் பேசித் தியாகராஜனுக்கு 'பிரசங்காபிர்கம்' என்னும் ஓர் பட்டப்பெயரைச் சூட்டி அதற்கடையாளமாக இரத்தினம் பதித்த ஓர் மோதிரத்தை அவனுடைய பௌத்திரவிரலில் போட்டார், அதுகாலை பிள்ளைகளெல்லாம் வழக்கம்போல் கரகோஷஞ்செய்து பெரிதும் ஆரவாரித்தார்கள். இந்த உபசரணை நடந்தபொழுது ஏற்கனவே தியாகராஜன் மீது விரோதம் பாராட்டும் மாணிக்கம் என்பவனுடைய மனம் எப்படியிருந்திருக்குமென்று இதைவாசிப்பவர்களே யூகித்துக்கொள்ளலாம். பிறகு பெண்களெல்லாம் மங்களம்பாடினார்கள். வடிவுடையம்மையின் முகத்தை அது சமயம் பார்த்திருந்தால் என்ன ஆநந்தமாயிருந்ததென்று சொல்லாமலிருக்க முடியாது. “ நற்ற மனோதயத்தில்

நல்லன்னஞ் சேர்ந்தாற்போல், கற்றோரைக் கற்றோரே காமுறுவர் என்றபடி புத்திசாலிகளைப் புத்திசாலிகளும், படித்தவர்களைப் படித்தவர்களும் விரும்புவது சகஜமல்லவா? கடைசியாகச் சபைகலைந்து அவரவர்கள் தத்தம் இருப்பிடங்களைச் சேர்ந்தார்கள்.

அத்தியாயம் - 4.

மாணிக்கத்தின் கூடா வொழுக்கங்கள்.

பொறாமையென்பது பிறரது நல்ல நிலைமையையோ, செல்வத்தையோ, அல்லது உயர்வையோ கண்டு மனஞ் சகியாமை. இது கூடா வொழுக்கங்கள் பலவற்றுள்ளும் முதன்மையானது. இதை யொருவன் கைக் கொள்ளுவானேயானால் அவன் கெட்டுப் போகக் கேட்கவேண்டியதில்லை. ஏனெனில், பிறர் கெடவேண்டுமென்று எண்ணுகிற ஒவ்வொருவனும் தானே கெடுவது நியாயம். பொறாமையுடையவனும் அவ்வழியிற் சேர்ந்தவனாகையால் அவன் முந்தி கெடுவது சகஜமே. இதற்குச் சான்றாக நீதி நூலார் ஓர் விஷயங் கூறியிருக்கிறார். அதாவது:—

“மாங்கனி வாயிற் கவ்வி
மரத்திடை யிருக்கு மந்தி
பாங்கர்நீர் நிழலைக் கண்டு
பழமுறனுங் கூங்கேன் றெண்ணி

தாங்கரு மவாவிற் றுவிச்
சலத்திடை யிறந்த தோப்ப
நீங்கரு பொறாமை யுள்ளோர்
நிலத்திடைக் கெடுவர் நெஞ்சே"

என்பதே. இது போலவாகும் பொறாமை கொண்டு பிறரைக் கெடுக்க வேண்டுமென்று எண்ணங் கொள்ளுகிறவர்களின் கதி. இம்மட்டோ, பொறாமை கொண்டிருப்பவனை லக்ஷ்மியுஞ் சேராமல் தனது அக்காளாகிய மூதேவிக்குச் சிபாரிசு செய்துவிட்டுப் போவாளென்னுந் தாற்பரியத்தோடு,

"அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவள்
தவ்வையைக் காட்டி விடும்." என்று

முதற் பாவலருங் கூறியருளினா ரன்றோ?

நம்முடைய கதையில் வரும்படியான மாணிக்கம், தியாகராஜனைப்பலரும் மெச்சி வெகுமதி யளித்ததையும், அவனுடைய அதி தீவிர புத்தியையுங் கண்டு அதிகம் பொறாமைகொண்டு அவனை யெவ்விதத்திலும் அவமானப் படுத்த வேண்டுமென்றும், அஃதும் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் எதிரிலேயே செய்யவேண்டு மென்றும் எண்ணியிருந்தான். இப்படி எண்ணங்கொண் டிருந்தபொழுது விடுமுறை நாளில் பிள்ளைகளெல்லாம் பள்ளிக்கூட மைதானத்தில் தேகாப்பியாஸத்தின் பொருட்டுப் பலவித விளையாட்டுகள் விளையாடிக்கொண் டிருந்தார்கள். அப்பொழுது ஒரிடத்தில் மாணிக்கம் சிலபிள்ளைகளோடு

யேதோ பேசிக்கொண்டிருந்தான். பிள்ளைகளெல்லாக் கூட்டமா யிருக்கவே, அதென்னவென்று பார்ப்பதற்காகச் சிவநேசன் அங்கே போனான். உடனே அவனைப் பார்த்து மாணிக்கம் 'அடே, நகரி ராஜாவின் அடைப்பக்காரப்பயலே! உனக்கு இங்கேயென்ன வேலையடா?' என்று கேட்டான். அதைக் கேட்ட சிவநேசன் பொறுமையுடன் 'நான் அடைப்பக்காரனு யிருந்தா லிருக்கட்டுமே. அதனு லென்ன குறைவு? தமிழுலகமெங்கும் பிரசித்திபெற்ற கம்பர் ஓர் காலத்தில் சோழராஜனுக்கு அடைப்பத் தொழில் செய்யவில்லையா? அச்சோழனும் கம்பர்செய்ததற்குப் பதில் அவருக்குச் செய்யவேண்டுமென எதிர்பார்த்திருந்து மற்றொரு சமயத்தில் அவருக்கு அதே தொழில் செய்யவில்லையா? இதிலென்ன குற்றம்? ஏதோ நீங்கள் பொறுமை யிழக்கிறீர்கள்' என்றான். அவ்வளவு தான் சொன்னான். உடனே மாணிக்கம் சினக்கெழுந்து சிவநேசனைக் கன்னத்தில் அடி அடித்துவிட்டான்.

அதைப் பார்த்திருந்த தியாகராஜனுக்கு மனந் தாளாமல் அந்த இடத்திற்குப் போய் 'அப்பா மாணிக்கம்! நீ செய்தது நியாயமல்ல. நீ யெல்லாப் பிள்ளைகளைப் பார்க்கிலும் வயதில் மூத்தவனு யிருந்தும் இப்பேர்ப்பட்ட அடாத காரியத்தைச் செய்யலாமா? அவருடைய மனமும் பொறுக்கமுடியாத அப்பேர்ப்பட்ட அபவாதமான பேச்சுகளை அவன் சொல்லியிருந்தாலும், நம்முடைய உபாத்தியாயரிடத்திலல்லவா சொல்லியிருக்கவேண்டும்? சட்டத்தை நீயே யெடுத்து நடத்துகின்றாய் பள்ளிக்கூடத்தின்

ஒழுங்கிற்கும், உன்னுடைய வயதிற்கேற்றபடியிருக்க வேண்டிய புத்திக்கும் மாறுதலே. நீயே யோசித்துப்பார்!' என்று சொன்னான். 'என்னுடைய பிரஸங்கத்தை அவ்வளவோடு நிறுத்தி வையடா, அடே; மடைப்பள்ளி வேலைசெய்தவனுக்கு வாயைப்பாரடா! நான் யார் தெரியுமா உனக்கு? ஒரு பெரிய தனவந்தனின் புத்திரன். உன்னைப் போல் அனாதைப் பேர்வழி யல்ல. நான் செய்தது எனக்கு நியாயமாகத் தான் தோற்றுகிறது. உன் வழியைப் பார்த்துக் கொண்டு போடா, போ!' என்று அதிக உதாசீனமாகச் சொன்னான். இதைக் கேட்டதும் பொறுமைசாலியேயாயினும் தியாகராஜனுக்குக் கோபம்வந்து விட்டது. அக்கோபத்திலும் மாணிக்கத்தைப் பார்த்து 'மாணிக்கம்! நீ சொல்லிய பிரகாரம் நான் மடையனாகவே யிருக்கட்டும். ஆனால் மடையனும், செய்யாத காரியத்தைச் செய்தும், வாயினால் வெளியிட்டும் நிற்கும் நீ எந்த நாமதேயத்திற்கு லாயக்கானவனென்று எனக்கே விளங்கவில்லை. வார்த்தைகளை வீணே வெளியில் கொட்டிவிடாதே. பிறகு திருப்பிக் கொள்ளுவது கஷ்டமாய் முடியும்' என்று சொன்னான்.

பிறகு ஒருவர்க்கொருவர் வார்த்தையதிகமாக்க வாய்ச்சண்டை கைச்சண்டையில் வந்து விட்டது. அந்தச் சமயத்தில் பிள்ளைகளெல்லாம் கா, கூவென்று சப்தம்போட உபாத்தியாயரொருவர் வந்தார். அவரைக் கண்டதும், பிள்ளைகளெல்லாம் ஒன்றும் அறியாதவர்கள்போல் தங்கள் தங்களுடைய இடத்தைப் போய்ச் சேர்ந்தார்கள்.

மேலே காட்டிய விஷயம் நடந்த சாயந்திரம் தியாகராஜனும், சிவநேசனும் ஒன்றாய்க் கூடியிருந்த போது தியாகராஜன் 'இன்றைய பகல் நடந்த விஷயத்தைப் பார்த்தாயா? நான் ஒருவர் ஜோலிக்கும் போகப்பட்டவனல்ல, அப்படி யிருந்தும் அந்தத் துன்மார்க்கன் என்னை வீணாகச் சண்டைக்கிழுத்து வாது செய்கிறான். நானென்ன செய்யட்டும்? இந்தப் பள்ளிக்கூடத்தை விட்டுப் போவதற்கும் மனமில்லை. ஏனென்றால், நானின்னும் இருக்கப் போவதெல்லாம் எட்டு மாதங்களே. அதன்பிறகு நகரியிலுள்ள கலாசாலைக்குப் போகவேண்டும். இதற் கிடையில் நல்ல பிள்ளையென்று பேரெடுத்துக் கொண்டு போகலாமென்று பார்த்தால் வழியில் அந்தத் துன்மார்க்கப் பயலால் பலவித இடையூறுகள் சம்பவிக்கின்றன. இன்று மத்தியானம் நடந்த விஷயத்தை வடிவுடையம்மை அறிந்தால் என்ன நினைப்பாளோ? என்னுந் திகில் மனதில் வாதிக்கிறது. அவளிடத்தில் அத்தியந்த பிரியம் வைத்திருக்கிறேனென்று உனக்குந் தெரியுமல்லவா? அதெல்லாம் போகட்டும்; மாணிக்கம் என்னைப்பார்த்து 'மடைப்பள்ளித் தொழில் செய்தவனுக்கு வாயைப் பாரடா!' என்றானே, அந்த விஷயம் அவனுக்கு எப்படி எட்டிற்று? அவனுக்கு எட்டியதனால் எனக்கு யாதொரு விசனமுங் கிடையாது. ஆனால் உன்னைத் தவிர வேறு யாருக்கும் அந்த விஷயம் தெரியாதே? அப்படி யிருக்க அவனுக்கு எப்படித் தெரியவந்தது என்கிற சந்தேகத்தினால் உன்னைக் கேட்கிறேன்,' என்று சொன்னான்.

உடனே சிவநேசன் 'தியாகு, அந்த விஷயம் எவ்வாறு அவனுக் கெட்டியது என்பதைப் பற்றி உனக்குத் தெரிவிக்கப் படாதென்றிருந்தேன். அவனும் வெளியிடுவதில்லையென்று எனக்கு வாக்களித்திருந்தான். இப்பொழுது அவனே வெளியிட்டு அவனுடைய சபதத்தைக் காப்பாற்றவில்லை யாகையால் நானதை யுனக்குச் சொல்லக் கடமைப்பட்டவனாயிருக்கிறேன். ஆனால் நான் சொல்லப் போகும் விஷயத்தைப் பொறுமையுடன் கேட்டு மேலொன்றுஞ் செய்யாதிருக்க நீ உறுதி தரவேண்டும். நேற்று சாயந்திரம் நீ வெளியே சென்றிருந்தபோது மாணிக்கத்தின் தோழனாகிய சொக்கலிங்கம் என்னிடம் வந்து ஏதோ நல்ல சமாசாரம் சொல்லுவதற்காக மாணிக்கம் என்னை யழைத்து வரச் சொன்னதாகத் தெரிவித்தான். பகையாளியாயிருந்தும் என்னை அவனாகவே வலியக் கூப்பிடும்போது நாமெனப்படிப் போகாம லிருக்கமுடியும்? உடனே சொக்கலிங்கத்தோடு மாணிக்க மிருந்த அறைக்குப் போனேன். என்னைக் கண்டதும் மாணிக்கம் 'சிவநேசா, வா அப்பா! உன்னோடு நான் பேசி அதிக நாட்களாயின. அந்தப் பயல் தியாகராஜன் வந்ததிலிருந்து உன்னை நான் பகைக்கலாயினேன், உன்னை நான் நெடுநாளாயறிவேன். நாமெல்லாம் இன்னமும் இரண்டொரு வருடம் இங்கே ஒன்று சேர்ந்திருக்க வேண்டியதாயிருக்கும். நான் இந்த வருடம் பரீட்சையில் தேறுவது அப்படி யிப்படித்தான். தியாகராஜன் பரீட்சையில் தேறி வேறிடம் படிப்பதற்காகப் போய் விடுவான். ஆகையினால் அவனை நீ நம்பி யிருப்பது சரி

யல்ல. உன்னுடைய சிறுபிள்ளைத்தனத்தினால் நீதான் என்னை அசட்டை செய்தாலும், நான் உலகிலெல்லாரைப் பார்க்கிலும் வயதில் முதிர்ந்தவன். ஆகவே, நானும் உன் விஷயத்தில் பராமரிக்கையா யிருப்பது நன்ரு யிராது என்று கருதிய சமயம் பார்த்து உன்னை இங்கே யழைத்து வரும்படியாகச் சொக்கலிங்கத்திற்குச் சொல்லி யிருந்தேன். உன்னுடைய சிநேகன் 'நகரிராஜா' இன்றையதினம் தனியே வெளியிற் போகவே உன்னை யிங்கே அழைத்துவரும்படி நேரிட்டது. என்னுடன் சிநேக பாவனை கொண்டிருக்க உனக்குப் பிரியமா? அல்லது எனக்குவிரோதமாக எதுவொன்றையுஞ் செய்யப்பிரியமா?' என்று நீண்டதோர் உபந்யாஸஞ் செய்தான். அவ்வளவையும் பொறுமையாகக் கேட்டுக்கொண்டிருந்த நான், மாணிக்கம், என்னை நீ அநேகநாட்களாக அறிவாய். நான் ஒருவனுடைய ஜோலிக்கும் போவது கிடையாது.

*"பகையென்னும் பண்பி லதனை யொருவன்
நகையேயும் வேண்டற்பாற் றன்று."

என்னும் வாக்கியத்தைக் கடைப்பிடித்தவன் நான். நீ தான் என்னோடு பகைமை பாராட்டி யிருந்த போதிலும் நான் உன்மீது எவ்விதமான வெறுப்புங் கொண்டிருந்தது கிடையாது என்றேன். உடனே மாணிக்கம் என்னைப் பார்த்து சிவநேசா, நீ சொல்

* இ-ள். ஒருவன் பகையென்னுந் தீயகுணத்தை விளையாட்டிலும் விரும்பாதிருக்க வேண்டும் என்பது.

னும் விஷயம் எனக்கு அதிக சந்தோஷத்தை விளை
விக்கிறது. நாமிருவரும் பழைய சிநேகத்தை இன்
றைய தினம் புதுப்பித்ததின் காரணமாகக் கொண்
டாடவேண்டிச் சிலஏற்பாடு நடந்திருக்கின்றன. என்
பதாகச் சொல்லி சொக்கு, என்று கூப்பிட்டான்.
உடனே சொக்கலிங்கம் கையில் ஏதோவொரு புட்டி
யுடன் வந்து சேர்ந்தான். அதைப் பார்த்த நான்
இதென்ன புட்டி யென்றுகேட்டேன். 'ஒன்றுமில்லை;
நாமின்றைக்குச் சந்தோஷமா யிருக்கும் பொருட்டு
இப்புட்டியை வாங்கினேன். இதற்குத்தான் 'உஸ்கி'
யென்று பெயர். நம்மூரில் புளித்த கள்ளைக் குடித்து
விட்டுத் தெருக்களில் தந்தானப் பாட்டுப் பாடுகிறார்
களே, அவர்க ளனுபவிப்பதும் ஒரு ஆனந்தமா?
ஆனந்த மடையவேண்டுமென்றால், சீமையிலிருந்து
நேரா யடைத்துவரும் இந்த உஸ்கியைக் கொஞ்ச
மெடுத்துக் கொள்ளவேண்டும். பிறகு அதுகொடுக்கு
மானந்தத்தை யனுபவிக்க வேண்டும். தெரியாமலா
வெள்ளைக்காரர் ஒவ்வொருவரும் போஜனத்திற்குப்
போகுமுன் உஸ்கியாகிலும், சாராயமாகிலும் சாப்
பிடுகிறார்கள்? தேகத்திற்கு ஆரோக்கியமும், மன
திற்குத் திடனும் தரும்படியான பொருள் இவற்
றைத் தவிர வேறொன்றுண்டோ?' என்று சொன்
னான். அதைக் கேட்ட நான் 'சிவ சிவா' வென்று
என்னுடைய காதுகளை யடைத்துக் கொண்டு, நீ
யிந்த வழக்க முடையவனென்று எனக்குத் தெரி
யாது. இந்த வயதிலேயே இக்கெட்ட செய்கைக்கு
உட்படுவாயானால் பிறகு நீ போகுங் கதியென்ன?
கட்குடிப்பவனுடைய கதியென்னவாகுந்தெரியுமா?

'எஞ்ஞான்றும் நஞ்சுண்பார் கள்ளுண்பவர்' என்றார் நாயனாரும். இதுமாத்திரந்தானா? 'உண்ணற்க கள்ளை உணிலுண்க சான்றோரால், எண்ணப் படவேண்டா தார்' என்றும், 'ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என்மற்றுச், சான்றோர் முகத்துக் களி' என்றும், 'களித்தானைக் காரணங் காட்டுதல் கீழ்நீர்க், குளித்தானைத் தீத்துரீஇ யற்று' என்றுஞ் சொல்லியிருக்கிறார். மது உண்பதினால் உண்டாகுங் கெடுதிகள் ஒன்றா, இரண்டா?

"அறிவை யழிக்குஞ் செயலழிக்கும்
அழியா மானந் தனையழிக்கும்
செறியு மறிஞர் மதியாத
செருக்கை விளக்கு மீன்றாளும்
முறியும் வெறுப்பு மிகவிளக்கும்
முனிவு விளக்கும் பகையஞ்சாக்
குறிகள் விளக்கும் நகைவிளக்குங்
கொள்ளேல் மதுவுண் டலைமைந்தா"

என்று கூறியிருப்பதே போதாதா. இவ்வளவு தீய குணங்களுக்குங் காரணமாயுள்ள வஸ்துவை நாம் தெரிந்திருந்தும் உபயோகித்தோமே யானால் பிறகு அதனால் விளையும் பாவத்திற்குப் பிராயச்சித்தமே கிடையாதென்று பெரியோர் கூறுகின்றார்களே! ஆதலால் இவ்வநுசிதமான காரியத்தைச் செய்யக் கூடாது என்று சொன்னேன். நான் சொன்னவை யெல்லாம் (செவிடன் காதில் சங்கூதியதுபோல்) அவன் செவிக் கேறவில்லை. அவன் தன்னுடைய போக்கில் 'சிவ

நேசா, மது மது வென்று அடித்துக்கொள்கிறயே! மதுவிற்கும், இந்த உஸ்கிக்கும் எவ்வளவு வித்தியாஸ மிருக்கிறது தெரியுமா? இதிலென்ன சேர்ந்திருக் கிறது? திராட்சப்பழ ரஸமும், ஓர் விதத் திராவகமன் னியில் வேறென்றுங் கிடையாது. மேலும் நாம் சதாவா குடிக்கப் போகிறோம்? இல்லை: நானும் இதற்கு முன் சாப்பிட்டது கிடையாது. முதல்முதல் பானம் பண்ணும்போது உன்னையும், சொக்குவையுந் தவிர்த்துப் பானம்பண்ண எனக்குப் பிரியமில்லை. நீ கட்டாயங் கொஞ்சமாகிலும் சாப்பிட்டுத்தான் தீரவேண்டும். இதொன்றுங் கெடுதி செய்யாது' என்று வற்புறுத்தினன். நான் மேலே யொன்றுஞ் சொல்லுவதற்கு வழியின்றி யிருந்தேன். உடனே புட்டியைத் திறந்து ஒரு கிண்ணத்தில் கொஞ்சம் ஊற்றித் தந்தான். நான் தப்பித்துக்கொண்டுபோக மார்க்கமின்றியும், மறுத்தால்யாதுசெய்வானோவென் றஞ்சியும் வேண்டா வெறுப்பாய் வாங்கிச் சாப்பிட் டேன். அவனும், சொக்கலிங்கமும் கொஞ்சமேனும் வெறுப்பில்லாமல் தாராளமாய்ச் சாப்பிட்டார்கள், அதனால் அவர்கள் வெகு அனுபவ சாலிகளென்று தெரிந்துகொண்டேன். கொஞ்ச நேரமானதும், என் னுடைய தலை கிறுகிறு வென்று சுற்றத் தலைப்பட் டது. என்னுடைய புத்தியும் மாறுதலடைந்தது. அப்பொழுது உன்னைப்பற்றி யவர்கள் என்னென்ன வோ கேள்விக ளெல்லாங் கேட்டார்கள். புத்தி மாறுபட்டதால் நீ யெனக்குச் சொல்லியிருந்த விஷ யங்களை யெல்லாம் ஒரு சமயம் சொல்லியிருப்பேன். அதைக்கொண்டுதான் இன்று பகல் உன்னை மடைப்

பள்ளியிலே செய்தவென்று சொல்லியிருக்கவேண்டும். பிறகு எனது அறைக்குப் போனேனோ என்பதும் தெரியாது. சொக்கலிங்கந்தான்கொண்டுவந்து சேர்த்திருக்கவேண்டும். இன்று காலையில் நான் சித்திரையி லிருந்து எழுந்ததும் யாரைப் பார்த்தேனென்று நினைக்கிறீர்? மாணிக்கத்தையும், சொக்கலிங்கத்தையுந்தான். அவர்க ளிரண்டுபேரும் நேற்றிரா நடந்த விஷயத்தை யாருக்குஞ் சொல்ல வேண்டாமென்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டார்கள். அப்படி யிருந்தும் பள்ளிக்கூடத்தில் சொல்லும்படி நேரிட்டது. ஏனென்றால், நான் பயத்தால் வெளியிட்டதையாவது யாருக்குஞ் சொல்ல மாட்டோமென்று உறுதிகூறி, என்னையும் அப்படியே வெளியிடவேண்டாமென்று கெஞ்சி யிருந்தும் அவர்கள் வாக்குத் தவறிவிட்டார்களானபடியினாலும், இப்போது எனக்குச் சொல்லவேண்டிய சந்தர்ப்பம் வந்தபடியினாலும் நானும் வெளிப்படுத்திவிட்டேன்' என்றது மல்லாமல் 'அவர்கள் மூடத்தனத்தினால்செய்த காரியத்திற்காக நீரொன்றுஞ் செய்யாம லிருக்கும்படியாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்' என்றுஞ் சொன்னான். அதைத் தியாகராஜனுடைய மனமோ சாந்த மடையவில்லை. அவர்கள் செய்த அடாத காரியத்திற்காகத் தகுந்த தண்டனை வாங்கித் தரவேண்டுமென்று எண்ணினான்.

அன்றையசாயங்காலம் சொக்கலிங்கத்தைத் தனியாய்ச் சந்திக்கும்படி தியாகராஜனுக்கு நேரிட்டது. அவனைப் பார்த்துத் தியாகராஜன் 'சொக்கலிங்கம் உன்னிடத்தில் பேசவேண்டிய விஷயம் ஒன்றிருக்

கிறது' என்றான். சொக்கலிங்கம் (திடுக்கிட்டு) 'அதென்ன விஷயம்' என்று கேட்க: தியாகராஜன், 'நேற்றிராத்திரி நீயும், மாணிக்கமுஞ்சேர்ந்து சிவநேசனுக்குச் சாராயத்தைக் கொடுத்து அவன் தன்னுடைய புத்திதடுமாறி யிருக்கும் போது அவனுடைய அறையில் கொண்டுவந்து விட்டுப்போனீர்களாமே? இது உங்களுக்குத் தகுமா? அவனுடைய பெற்றோர்கள் கேள்விப்பட்டால் என்ன வாகுமென்றியோசித்தீர்களா? அல்லது இவ்விஷயங்களை நான் பிரதம உபாத்தியாயருக்குச் சொன்னால் உங்கள் கதியென்னவாகுந் தெரியுமா? உங்களிரண்டு பேரையும் பள்ளிக்கூடத்திலிருந்து விலக்குவது மல்லாமல் வேறெந்த பள்ளிக்கூடத்திலும் சேர்க்காதபடி செய்துவிடுவார்களே! நீங்கள் கொஞ்சமேனும் யோசனையில்லாமற்படி செய்த ஓர் காரியத்தினால் உங்கள் ஆயுசபரியந்தம் சங்கடப்பட வேண்டியதாய் நேரிடுமன்றோ? முதலாவது, சாராயங் குடித்தது உங்களுடைய வயதிற்கேற்ற நடவடிக்கையன்று. இரண்டாவதாக அதை உங்களுடைய அறைக்குக்கொண்டு வந்திருக்கப்படாது. அதிலும், இன்னொரு பள்ளித் தோழனுக்கு அவனுடைய மனச்சாட்சிக்கு விரோதமாகக்கொடுப்பது கூடவே கூடாது. இந்த விஷயத்தைக்கேட்டநான் உபாத்தியாயருக்குச் சொல்லாமல் ஒளிப்பேனேயானால் நீங்கள் செய்தகுற்றத்தை நானும் பகிர்ந்துகொள்ள வேண்டியவனாகிறேன்: என்னசொல்லுகிறாய்?' என்று கேட்டான்.

சொக்கலிங்கம் (இவ்வளவையும் பொறுமை யுடன் கேட்டிருந்து) 'என்னப்பா! வீண்பழியையென் கண்மேல் சுமத்தப்பார்க்கிறாய்?' என்று சொல்லிவிட்டு வேறொன்றுஞ் சொல்ல முடியாமல் சற்று யோசித் தான். நானும், மாணிக்கமும் இவ்வளவு சங்கடத்திற் குள்ளாவார்களென்று ஒரு க்ஷணமும் நினைக்கவில்லை. தியாகராஜன் அடித்துக் காட்டிய பிறகுதான் தங்க ளுடைய குற்றத்தை மறைக்கயோசனைகொண்டான். ஒரு குற்றத்தை மறைக்கவேண்டுமானால் பல பொய் கள் சொல்லும் படியான குற்றத்திற்கு உட்பட வேண்டும். அப்படியில்லாவிட்டால் தப்பித்துக்கொள் ளமுடியாது. பார்த்தான் சொக்கலிங்கம், எவ்வாறு தப்பித்துக் கொள்ளுவதென்று ஒன்றும் அவனுக்குத் தோற்றவில்லை. குற்றஞ்செய்வதற்கு அவ்வளவு சீக்கிர த்தில் யோசனை தோன்றுவிடினும், குற்றஞ்செய்யாத ற்குத்திடமென்று உதவமாகு மல்லவா? சொக்கலிங்க மும் தியாகராஜனைப் பார்த்து 'நீ என்மேல் சுமத் திய வீண் அபவாதத்திற்காக நான் உன்னை என்ன வெல்லாஞ் செய்யமுடியும் தெரியுமா? விஷயம் இன் னதென்று அறிந்து கொள்ளாமற்படிக்கு, உனக்குத் தான் பேசத்தெரியுமென்று ஏதேதோ பேசிவிட்டா யே! நானும், மாணிக்கமும் நேற்றையதினம் சோடா சாப்பிட்டுவிட்டு மைதானத்தில் உலாத்திக்கொண் டிருந்தபொழுது சிவநேசன் எவ்விடத்திலிருந்தோ தள்ளாடிக்கொண்டு வரப்பார்த்தோம். அவனுக்குத் தெரியாமல் அவன் போகுமிடத்தைக் கவனித்துக் கொண்டிருந்தோம். திடீரென்று எங்களுடைய அறை

க்கு எதிரிடையில் காலிடறி விழுந்து விட்டான். இதைக்கண்ட நாங்கள் இருவரும் போய் அவனைத் தூக்கியெடுத்து எங்களுடைய அறைக்குக் கொண்டு போனோம். அங்கே கொண்டுபோய் அவன் விழுந்ததின்காரணங் கேட்டபொழுது, அவனால் பேசச்சக்தியில்லாமற்படி யிருந்தான். பிறகு அவனுடைய சுவாசத்திலிருந்து அவன் குடித்திருந்தானென்று எங்களுக்குத்தெரிந்தது. நாங்கள் உடனே எங்களால் கூடியபரிகாரஞ்செய்து அவனுடைய அறையில் கொண்டு போய் விட்டோம். நாங்கள் செய்த உபகாரத்திற்கு நன்றியறிதலான வந்தனம் புரிவதற்குப்பதிலாக எங்கள் பேரில் பழியை யேற்றி எங்களைக் கெடுப்பதற்காகவா பார்த்தீர்கள்? இந்தச் சங்கதியை உடனே மாணிக்கத்திற்குச் சொல்லி உங்க ளிருவரையும் என்ன செய்விக்கின்றேன் பார்!' என்றான்.

தியாகராஜனுக்கும், சொக்கலிங்கத்திற்கும் இவ்வாறு சம்பாஷணை நடந்துகொண் டிருக்கும்போது சிவநேசனும் வந்து சேர்ந்தான். மூவருக்கும் பிரமாதமான வாக்கு வாதங்கள் நடந்தன. பல அத்தாட்சிகளினால் குற்றம் மாணிக்கத்தின் பேரிலும், தன்பேரிலும் சாருமென்று தெரிந்துகொண்ட சொக்கலிங்கம் தங்களை யெவ்வகையிலுங் குற்றவாளிகளாகக் காட்டிக் கொள்ளப்படாதென்று கருதி 'இந்த சமாசாரத்தை வெளியிட்டால் உன்னுடைய ஆப்த நண்பனைத்தான் பள்ளிக்கூடத்தைவிட்டு ஒட்டி விடுவார்கள்' என்றான். அப்பொழுது தியாகராஜன் 'அப்படி யொருக்காலும் முடியாது, உன்னையும்,

மாணிக்கத்தையும் ஒட்டிவிடு திண்ணம். ஆனால் இந்த விஷயத்தை உபாத்தியாயருக்குச் சொல்ல எனக்குப் பிரியமில்லை. நீ சபாபதியினிடத்திலும் ஜாக்கிரதையா யிருக்கவேண்டும். என்னைப்பற்றி என்னத்தை பேச்சு பேசினாலும் காரியம் பிரமாதமாகப் போய் விடும். இன்றைக்கு உடனே போகிறேன். உன்னுடைய சிநேகனிடமும் என்னை மடைப்பள்ளியில் வேலைசெய் தவனென்று நீக்க வீதம் பள்ளிக்கூடத்திலிருந்து தொலைவது நிச்சயம். உங்களுடைய வாய்சதுக்குச் சரியான புட்டி அமைந்ததைப்பற்றி எனக்கு ரொம்பவும் சந்தோஷம். இந்த விஷயங்களை உன்னுடைய சிநேகனுக்குப் போய்ச் சொல்!' என்றான்.

இவ்வாறு சொல்லிவிட்டுத் தியாகராஜன் சிவநேசனுடன்போய்விட்டான். சொக்கலிங்கம் மாணிக்கத்தின் அறையுள் புகுந்தான். மாணிக்கம் உடனே அவனை யெதிர்கொண்டழைத்து 'நாம் நேற்றிரவு செய்த சாகஸம் எனக்கு இன்னும் அடக்கானலைப் பைவிளைவிக்கிறது' என்றான். அதைக்கேட்ட சொக்கலிங்கம் 'நாம் செய்தது சாகஸமா? முட்டாள் தனமல்லவா'வென்று கனைத்தும், தியாகராஜனுக்கும் நடந்த விருத்தாந்தத்தை யெல்லாஞ் சொல்லித் தியாகராஜன் விஷயத்தைப்பற்றி ஒன்றையும் வெளியிடா வண்ணஞ்சொன்னான். அவ்வாறேசெய்வதாக மாணிக்கம் வாக்குறுதி செய்தான்.

அத்தியாயம்—௩.

தியாகராஜன் நடித்தையின் [illegible]

மேல அத்தியாயத்தில் சொல்லிய [illegible] டந்த மறுநாள் அக்காலில், சொக்கலிங்கம் தியாகரா ஜனைச் சந்திக்கவேண்டிப் போனான். அப்பொழுது அவனும், [illegible] செய்த [illegible] வெளியிடக்கூடும் [illegible] கேட்டுக்கொண்டான். "நீ சொல்லிய அர்ப்பதுணை முண்டாவன். என்றான் [illegible] வெளியிட மாட்டேனென்று சொல்லோமே [illegible] சந்தேகம் சொல்ல வேண்டியதில்லை" என்றான் தியாகராஜன். "[illegible] வெளியிடமாட்டேன்" என்று சொன்னான் சொக்கலிங்கம். [illegible] வெளியிடுவதில் [illegible] தொரு [illegible] யென்று தியாகராஜன் அறிந்திருந்தும், சொக்கலிங்கம் சொன்ன [illegible] சந்தோஷப் பட்டான்.

[illegible] தியாகராஜன் சொக்கலிங்கத்தை [illegible] சிவசேகரத்தினிடத்துப் போனான். அப்பொழுது [illegible] தான் [illegible] திருவாசகம், பிரசங்கத்தில்:—

“ அம்மையே யப்பா வொப்பிலா மணியே
அன்பினில் விளைந்தவா ரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே யாய சிவபத மளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

அருளுடைச் சுடரே யளிந்ததோர் கனியே
பெருந்திற லருந்தவர்க் கரசே
பொருளுடைக் கலையே புகழ்ச்சியைக் கடந்த
போகமே யோகத்தின் பொலிவே
தெருளிடத் தடியார் சிந்தையுட் புகுந்த
செல்வமே சிவபெரு மானே
இருளிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

புன்புலால் யாக்கை புரைபுரை கனியப்
பொன்னெடுங் கோயிலாப் புகுந்தேன்
என்பெலா முருக்கி யெளியையா யாண்ட
ஈசனே மாசிலா மணியே
துன்பமே பிறப்பே யிறப்பொடு மயக்காம்
தொடக்கெலா மறுத்தநற் சோதீ
இன்பமே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. ”

என்று பாடித் தியானித்துக்கொண்டிருந்தான். இப்படியே தினந்தோறும் சிவநேசன் தியானித்து வருவான். இவ்விதமாகத் தியானம் முதலானவைகள் செய்யும்படிச் சிவநேசனுக்குப் போதித்தது நம்முடைய கதாநாயகனாகிய தியாகராஜனென்பது சொல்லாமலே யமையும். ஒவ்வொருவரும் நித்திரை நீங்கி எழுந்திருக்கும்போது கடவுளை நோக்கிப் பிரார்த்தனை செய்வது மிகவும் நல்லது. பிரார்த்தனை செய்வதற்குத் 'திருவாசக'த்தில் அமைந்துள்ள அவ்வளவு உருக்கமுடைய பாட்டுகள் பிற நூல்களில் கிடையா. நித்திரையி லிருந்து எழுந்திருக்குஞ் சமயமல்லாமலும், மற்றெல்லாச் சமயங்களிலுமே பகவானை நினைக்கவேண்டியது மக்களுடைய கடமை.

" நின்றாலு மிருந்தாலுங் கிடந்தாலும் நடந்தாலும்
மென்றாலுந் துயின்றாலும் விழித்தாலு மிமைத்தாலும்
மன்றாடு மலர்ப்பாத மொருக்காலு மறவாமை
குன்றாத வுணர்வுடையார் தொண்டராங் குணமிக்கார்,"

என்றும்

" நடக்கினு மோடினும் நிற்கினும்
வேறொரு நாட்டமின்றிக்
கிடக்கினுஞ் செவ்வி திருக்கினும்
நல்லருட் கேள்வியிலே
தொடக்குமென் னெஞ்சம் மனமற்ற
பூரண தோட்டிக்குளே
முடக்குவன் யான்பர மானந்த
நித்திரை மூடிடுமே. "

என்றும் பெரியோர் கூறியது இதனைப்பற்றியே. கிறிஸ்தவர், மகமதியர் முதலிய பிற மதஸ்தர்கள் காலைஜெபமென்றும், மாலைஜெபமென்றும், இப்படி யே போஜனத்திற்கு முந்தியஜெபம், போஜனமுடிந்த பின் செய்யப்படுகிற கிரியைக்குப் போகுமுன் ஜெபம், நித் திரையினின்றெழுந்த ஸோத்திர ஜெபமென்றும் ஏற் படுத்திக்கொண்டு அவ்வாறே யொழுங்காய் நடத்தி வர, அநேக கட்டுப்பாடுகளுக்கு அடங்கிய நம்மு டைய மதஸ்தர்களில் மாத்திரம் பலர் தங்களுடைய கடமைகளைச் செலுத்தாது 'பொய்திகழு முலகநடை யென்சொல்கேன் என்சொல்கேன் பொழுது போக் கே' யென்றவிதமே, பொய்யுடல் மிகுத்தும் பசிப்பக் கத்திடல் பக்கலின் கண்ணுறங்கல்-முதலானவை யிது செய்தபின் தங்களோ லக்ஷ்யத்திற்காக வினை நடைபெற்றுக்கொண்டே காட்சி கொண்டே போக வேண்டும் மோகமூட்டிக் கொள்ளைகளைக் கடைப் பிடித்து அழுதுவரோனம்? இன்னோரது செய்கை பரி தாபிக்கத் தக்கதே!

இங்ஙனம் நம்முடைய தியாகராஜரும் கொஞ்சநேரம் சமயோசிதமே இருந்தார். பிறகு தங்களுடைய பாட கீர்த்தனைகளைப் பற்றி யொருவர்க் கொருவர் பேசிக் கொண்டார்கள். 'அன்றைய ராத்திரி நாமகீர்த்தனத் தின் பொழுது விஷயத்தை நினைத்துக்கொண்டால் எனக்குச் சொல்லமுடியாத ஆனந்தமுண்டாகிறது. அதிலும் உங்களுடைய பூர்வோத்தரங்களை நான் அவர்களுக் குச் சொல்லியிருந்ததைப்பற்றி நினைக்கால் எனக்கு மிக்க சந்தோஷம் உண்டாகிறது. இம்மாதிரியான

பிபர்தங்களுக்கு வருமென்று தெரிந்திருந்தால் நான் போயே யிருக்கமாட்டேன். நம்மீது பகைமை பாராட்டுபவனிடத்தில் நம்பிக்கை வைப்பதின் தீமையை இப்பொழுதுதான் அறிந்தேன்' என்றான் சிவநேசன். 'அதைப்பற்றி இன்னுமா நினைத்துக்கொண்டிருக்கிறாய்? மறந்துவிடு. 'நன்றல்ல தன்றே மறப்பது நன்று' என்று நாயனாருஞ் சொல்லியிருக்கவில்லையா? 'நடப்பதெல்லாம் நன்மைக்கே' என்னும் நீதியைக் கடைப்பிடித்தவன் நான். முதற்கண் கெடுதியாகத் தோன்றினும் ஒவ்வொரு கெடுதியும் ஒவ்வொரு நன்மையைக்கொண்டுதான் முடியும். அதேபோல மாணிக்கம் எனக்கும், என்னால் உனக்கும் கெடுதி செய்விக்க உத்தேசித்தான். அவ்வுத்தேசம் கடைசியில் நன்மையாய் முடிந்து, அவனே நம்முடைய வலையில் சிக்கி, நம் சொற்படி நடக்கவேண்டிய நிலைமையில் கொண்டுவந்துவிட்டது. என்றைக்காகிலும் ஒரு நாளைக்கு அவன் நடத்திய காரியம் வெளிவராமற் போகாது. அப்பொழுது அஃது எப்படி முடியுமோ? அவனுடனும், சொக்கலிங்கத்துடனும் போகுமோ? அல்லது நம்மையுந் தொடருமோ? யார் கண்டார்கள்? நாம் தர்மவழியில் க்ஷேமமேயாகும். நடக்கிறது நடந்து தீருகிறது' என்று சொல்லி விட்டுத் தியாகராஜன் தன்னுடைய அறைக்குப் போய்விட்டான்.

அன்றைய சாயங்காலம் தியாகராஜன் பள்ளிக்கூடத்திற்கு அருகாமையிலிருந்த உத்தியான வனத்திற்குச் சென்றான். அந்தத்தோட்டம் அவ்வூரிலுள்ள

சில பெரிய மனுஷர்களால் உண்டாக்கப்பட்டது. அதில் பலபல விதமான மரங்களும், பூஞ்செடிகளும் ஒவ்வோர்புறம் அமைக்கப்பட்டிருந்தன. ஓரிடத்தில் அழகிய தடாகமொன்றிருந்தது. மற்றோர் புறத்தில் மணல் பரப்பிய மைதானமும், அதில் அங்குமிங்கும் பள்ளிப்பிள்ளைகளும், பிறரும் பழகுவதற்காக வேண்டிச் சில தேகாப்பியாஸக் கருவிகளும் அமைக்கப்பட்டிருந்தன. விடுமுறை நாட்களிலும், பள்ளிக்கூட நேரமல்லாத காலங்களிலும் பிள்ளைகள் அவ்விடத்தில் போய்ப் பலவிதமான விளையாட்டுகள் விளையாடுவதுண்டு. அது காலையில் விளையாடத் தெரியாத சிறு பிள்ளைகளும், பெண்பிள்ளைகளும், அவ்வுத்தியானவனத்தில் உலாவவந்திருக்கப்பட்டவர்களில் சிலரும்வேடிக்கைபார்ப்பதற்காக அவ்விடம் போவதுண்டு. இந்த தேக அப்பியாஸக்கருவிகளில் பிள்ளைகளைப்பழக்கி வைப்பதற்காக ஒரு உபாத்தியாயரும் நியமிக்கப்பட்டிருந்தார். அவர்பெயர் நாராயணசாமி நாயுடு: கட்டமைந்த சரீரத்தையுடையவர். அந்தக் கருவிகளில் அதிக திறமையுடன் விளையாடக் கூடியவர் பல விடங்களில் தன்னுடைய சாமர்த்தியங்களைக் காட்டி "மெடல் பரிசுகள்" பெற்றவர்.

நாம் மேலேகுறித்த தினத்தில் இன்னும் உபாத்தியாயர் அந்தவிடத்திற்கு வந்துசேரவில்லை. பள்ளிக்கூடம் அரை நாளுக்குமேல் சாத்தப்பட்டது. ஆகவே நம் கதாநாயகன் சற்று முன்னதாகவே அவ்விடத்திற்குப்போய் பலவிதமான விளையாட்டுகளைச் செய்து

கொண்டிருந்தான். இவன் இப்பள்ளிக்குவந்து கொஞ்சமாதங்களே யாயினும், உபாத்தியாயருக்குந் தெரியாத சில அரிய விளையாட்டுகளைத் தனது புத்தி யூகையினாற் செய்து பழகிவந்தான். எல்லாவிஷயங்களிலும் திறமைவாய்த் துள்ளவனா யிருந்ததுபோல இத்தேகாப்பியாஸ விளையாட்டிலும் திறமை வாய்த்துள்ளவனாகவே காணப்பட்டான். இவன் இந்தப்பாடசாலைவந்து சேருவதற்குமுன் மாணிக்கம் இந்த விளையாட்டில் நல்ல பெயர் எடுத்திருந்தான். படிப்பில் ஒன்று மில்லாவிட்டாலும் இதில் நல்ல பெயரெடுத்திருந்தது வெகு சிலாக்கியமென்றே சொல்லலாம்.

வடிவுடையம்மைக்குப் பிள்ளைகள் விளையாடும் இந்த விளையாட்டுகளைப் பார்ப்பதற்கு ரொம்பவும் பிரியம். அதிலும் தான் எவன் மாட்டு அதிக நேசங் கொண்டிருந்தாளோ அவன் (தியாகராஜன்) இந்த விளையாட்டிலும் மிகுந்த திறமைவாய்த்திருந்து நேர்த்தியான அப்பியாஸங்களை யெல்லாஞ் செய்துவந்தது அவளுக்கு நேத்திரானந்தத்தை விளைவித்தது.

வடிவுடையம்மையின் பேரில் பள்ளிக்கூடத்திலிருந்த ஒவ்வொரு ஆண், பெண்பிள்ளைக்கும் பிரியம். இப்படி ஒவ்வொருவரும் அவள் பேரில் பிரியங் கொண்டிருந்ததற்குக் காரணம் அவளுடைய நன்னடக்கையும், நற்குணமுமே. 'பெண்ணென்றால் வடிவுடையம்மையைப் போலல்லவா இருக்கவேண்டு' மென்று பள்ளிக்கூடத்து உபாத்தியாயர்களுஞ்சொல்லிக்கொள்ளுவது வழக்கமென்றால், அப்பெண்ணின்

ஆனந்தனைப்பற்றி நான் அதிகம் எழுதவில்லை. பிரயோசனமேனெனில் அவனுடைய குணத்தை உத்தேசித்து மாணிக்கம் அவனை நேசிக்கவில்லை. அவன் நேசித்து வந்ததற்கு வேறு காரணமுண்டு. அவனுடையம்மை அம்பலவாண முதலியாருக்கு சகோதரியென்பதும், அவர் மிகுந்த தனவந்தரென்பதும் அவனுக்குத் தெரியும். தானும் ஓர் தனவந்த வியாபாரியின் மகனாகையால் எப்படியும் தனக்கும், அவனுக்கும் ஓர்கால் சம்பந்தமேற்படலாமென்பதை யுத்தேசித்தே மாணிக்கம் அவனை நேசித்து வந்தான். என்றைக்காகிலும் அவனுடையம்மைக்கு, சொக்கழித்தப் பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டுபோக நேரிட்டால், மாணிக்கம் வழித்துணையாகப் போவதுண்டு. அவன் செய்யும் உதவிக்காக அம்பலவாண முதலியார் அவனுக்கு வந்தனஞ் செய்வதுண்டு.

இப்பொழுது தியாகராஜன் தான் விளையாடுமிடத்திலிருந்து சுற்றிப்பார்த்தான். ஓர் புறத்தில் தன்னுடைய பிரியமான சிவவடிவுடையம்மையையும், அவனுக்கருகாமையில் அவனுடன் வார்த்தையாடிக்கொண்டிருக்கும் மாணிக்கத்தையுங் கண்டான். அவன் மனம் அந்தச் சமயத்திலெப்படியிருந்ததென்பது நம்மால் சொல்லக்கூடியதன்று. பொறாமையென்பது மற்ற விஷயங்களுக்குப் பொதுவாகக் கூறப்பட்டாலும், இதற்கு அது சிறப்பாயமைந்ததென்று சொல்லலாம். மாணிக்கத்தைப் போலல்லாமல் தான் அப்பெண்மணியை அவளுடைய குணத்தால் தனக்கேற்றதாகல்விக்கும், நற்குணத்திற்குமே நேசித்து வந்தான்.

அவளைத் தனது காதலியா யடையவேண்டுமென்கிற எண்ணம் முதற்கண் அவனுக்குச் சிறிது மிருந்ததில்லை. ஆனால் அவளைக்கண்ட மாத்திரத்தில் ஓர்விதமான உற்சாகம் மனத்தில் தோன்ற, "அவளையோர் பெண்தெய்வமாக வணங்கலா" மென்று எண்ணினான். நாளடைவில் அவ்வெண்ணம் சிறிது மாறி "ஒரு சமயம் எனக்கதிர்ஷ்டமிருந்து அவளைக்கலியாணஞ் செய்துகொண்டால் நான் எவ்வளவு பாக்கியவானாயிருப்பேன்?" என்கிற எண்ணம் உதிக்கத் தொடங்கிற்று. எண்ணம் மட்டில் உதித்திருந்ததேயொழிய ஒருவராகிலும் வெளியிட்டவர்களல்ல. ஏனென்றால், வடிவுடையம்மைக்கு இன்னும் பருவமமையாமலிருந்ததனாலேயே. ஆகவே, காதலாகிய வித்தை மனத்தின்கண் நிறுவி அது பயிராகித் தளிர்த்துவருஞ் சமயத்தில் இன்னொரு கொடியைத் தாவப் பார்க்கத் தியாகராஜனுக்கு ஆற்றொணா விசனம் வரத் தலைப்பட்டது. கொஞ்சநேரம் ஒன்றுஞ் செய்யாமலிருந்தான். மறுகணம் தானதை மறக்கத்தலைப்பட்டான்.

அவ்வுத்தியாவன மைதானத்தின் மற்றொருபுறத்தில் வடிவுடையம்மையும், மாணிக்கமும் என்ன செய்து கொண்டிருந்தார்க ளென்பதைக் கவனிப்போம்! அவர்களிரண்டுபேரும் கீழ்க்கண்டவாறு சம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள்.

வடிவுடையம்மை—தியாகராஜனோடு நீ சிநேகஞ் செய்து கொண்டாயா?

மாணிக்கம்—இல்லை: அவனுடைய சிநேகமும் எனக்கு வேண்டாம்.

வடி—அவருடைய சிநேகம் வேண்டாமென்று சொல்லுவதற்கு ஏதாகிலுங் காரணமுண்டா?

மாணி—ஆம், அதற்குத் தகுந்த காரணமுண்டு.

வடி—அவர் பள்ளிக்கூடத்தில் படிப்பிலும் நற்குண நற்செய்கையிலும் நல்ல பெயரெடுக்கிறாரென்பதில் பொறாமை கொண்டா?

மாணி—அம்மாதிரியான பொறாமைக் குணம் என்னிடத்தில் கிடையாதே!

இவ்வாறு வார்த்தையாடிக் கொண்டே இவ்விருவர்களும் தியாகராஜன் நின்றிருந்த விடத்திற்குச் சமீபத்தில் வந்தார்கள். அந்தச் சமயத்தில் தியாகராஜன் தன்னுடைய திறமைகளைக் காட்டுவதற்காக ஆயத்தமாய் நின்றிருந்தான். "அங்கேபார்! மாணிக்கம், தியாகராஜ ஆயத்தமாய் நிற்கிறார்!" என்றாள் வடிவுடையம்மை. "நல்லது! அவன் விளையாடுவதைப் பார்ப்போம்" என்று சொல்லிக்கொண்டே மாணிக்கம் வடிவுடையம்மையை மற்றொரு புறத்திற்கு அழைத்துப்போனான். அங்கே போனதும், மறுபடியும்,

வடி—மாணிக்கம், நீ தியாகராஜோடு சீக்கிரம் சிநேகமாவனை கொண்டாடுவாயென்று நம்புகிறேன்.

மாணி—வடிவு, அதைப்பற்றி நான் ஒன்றுஞ் சொல்லமாட்டேன்.

வடி—அப்படியானால் அதற்குக் காரணங்கூறு.

மாணி—காரணங் கூறும்படியாய்த் தயவுசெய்து என்னைக்கேட்காதே!

வடி—நீ காரணஞ் சொன்னாலொழிய நான் சம்மத மடைய மாட்டேன்.

மாணி—ஆனால் நான் சொல்லுகிறேன்; நான் சொல்லும் விஷயத்தை ஒருவருக்கும் வெளியிடக் கூடாது.

வடி—நான் யாருக்கும் சொல்லமாட்டேன். அதென்ன விஷயம்? சொல்!

மாணி—தியாகராஜன் ஒரு தாழ்ந்த வகுப்பான். என்னுடைய ஊர் நகரிக்குச் சமீபமென்பது உனக்குத்தெரியு மல்லவா? அவ்வூரில் அவனோர் அநாதை. அவனுக்குத் தாய்தகப்பன் கிடையாது. யாரோ ஒரு பெரிய மனுஷன் அவன்மேல் இரக்கங்கொண்டு தருமத்தின் பொருட்டாக அவனை இப்பாடசாலைக் கனுப்பிவைத்திருக்கிறார்.

வடி—இவ்வளவு தானா; இன்னு மேதாகிலுமுண்டா?

மாணி—நான் சொன்னது போதாதா? இன்னமுமா அவனைப்பற்றிச் சொல்லவேண்டும்?

வடி—நான் உன்னைப்போல் ஆண்பிள்ளையாயிருந்திருப்பேனே யானால் அநாதைப்பிள்ளையாகிய தியாகராஜன்மேல் பெரிதும் பரிதாபங்கொண்டு என்னால் கூடிய உபகாரத்தைச் செய்வேன். பெரிய மனுஷர்கள் வீட்டுப் பிள்ளைகள் அப்படித்தான் செய்யவேண்டும். அன்றியும், அவர் கல்வியில் புத்தி சாதுரியமானவரானபடியினால் அது பற்றியாவது அவரைச் சன்மானிக்கவேண்டாமா? "எக்குடிப்பிறப்பினும் யாவரே யாயினும் அக்குடியிற் கற்றோரை வருகவென்பார்" என்று சொல்லியிருக்கவில்லையா? கல்வி தானே பிரதானம்?

மாணி—இன்னொரு விஷயமிருக்கிறது. அதைச் சொல்லுவதற்குப் பயமாயிருக்கிறது. என்னவாயிருந்தாலும் நன்மானங் குலமானம் என்பவற்றை நான் காப்பாற்றவேண்டியவளாயிருக்கிறேன். அவனைச் சரிசமானமாக நடத்த எனக்குப் பிரியமில்லை. அஃது ஒரு காரணத்தைப்பற்றியே. இன்னொரு தடவை நான் சொல்லுவதை யாருக்கும் வெளியிடமாட்டேனென்று உறுதியளித்தால் நான் இன்னமும் சில விஷயங்களை அவனைப் பற்றிச் சொல்லுவேன்.

வடி—நீ சொல்லப் போவதை நான் யாருக்கும் வெளியிடமாட்டேன். பயமில்லாமற் சொல்!

மாலி—ஒரு சமயம் அவன் பரிசாரகனாக ஓர் சத்திரத்தில் வேலை செய்திருந்தான். அப்பொழுது அந்தச் சத்திரத்திற்குச் சாப்பிடப் போகும் பலரும் அவனையறிவார்கள். என்னதான் அவனுடைய பதவி பிறருடைய பொருளுதவியின்பேரில்

பிறகு யாதினபோதிலும் அவன் செய்த தொழிலை உத்தேசிக்க அவனோடு நெருக்கங்கொள்ள எனக்குப் பிரியமில்லை.

வடி — (கொஞ்சநேரம் ஒன்றுஞ் சொல்லாம லிருந்து பிறகு) அவர் பரிசாரக வேலை செய்தவராகத் தோற்றப்படவில்லையே! அரச குமாரனைப்போல வடிவழகுடையவரா யிருக்கிறார். இந்தப் பள்ளியி லிருக்கும் பிள்ளைகளில் அவரைப்போல் அழகுடையவர் ஒருவருங்கிடையாது. நீ சொல்லுகிற பிரகாரம் விதிவசத்தால் ஒரு சமயம் பரிசாரகத்தொழில் செய்திருந்தாலும் அதனாலென்ன இழிவு? அஃது எனக்கொன்றுங் குற்றமாகத் தோற்றவில்லை,

என்று சொல்லிக்கொண்டே தியாகராஜன் நின்றிருந்த விடத்தை வடிவுடையம்மை நோக்கினாள். "வெகு நேர்த்தி! மாணிக்கம்! அந்த அருமையான விளையாட்டைப்பார்" என்றாள். இவ்வாறு வடிவுடையம்மை சொன்னதையும், தியாகராஜன் விளையாடிய அற்புதமான விளையாட்டையும் பார்த்து மாணிக்கத்திற்கு மனப்புழுக்க முண்டாயிற்று. அதை யறியாத வடிவுடையம்மை, "மாணிக்கம்! தியாகராஜன் இந்த விளையாட்டிலும் இவ்வளவு திறமைவாய்ந்தவரென்று நான் நினைக்கவே யில்லை. மைதானத்தின் நாலா பக்கங்களி லிருந்தும் ஜனங்கள் அங்கே போகிறார்கள். நாமும் போவோம் வா" என்று கூப்பிட்டாள்;

'எனக்கு வரப் பிரியமில்லை; வேண்டுமென்றால் நீ போ!' என்றான் மாணிக்கம். 'அதெல்லாம் உதவாது; நீ வந்துதான் தீரவேண்டும். இதில் கூடவா பொறாமை கொள்ளுவது? 'எல்லார்க்கும் ஒவ்வொன் றெளிது' என்று சொன்னதுபோல் உன்னைப்போல சில விளையாட்டுகள் தியாகராஜனால் ஆட முடியாது. ஆனாலும் அவன் ஆடுவதிலிருந்து புதிதாக நீ ஏதாவது தெரிந்து கொள்ளலாம் வா' என்றாள் வடிவுடையம்மை. "நீ எவ்வளவு வருந்தி யழைத்தாலும் நான் வரமாட்டேன்" என்று மாணிக்கம் ஒரே பிடிவாதமாய்ச் சொன்னான். ஆனால் நான் போய்வருகிறேனென்று சொல்லிவிட்டு வடிவுடையம்மை அந்த விடத்திற்குப் போனாள். அவள் அந்த விடத்திற்குப் போனதும், உபாத்தியாயர் நாராயணசாமி நாயுடு வந்து சேர்ந்தார். தனக்குத் தெரியாத சில விளையாட்டுகளைத் தியாகராஜன் விளையாடினதைப் பார்த்துப் பெரிதும் சந்தோஷங்கொண்டார். அவன் செய்த அவ்வருமையான விளையாட்டுகளைப் பழகுவதற்கு உபாத்தியாயர் விளையாட்டுக் கருவியிடத்திற்குப் போனார். உபாத்தியாயரால் அவ்விளையாட்டுகள் ஆட முடியவில்லை. தியாகராஜனை இன்னமுஞ் சில விளையாட்டுகள் காட்டச்சொன்னார். அதி அற்புதமானவையும், இதற்கு முன் பிள்ளைகள் பார்த்திராதவையுமான விளையாட்டுகளை விளையாடிக் காட்டினான். அந்தச்சமயத்தில் அக்கூட்டத்தில் ஒரு பையன் "மாணிக்கம் எங்கே?" என்று கேட்டான்.

சொக்கலிங்கம் அந்தக் கூட்டத்தில் நின்றிருந்தான். இந்தக்கேள்வி பிறந்ததும், அவன் மாணிக்கத்தைத் தேடப் புறப்பட்டான். கடைசியாகக் குளத்தோரத்தில் உட்கார்ந்திருந்த மாணிக்கத்தைக்கண்டு,

சோக்—அவனைப் பார்த்தாயா?

மாணி—எவனை?

சோக்—அவன்தான் அந்தப் பரிசாரகப் பயல்.

மாணி—சொக்கு! இன்னொருதடவை அந்தப் பெயரைச் சொல்லாதே! ஆபத்திலகப்பட்டுக்கொள்ளுவோம்.

சோக்—நமக்குள்ளே தான் அந்தப்பெயரைச் சொல்லிக்கொள்ளுவோமே யொழிய, வேற்று மனுஷாளிருந்தால் நான் சொல்லுவேனா? அவனைப்பார்த்தாயா?

மாணி—இல்லை, என்ன விசேஷம்?

சோக்—விஷயத்தை என்னவென்று சொல்லுகிறது? அவன் செய்யும்படியான அற்புதமான அப்பியாஸங்களுக்குமுன் உன்னுடைய விளையாட்டுகள் எவ்வளவு? சில குறும்பன்களெல்லாம் மாணிக்கம் மாணிக்கம் என்று உன்னைத்தேடிக் கொண்டிருந்தார்கள். நான் உடனே ஓடிவந்து விட்டேன்.

மாணி—அந்தப் பையன் ஒரு பெரிய சனியனாகவல்லவா வந்தாரம்பித்திருக்கிறான்? எல்லாப்பிள்ளைகளும், பெண்களும் அவன் சார்பாய்ப் போய்விடுவார்களே என்ன செய்வது?

சோக்—அவனுடையபூர்வோத்தரத்தை உடனே எல்லாப்பிள்ளைகளுக்குஞ் சொல்லிவிடுவதுதான் சரியான பரிகாரம். அப்பொழுது எல்லோரும் அவனைக்கேலிசெய்ய வாரம்பிப்பார்கள். கிட்டவும் நெருங்கிச்சிநேகிக்க மாட்டார்கள்.

மாணி—அது கூடவே கூடாது; ஜாக்கிரதை! நம்முடைய கௌரவமெல்லாம் அவ்விஷயத்தில்தான் சிக்கியிருக்கிறது.

சோக்—வடிவுடையம்மையும் அவன் சார்பாயிருப்பதைப் பார்த்தால் எனக்கும் வயிறு எரிகிறது. அந்தப் பெண்ணுக்காகிலும் அவனுடைய பூர்வோத்தரத்தைச் சொல்லிவிடு.

மாணி—அவைகளை அந்தப் பெண்ணுக்குச் சொன்னேன். அதனால் அவன்பேரில் ஏற்கெனவேயிருந்த பிரியம் அதிகப்பட்டதாகத் தெரிகிறது.

சோக்—நடக்கிறதுபோல் நடக்கட்டும்.

கூடாவொழுக்கமெல்லாந் திரண்டு உருவமாயமைந்த மாணிக்கம் அதற்குமேல் ஒன்றுஞ் செய்யத் தெரியாமலிருந்தான். பிறகு இவர்களிரண்டுபேரும் தியாகராஜனை யெந்தவிதத்தில் கெடுக்கலாமென்கிற எண்ணத்தோடே தங்களுடைய இருப்பிடஞ் சென்றார்கள்.

அங்கே தியாகராஜன் தன்னுடைய சாமர்த்தியங்களையெல்லாம் காட்டிக்காட்டிப் பார்க்கவந்திருந்த ஜனங்களையும், உபாத்தியாயரையும் மகிழ்வித்தான். உபாத்தியாயர் நாராயணசாமி நாயுடு தியாகராஜனுடைய தோளைத் தட்டிக்கொடுத்து உன்னைப்போல இச்சிறுவயதில் புத்திசாலியையும், சமர்த்தனையும் நான் இது வரையில் கண்டதுமில்லை கேட்டதுமில்லையென்று புகழ்ந்துபேசி அவனுடைய விடுதிக்கு அனுப்பினார். அன்றைய சாயங்காலமெல்லாம் அவ்வூர் எந்த மூலையிலும் தியாகராஜனைப்பற்றிய பேச்சாகவே யிருந்தன.

அத்தியாயம் - 6.

பால விவேக சபை.

ஜகன் மோகன நாடகம்.

மேல் அத்தியாயத்திற் கூறிய விஷயங்கள் நடந்து நான்கு மாதங்களாயின. இதற்குள் பலவித மாறுதல்கள் உண்டா யிருந்தன.

முதலாவதாக, வடிவுடையம்மை பரிபக்குவமடைந்து மூன்று மாதங்களாயின. புத்தியடைந்தும் தற்காலத்திய வழக்கம்போல் பள்ளிக்குப் போய் வாசித்து வருவதை நிறுத்தவில்லை, அக்காலத்தில்

இவ்வித நிர்ப்பந்தங்கள் கிடையாவென்பதும், பெண்கள் தங்களுடைய கற்பைத் தங்களுடைய பத்தி வல்லமையினாலேயே காப்பாற்றிக்கொள்ள வேண்டுமன்றி மதிலும், வாயிற் காவலும் யாதொரு பிரயோசனத்தையும் தராவென்பதும் முன்னே கூறப்பட்டன. கற்பைக் காத்துக்கொள்ளுந் திறம் எல்லாப் பெண்களுக்கும் பொதுவாயமையலாம். ஆனால் கல்வி கற்றவர்களுக்கே அஃது அதிசுலபமாக ஏற்படும். ஆனது பற்றியே பெண்களுக்குக் கல்விகற்பிப்பது பெரிதும் அவசியமாமென்று மீண்டும் வற்புறுத்திக் கூறலாயினோம். நம் நாட்டுச் சனங்களிற் சிலர் "பெண்களுக்குக் கல்விகற்றுக்கொடுப்பதனால் அவர்கள் கெட்டுப்போகிறார்கள்" என்று சொல்லுகிறார்கள். ஒன்றிரண்டு அறிவிலாப் பெண்கள் தங்களுடைய இளங் கல்வியினால், பிறகு சேரிடுஞ் சதியை போதாக் கெட்டுப்போனதைக் காரணமாகக்கொண்டு பெண்களுக்கே கல்வி கூடாதென்று இவ்வாறு கூறுவது, 'நெருப்பினால் வீடு பற்றிக்கொள்ளுகிறபடியால அடுப்பே மூட்டக் கூடாது' என்று கூறும் மூழுமூடக் கூற்றை நிகர்க்கும். ஆகையால், இவைகளை ஆர அமர யோசித்துப் பெண்களுக்குக் கல்வியைப் புகட்டிச் சுதந்தரத்தைக் கொடுப்பது உசிதமாமென்பது வெள்ளிடை மலைபோல் விளங்குகின்றது.

நிற்க, மன்மதன் திரையிட்டு மூன்று மாதமேயாயினும் இப்பொழுது நம்முடைய கதா நாயகியாகிய வடிவுடையம்மையின் சரீரம் விளங்கும்படியான வனப்பையெடுத்துச் சொல்லுவதென்றால் அது நம்

முடையகாரத்திற் கப்பாற்பட்டதா யிருக்கிறது. கவிச் சக்ரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தர் ஓர்கால் அரம்பை யை வர்ணித்த வருணனைகளே கூறுமிடத்து ஒக்கு மோ, ஒவ்வாது போமோ என்கிற சந்தேக மேற்படு கிறது. ஆயினும் அவ்வருணனைகளிற் சில நம்முடைய கதா நாயகிக்குப் பொருந்தவுங் கூடுமெனக் கருதி அவைகளை நாம் நேராய் அப்படியே எழுதுகிறோம். அவைகளிற் பொருத்தமுடையவற்றை நம் வாசகர் களே தெளிந்து கொள்வார்களாக! அவை,

"ஓடிப் போமி ருடைவர்க
    ளுயிரை யிழவா தன்றியரன்
தேடிக் கோண்மி னென்பனபோற்
    சிலம்பு புலம்பும் பதத்தாள்
ஆடற் கதலி யினந்தண்டி
    னழகை யழிக்குங் குறங்காள்
வீடுற் றெவரும் விரும்புமெழில்
    விளங்கு மல்குற் றடத்தாள்.

வனவா சச்சீர் மாதவரும்
    வானு ளோரு மற்றவரும்
மனமா லுற்று விழுந்தழுந்தும்
    வளஞ்சே ருந்திச் சுழியாள்
தனமா மலையைத் தாங்குவதோ
    ரில்லை யாகி னில்லாதேன்
றனுமா னத்தா லுண்டாக
    வடுக்கு மென்னு மிடையாள்.

பூணிற் பொலிந்து புடைபரந்து
பொங்கி யெழுந்த முலையுலகைக்
காணிற் கொல்லு மென்றவற்றின்
கண்ணை மறைத்த துகிலாள்
சேணிற் சுடர்சீ ராபரணந்
திகழத் திகழுங் கழுத்தாள்
வாணித் திலத்தி னிரைபதித்து
வைத்த பவள வாயாள்.

நீண்டு பரந்து குழையோடு
செருக்கி மதர்த்த கண்ணாள்
பூண்டு கொலையிற் புரிசாபப்
புருவத் தாள் பூரித்தல்
மாண்ட மதியோ னுதலாள்
மலர்த்தா மரைபோல் முகத்தாள்
ஈண்டு மலரு நறும்புகையு
மின்றிக் கமழுங் குழலாள்."

என்பனவாம். இவ்வருணனை லக்ஷணங்களுக்கு அவளுடைய வனப்பானது இலக்கியமா யிருந்தது. அவளை இப்பொழுது பார்த்த ஆண்களும், பெண்களும்,

"புண்டரிக மாதோ புனமயிலோ பொற்கொடியோ
அண்டர் கடைந்த வமிழ்தோ வநன் சலைவயோ
தண்டதர னிட்ட சகத்தினைத்தா னீடழிப்பான்
கொண்டதொருகோலமோகோலத்தின்கொள்கலமோ"

என்று பழிச்சா (துதிக்கா) திரார்கள். 'இவளைச் சதியாக வடையும் புருடனே பாக்கியவான்' என்பதாகவுஞ் சிலர் சொல்லிக்கொண்டார்கள். நாம் ஏற்கனவே சொல்லிய பிரகாரம் வடிவுடையம்மை பள்ளிக்குப்போய் எப்பொழுதும்போல் அதிக சிரத்தையாகப் படித்துவந்தாள்.

இப்படியிருக்கும்பொழுது ஏதோவிசேஷத்தையுத்தேசித்துப் பாடசாலை ஒரு பட்சத்திற்குச் சாத்தப்பட்டது. மாணிக்கம், சொக்கலிங்கம், தியாகராஜன், சிவநேசன் ஆகிய இவர்களைத் தவிர மற்றப் பிள்ளைகளெல்லாம் தங்கள் தங்களுடைய பெற்றோர் முதலானவர்களைப் பார்க்க ஊர்களுக்குப்போய்விட்டார்கள். மேலே கூறப்பட்ட நால்வரும் போகாததற்குக் காரணம்:—மாணிக்கத்திற்குத் தன் ஜயேஷ்டமாகத் திரியப் பிரியம். தன்னுடைய தகப்பனிடத்திற்குப் போனால் அவ்விதமாகத் திரிய முடியாது. அவனுடனே திரியச் சொக்கலிங்கத்திற்குப் பிரியம். அதனால் தன் பெற்றோர்களைப் பார்க்க வேண்டுமென்கிற ஞாபகமும் அவனுக்கில்லை. தியாகராஜனுக்குப் போக்கிடமில்லாததினால் அவன் பள்ளிக்கூடத்திலேயே தங்கிவிட்டான். அன்றியும் வீண் காலம் போக்கித்திரிய மனமின்றி நல்ல நூல்களைப் பயிலவும், நல்ல பிரவர்த்தனையாகக் காலங்கழிக்கவுமே அவன் வேறிடங்களுக்குஞ் செல்லவில்லை. அவனுடைய தோழனாகிய சிவநேசனும் படிப்பினிடத்தில் அதிகக் கவலையுள்ளவனானதையால் ஊருக்குப் போனால் விளையாட்டுப் பராக்கில் கற்றதை யொரு

சமயம் மட்டுந்தவிடக்கூடும், அதனால் சமீபத்திலிருக்கும் பரீட்சையில் தேறுமற் போய்விடுவேனே வென்னும், பரீட்சை நெருங்கிவந்து வரும் விடுமுறையில் ஊருக்குப் போகாமலே சென்னையில் நின்று விட்டான்.

இவ்விடுமுறை நாட்களுக்கிடையில் சென்னபுரத்தில் பலநாட்களாய்ப் பழகிவந்த 'பாலவிநோத சபை' யாரால் புதிதாக ஓர் நாடகம் நடத்திக் காட்டப் போவதாக வதந்தி ஏற்பட்டது. இந்த நாடகத்தில் சேர்ந்திருந்தவர்களெல்லாம் மெத்தப் படித்த மனுஷாள். இப்பொழுது சென்னையிலிருந்துவரும் 'சுகுண விலாஸ சபை' யாரைப் போன்றவர்களென்று சொல்லலாம். அந்தச் சபையில் தியாகராஜனொரு சேர்ந்திருந்தான். அவன் அதிற் சேர்ந்திருந்தது தன்னுடைய பள்ளித் தோழனாகிய சிவநேசனுக்குந் தெரியாதென்றால் வேறு யாருக்குத்தான் தெரிந்திருக்கும்? இப்பொழுது நடக்கவேற்பட்டிருக்கும் நாடகத்தில் தியாகராஜனுக்குக் கதாநாயக பாத்திரம் கொடுத்திருந்தது. அவனுடைய தேகலக்ஷணத்தையும், குரலினிமையையும், புத்திசாதுரியத்தையும் கவனித்தே அப்பாத்திரம் கொடுக்கப்பட்டதென்றே சொல்லலாம். நடக்கவேற்பட்டிருக்கும் நாடகத்தின் சாராம்ஸமாவது:—

'பூமண்டலத்தை ஒரு குடைக்கீழ் தனியரசாட்சி செய்துவந்த வெற்றிவீரவர்மனென்னும் ஓர் அயோத்தி மன்னன் தன்னுடைய அதிபால்ய திசை

யில் கற்றோர்களுடன் பழகித் 'தந்தைதாய் தமர்தார மகவெனு மிவையெலாஞ் சந்தையிற் கூட்டம்' என்பதை யோர்ந்து, இல்லறத்தை நல்லறமன்று என்பதாக மதித்துப், பெண்களைக் கனவிலும் நினையாதவனாய் இராச்சிய பரிபாலனஞ் செய்துவந்தான். அப்படியிருக்கையில் அவ்வரசன் ஒருநாள்,

'மாநிலங்கா வலனுவான் மன்னுயிர்காக் குங்காலைத்
தானதனுக் கிடையூறு தன்னாற்றன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தாற் கள்வரா லுயிர்தம்மால்
ஆனபய மைந்துந்தீர்த் தறங்காப்பா னல்லனோ.''

என்று சொன்னதுபோலப் பிரஜைகளுக்கு நேரிடும் ஐந்துவிதமான பயங்களுள் காட்டு மிருகங்களாகிய உயிர்களா லுண்டான பயத்தை (அதாவது அம்மிருகங்கள் குடிகளிட்ட பயிரை நாசஞ் செய்வதும் அதனால் நேர்ப்பட்ட கஷ்டத்தை)க் குடிகள் முறையிடக்கேட்டு அம்மிருகங்களை வதைத்து நாட்டை விட்டுத் துரத்த வேட்டைக்குப் புறப்பட்டான்.

வேடுவர்சகிதம் காட்டை நோக்கித் தன்னுடைய பரிவாரங்களுடன் நடந்து அநேக துஷ்ட மிருகங்களைத் துவம்ஸஞ்செய்து காட்டினுள் பலகாத தூரஞ் சென்று சோர்வுற்று அங்கு புலப்பட்ட ஓர் சிங்கார வனத்தை நண்ணினன். அவ்வனம் யாருடையதென்றால், அதற்கருகாமையிலிருந்த நாட்டைப் புரந்து வந்த ஓர் பெண்ணரசியினது. அப்பெண்ணரசியின் பெயர் ஜெகன்மோகனை. மேற்சொன்ன அரசனைப்

போலப்பெரியோர் சாகஸாஸத்தால் இளமையிலேயே இல்லறத்தை நிந்தித்து ஆண்பிள்ளைகளைக் கனவிலுங் காண மனமொவ்வாதவளாகித் தன்னுடைய பரிவாரங்களை யெல்லாம் பெண்களாகவே அமைத்துக் கொண்டு அரசாண்டு வந்தாள். சில சமயங்களில் இராஜ்ஜிய பரிபாலன விவகாரங்களால் ஆயாஸம் நேர்ந்தபோது அவ்வாயாஸந்தீரும்பொருட்டு அவள் அச்சிங்கார வனத்திற்குச் செல்லுவது வழக்கம்.

வெற்றிவீரவர்மன் வழிநடந்து வேட்டையாடிய களைப்பினால் அவ்வனத்தில் நித்திரைசெய்ய, அவனுடைய பரிவாரங்களும் அவ்வனத்தின் ஓர்புறத்தில் நித்திரை செய்தார்கள். அந்த சமயத்தில் ஜகன்மோகனை அவ்வனஞ்சென்று உலாவி வரும்பொழுது நித்திரை செய்யும் மன்னனைக்கண்டு,

"கற்றையஞ் சடையவன் கண்ணிற் காய்தலால்
இற்றவ னன்றுதோட் டின்று காறுந்தான்
நற்றவ மியற்றியவ் வநங்க னல்லுருப்
பெற்றன னுமெனப் பெயர்த்து மெண்ணி."

இதுகாறுந் தானடைந்திராத விரகவேதனையைப் பூர்வவினையின் சம்பந்தத்தினாலடைந்து மிகவும் வருந்தினாள். அவ்வரசனது அழகாகிய காந்தத்தினால் கவர்ச்சியுற்ற அவள் அவனை விட்டுப்போகவும் மனமில்லாதவளாய் அவனருகாமையிலேயே மூர்ச்சித்து விழுந்து நித்திரைபோய்விட்டாள்.

நித்திரை செய்திருந்த வெற்றிவீரவர்மன் சற்று நேரஞ் சென்று துயில் நீத்தெழுந்து தன்னருகில் துயில்கொண்டிருந்த பொற்பாவையைப் பார்த்து,

"ஈசனார் கண்ணின் வெந்தா
    னென்னுமீ திழுதைச் சொல்லிவ்
வாசநா றோதி யானைக்
    கண்டனன் வல்ல வாற்றால்
பேசலாந் தகைமைத் தல்லாப்
    பெரும்பிணி பிணிப்ப நீண்ட
ஆசையா லழிந்து தேய்ந்தா
    னநங்கனவ் வுருவ மம்மா."

என்பதாகப் பிதற்றி அவளுருவத்தை யப்படியே ஆலிங்கனஞ்செய்ய வெண்ணினான். அது காலை மூர்ச்சையா லயர்வடைந்திருந்த ஜகன்மோகனை அம்மூர்ச்சை தெளிந்தெழுந்திருக்க, இருவரும் ஒருவரை யொருவர் நேரிற்கண்டு பரஸ்பரமாகிய காதல்கொண்டு அவ்விடத்திலேயே மருவிக் காந்தர் விவாகஞ் செய்துகொண்டார்கள். கொஞ்ச நாட்களுக்குப் பிறகு இருவருக்கும் பகிரங்க விவாகம் அயோத்தியில் நடந்தது. இருநாடுகளையும் வெற்றிவீரவர்மன் தன்னுடைய பத்தினி ஜகன் மோகனையுடன் அரசாண்டு வந்தான்' என்பதே.

இந்த நாடகத்திற்குப் பெயர் 'ஜகன்மோகனை நாடகம்.' இதனை ஏற்படுத்தி ஆடப்போவது இதுவே முதல்தடவை. ஒத்திகை அதி நேர்த்தியாக நடத்தப்பட்டது. பிறகு குறித்த தினத்தில் நாடகம் நடத்

த்தப் போவதாக வைரவபுரமெங்கும் விளம்பர வாயிலாகத்தெரிவிக்கப்பட்டது. அவ்வூர்ஜனங்களெல்லாம் அன்றைய இரவை யெதிர் பார்த்திருந்தார்கள். பொழுதுபட்டதும், ஜனங்கள் நாடகசாலையை நோக்கிச் சென்றார்கள். இந்த நாடகத்தைக்கண்ணுற அம்பலவாண முதலியாரும், வடிவுடையம்மையும் போயிருந்தார்கள்.

சரியாக 8-மணிக்குத் திரை யெடுக்கப்பட்டு முறையே விநாயக தோத்திரமும், சரஸ்வதி தோத்திரமுஞ் செய்தானதின்மேல் உட்திரை யெடுக்கப்பட்டது. நவரத்தின கசிதமான தர்பார மண்டபத்திரை விடப்பட்டிருந்தது. திரைக்கு முன்புறத்தில் பொன்மயமான சிம்மாசன மிட்டு அதற் கிருபுறத்திலும் பல ஆசனங்கள் போடப்பட்டிருந்தன. கட்டியக்காரனொருவன் கையில் வெள்ளித்தடி பிடித்துக்கொண்டு ஒய்யாரமாய் நின்றிருந்தான். சிம்மாசனத்திற்கு அடுத்திருந்த ஆசனங்களில் மந்திரி முதலான அமாத்தியர்கள் நால்வர் வந்து உட்கார்ந்தார்கள். கட்டியக்காரன் திரைக்குள் ளெட்டிப்பார்த்து மஹாராஜாதி ராஜன்! வெற்றிவீரவர்ம ராஜன்! பராக்கு!!' என்பதாக மூன்று தடவை கூவினன், உடனே வெடியல் சப்தம் கேட்கப்பட்டது! ஒருபுறம் மேளவாத்தியம் முழங்க வெற்றிவீரவர்மன் மத்தியி லிடப்பட்டிருந்த இராஜ சிம்மாசனத்தை நோக்கி நடந்து வந்து சபையோர்களுக்கு வந்தனஞ் செய்து சிம்மாஸனமீதேறி மிக்க கம்பீரமான குரலில்,

(இராகம்-நாட்டைக் குறிஞ்சி.)

"அத்துவித வத்துவைச் சொற்பிரகா சத்தனிலை
அருமறைகண் முரசறையவே
அறிவினுக் கறிவாகி யானந்த மயமான
ஆதியைய நாதியேக
தத்துவ சொரூபத்தை மதசம் மதம்பெறாச்
சாலம்ப ரகிதமான
சாசுவத புட்கல நிராலம்ப வாலம்ப
சாந்தபத வ்யோமநிலையை
நித்தநிர் மலசகித நிஷ்ப்ரபஞ் சப்பொருளை
நிர்விஷய சுத்தமான
நிர்விகா ரத்தைத் தடத்தமாய் நின்றொளிர்
நிரஞ்சன நிராமயத்தைச்
சிந்தமறி யாதபடிச் சித்தத்தி னின்றிலகு
திவ்யதே சோமயத்தைச்
சிற்பரவெளிக்குள்வளர் தற்பரம தானபர
தேவதையை யஞ்சலிசெய்வாம்."

என்று எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளைத் தோத்திரஞ் செய்து சிம்மாசனத்திலமர்ந்தான். உடனே மந்திரிகளெழுந்து கைகூப்பிக்கொண்டு ஒரேகுரலில்

(இராகம் - வஸந்தம்.)

"மல்குக வேத வேள்வி வழங்குக சுரந்து வானம்
பல்குக வளங்க ளெங்கும் பரவுக வறங்க ளின்ப [ப்
நல்குக வுயிர்கட் கெல்லா நான்மறைச் சைவ மோங்கி
புல்குக வுலக மெல்லாம் புரவலன்செங்கோல் வாழ்க"
என்பதாக வாழ்த்துக் கூறி நின்றார்கள்.

அரசன் மந்திரிகளைப் பார்த்து—

மந்திரிகாள்! எம்முடைய அரசாட்சியின் கீழுள்ள குடிகளெல்லாம் யாதொரு குறைவுமின்றிச் செவ்வனே யிருக்கின்றார்களா?

முதல் மந்திரி—மஹாராஜ்! குடிகளெல்லாம் யாதொரு குறையுமின்றிச் சுகமே வாழ்கின்றார்கள்.

இரண்டாவது மந்திரி—(சாதுபாறுந்தை ஏறிட்டுப் பார்த்து) மஹாராஜ்! குடிகளுக்கெல்லாம் ஒரேயொரு குறை இருக்கின்றது. ஆக்ஞாபித்தால் அதை அடியேன் தெரிவிக்கின்றேன்.

அரசன்—அக்குறை யாது? உடனே தெரிவிப்பாய்!

இ-வது மந்திரி—மஹா ராஜா கோபித்துக்கொள்ளப்படாது. தங்களுக்குப் பிறகு இராஜ்யபாரத்தை யாளுவதற்குச் சந்ததி யுண்டாகவேண்டித் தாங்களின்னும் விவாகஞ்செய்து கொள்ளாதிருப்பதுதான் குடிகளுக்கும் பெருங் குறையாயிருக்கின்றது.

அரசன்—(சற்று சிந்தித்து இரு செவிகளையும் கைகளால் மூடி) சிவ! சிவா! இத்தன்மையறிவற்ற மந்திரி! இப்பேர்ப்பட்ட விஷயத்தை மறுபடியும் தெரிவியாதே! என்னை மறந்தாயோ? விவாகமா? விவாகத்தால் அடையும் பயன் யாது தெரியுமா?

(இராகம் - கன்னடம்.)

"கட்டையிலே யிருந்தபோதுந் தவலைப்பட்ட பெரியோர் கள் [illegible] தானோ, கட்டையிலே போகிறபோது பெரு மானையும் பெரியவர்களுங் கிடைக்குங் காம, வெட்டையிலே பத் [illegible] திருப்பித்தாலி, கட்டையி லே போகிறபோது கட்டையிலே கட்டுப்பட்டுங் காலே தானோ."

என்றபடி மங்கலசூத்திரங் கட்டையிலிருந்த மயான க்ஷேத்திரங் கட்டையிலே வெறுமனவும் பெரியதோர் சூதாலமல்லவா? அன்றியும், ஸ்திரீகள் எவ்வளவு கொடியவர்கள் என்பதுந் தெரியாதா?

(இ-ம்; கலியாணி. தாளம்; ஆதி.)

"[illegible] காட்டில் [illegible] கழுத்து [illegible]
தோளினிற் [illegible]
ஆனைக் [illegible] சேர்ந்தாள்
[illegible] போனதே."

என்பதாகப் பூர்வத்தில் நடந்த ஓர் கதையைக் கவனித்தால் மாதர்களை நம்பவும் போகுமா? இல்லறத்தை நெடுங்காலம் வழுவற நடத்திவந்த பட்டினத்துச் சுவாமிகளும் ஸ்திரீகளைப்பற்றி

(இராகம் - பைரவி.)

"[illegible] காட்டிப்போன் [illegible] சொல்லி [illegible] மற லிவிட்ட, [illegible] நாடித் தூர்ப் [illegible] யோகம் பமோ"

என்றருளினாரன்றோ?

இப்படி யிருப்பதனால், மந்திரி!

(இ-ம், பைரவி, தா-ம், திரிபுடை)

முதுதுயர் பூட்டாற் பூட்டி
    முடிவில்கா மாதி யென்னும்
புதுமணி வைத்த செப்பாம்
    பூவையர் போகம் வேண்டேன்
இதுசுவை யிதுகைப்த் தோரேன்
    பிதுநரம் பிதுவென் றெண்ணில்
விதுமுக மாதர் வேட்கை
    விரோதமாஞ் சிறிது நாளில்.

அன்றியும், மாதர்களால் உண்டாகுங் கெடுதிகளையும், சஞ்சலத் தன்மைகளையுங் கருதியல்லவா பெரியோர்களும்,

"நோய்கொண்டா லுங்கொளலாம் நூறாய நாமமனைவும் பேய்கொண்டா லுங்கொளலாம் பெண்கொள்ளலாகாதே" என்று திருவாய் மலர்ந்தருளி யிருக்கின்றனர்? ஆன படியால் மந்த்ரி!

இரா-து மந்திரி—(வணக்கமாக) மஹாராஜேஸ்வரா!

அரசன்—"மைப்படு விழியா ரின்பமோர் முள்ளிமல ரின்வாய்த் தேனையொப் பெனக்கண்டு" என்னும் ஆன்றோர்களின் வாக்கைக் கடைப்பிடித்து மாதர்களைக் கனவிலும் எண்ணுமல் சாட்சாத் ஜகதீசனைச் சதா தியானித்து வருதல்வேண்டும். அவனுடைய பிரபாவங்களையெடுத்தெடுத்துப்பாடித்தோத்திரம்புரிதல் வேண்டும். ஆ! ஹா!! அவனுடைய மகிமை எப்படிப்பட்டது! வேதாகமங்களாலேயே யறியமுடியாதென்றால் மற்றியார்தா மறிவார்?

(நந்தனார் சரித்திரக் கீர்த்தனை.)

(இ-ம், தேவமனோகரி. தாளம், ஆதி.)

பல்லவி.

ஆருக்குத் தான்தெரியும் அவர்மகிமை
அம்பல நாடக மாடிய பெருமை.

அநுபல்லவி.

பாருக்குள் யார்களும் காண்பது தொல்லை
பதஞ்சலி பணிந்த புண்ணியரல்லவோ (ஆ)

சரணங்கள்.

தேவர்கள் பூமழை கொண்டு சொரிந்தார்
சித்தி வித்தியாதரர் கண்டு மகிழ்ந்தார்
பாவலர் நாவலர் உள்ளங் குளிர்ந்தார்
பார்வதி யம்மையும் கூட விருந்தார் (ஆ)

காதில் குழையது விழுந்தது காட்டார்
கண்டிடும் அடியரை விண்டிட மாட்டார்
பாதம் நிலைக்கவே தாண்டவம் போட்டார்
பத்தி யில்லாதவர் தங்களைக் கூட்டார் (ஆ)

பாலசந்திரனைப் பணிந்தேற்றும் பிரதாபம்
பாவிகட் போக்கில்லை புண்ணிய பாபம்
சீலகுண மருவும் ஞானப்பிர தீபம்
தேவ மனோகர மாகிய ரூபம் (ஆ)

இப்படிப்பட்ட மகிமைப் பிரதாபங்களையுடைய பரமேசுரனை வணங்கவும், துதிக்கவும், அவனுடைய ஆலயத்தை வலம்வரவும், அவனுடைய பிரபாவங்களைக் கூறும் ஆகம, புராணங்களைப் படிக்கவுங்கேட்கவுமே நமக்குக் காரணாதிக ளேற்பட்டிருக்கின்றன. இதனாலேயே,

(இ-ம், பியாகடை; தாளம், ரூபகம்.)

"கண்ணுதலா லயநோக்குங் கண்களே கண்கள்
கறைகண்டன் கோயிற்புகுங் கால்களே கால்கள்
பெண்ணொருபா கனைப்பணியுந் தலைகளே தலைகள்
பிஞ்ஞகனைப் பூசிக்குங் கைகளே கைகள்
பண்ணவன்றன் சீர்பாடு நன்னாவே நன்னா
பரன்சரிதை யேகேட்கப் படுஞ்செவியே செவிகள்
அண்ணல்போலக் குழைந்திளக்கு நெஞ்சமே நெஞ்சம்
அவனடிக்கீழ் மடிமைபுகு மடிமையே யடிமை"

என்று பக்தி நூல்கள் கூறுகின்றன. நாம் யாக்கையைப் பெற்றதனாலாயபயன் 'பகவதாகார சித்தவிருத்தியாகிய பக்தி'யைச் செய்தலேயாம். இவ்வாறு பரமபதிக் காட்பட்டிருக்கும் சத்விஷயங்களைக் கூறாது ஏதேதோ வீண் வார்த்தைகளைத் தெரிவிக்கிறாய், மந்த்ரி! இத்தடவை உன்னை மன்னித்தேன். இனியொருமுறை இப்பேர்ப்பட்ட அசம்பாவிதமான விஷயத்தை எனது சமூகத்தில் தெரிவிக்காதே!'

இவ்விதமாக அரசவேடம் பூண்டநந்தன் பாடி நடித்தது சபையிலிருந்த எல்லோருடைய செவிக்கும் இனிமையான அமிர்தத்தை யூட்டியது. நேத்திரானந்தமுமா யிருந்ததென்று சொல்லவும் வேண்டுமா? வெற்றிவீரவர்ம மஹாராஜனாக இப்பொழுது நடிப்பது நம்முடைய கதாநாயகனென்றுசொல்லுவதனவசியம். இதனை இவ்வத்தியாயத் தொடக்கத்திலே குறிப்பிட்டுள்ளோம். அம்பலவாண முதலியாருக்கும், வடிவுடையம்மைக்கும் அன்றைய தின

தான் இந்தச் சமாசாரந்தெரியும். தியாகராஜன் நாடகத்திற் சேர்ந்ததைப்பற்றி அவர்களுடைய மனம் கொஞ்சமாவது வெறுப்படையவில்லை. கற்றோர்களா லேற்படுத்தி நடத்தப்பட்டு வந்தமையால் அதனை யோர் நாடகக் கழகமென்றே சொல்லவேண்டும். சாதாரண போலிநாடகத்தில் தியாகராஜன் சேர்ந்திருப்பானானால் நாடகப் பிலுக்கன் என்கிற பெயரெடுப்பதுமல்லாமல், கண்டவர் எவரும் அவன்விஷயத்தில் வெறுப்புங் கொண்டிருந்திருப்பார்கள்.

இந்த நாடகத்தின் முதலங்கத்தில் ஓர் தொகுதியை மாத்திரம் மேலே காட்டினேன். இவ்வொரு தொகுதியிலேயே தியாகராஜன் நடித்தது ஜனங்களுக்கு அதி உற்சாகத்தைத் தந்ததென்றால் மற்றதொகுதியும், முழு நாடக நடிப்பும் எவ்வாறிருந்திருக்குமென்று வாசகர்களே யறிந்துகொள்ளலாம். அன்று நடத்தப்பட்ட நாடகத்தை முழுவதும் எழுதுவதென்றால் நம்கதை இடந்தராதாகையால் இத்துடன் நிறுத்தி மேல் நடந்ததை விவரிப்பாம்.

தியாகராஜனிடத்தில் நாளுக்குநாள் அதிகரித்த பிரியமுடைய வடிவுடையம்மை நாடக சாலையில் அவனுடைய திறமையைக்கண்டு இன்னும் அதிகமதிகமாகப் பிரியங்கொள்ளத் தலைப்பட்டாள். கல்வியொன்றில்தான் திறமைசாலியாயிருந்தானென்று பார்த்தால் அதைப்போலவே தேக அப்பியாசவிளையாட்டிலும், நாடக நடிப்பிலும் இருந்தானாதலால் இப்படி எல்லாவிதத்திலும் திறமைவாய்ந்த ஒருவனை

யெவருமே பிரியங்கொள்ளக்கூடியவனல்லவா? அப்படி யிருக்க; ஏற்கெனவே அத்தியந்த பிரியங்கொண் டிருந்த மடமங்கையாக்கை அவன்பேரில், இன்னும்பல படிகள் அதிகமாகப் பிரியங்கொண்டதோர் ஆச்சரிய மன்று.

ஆனால் தொடக்கமுதலிருந்து தியாகராஜன்மீது பொறாமையுடையனாயிருந்த மாணிக்கம் அந்தச் சபையில் நடந்த செய்திகளையெல்லாம் கேள்வியுற் றவனாய், அவன் தன்னுடைய முகத்தில் சற்றேனும் சந்தோஷக்குறியில்லாமல் பெண்டாட்டியைப் பறி கொடுத்தவன்போல 'தியாகராஜன் வைபவத்தையும், அவனுடைய சொந்தக்காரர்களை சபையிலுள்ளோர் கொண்டாடியதையும் பார்த்தாயோ? தாராளகுண முள்ளவன்போல நடித்துத் தன்னையே; பெருந்தன்மையாய் உட்கார்ந்திருந்தான். அவனேன் அப்படி யிருக்க வேண்டுமென்பதற்கு மற்றோர்காரணமுமுண்டு. அது நாம் முன் அத்தியாயத்திற் கூறிய பிரகாரம் தியாக ராஜனை எவ்வித வழிகளினால் கெடுக்கலாமென்று எண்ணமிட்டுக்கொண்டிருந்த சூழ்ச்சியே. இப்படி யவனிருக்குஞ் சமயத்தில் அருகாமையி லுட்கார்ந் திருந்த சொக்கலிங்கம் 'மாணிக்கம்! பையனைப்பார்த் தாயா? ஹா! சக்கரவர்த்தியாக நடிக்கிறான்! அரசனுக்கும் இவனுக்கும் எந்த விதத்திலாவது வித் தியாஸ மிருக்கிறதா பார்!' என்றான்.

'அவனொரு பைசாசம்; மனிதப்பிறவியாயிருந் தால் இப்படியெல்லாம் நடக்க முடியாது. அவனைப்

பற்றி ஒரு விஷயமுஞ் சொல்லவேண்டாம்' என்று சொன்னான் மாணிக்கம். 'அவனுடைய ஜென்மத்தில் எப்பொழுதாகிலும் பரிசாரகத் தொழில் செய்திருப்பானென்று நான் நினைக்கவேயில்லை. நம்மண்டை அந்த மாதிரி சொல்லும்படியாய்ச் சிநேகனிடம் சும்மா சொல்லியிருக்கலாம். எல்லா விஷயத்திலும் பெயரெடுக்கும் இவனை நான் என்னவென்று சொல்லுவேனென்பதாக எனக்கே தெரியவில்லை. உண்மையிலேயே அவன் ஒரு பெரிய தனவந்தன் குமாரனாயிருக்கவேண்டும். சாமான்யனுக்கும் அதிகப் படித்தவர்களும், பிரபுக்களுஞ் சேர்ந்திருக்கும் இப்'பால விநோத சபை'யில் அவன் சேருவானா. அவன் விஷயத்தில் இனிமேல் நாம் ஜாக்கிரதையா யிருக்கவேண்டும். இல்லாவிட்டால் நம்மை அவன் தாழ்ந்ததாகப் பிரஸ்தாபித்துத் தன்னுடைய உண்மையான நிலைமையைக் காட்டி நம்மைக் கஷ்டத்துக் குள்ளாக்கிவிடுவான். மாணிக்கம்! ஜாக்கிரதையாயிரு அப்பா!' என்று சொக்கலிங்கம் திரும்பவும் ஞாபகமூட்டினான். சொக்கலிங்கம் சொன்னவை யெல்லாம் உண்மையா யிருக்கலாமென்று மாணிக்கத்தின் மனதில் பட்டன. இருந்தும் அவற்றை வெளிக்குக் காட்டாமல் 'அவன் கெட்டான்: அவனுக்காக நீ பயப்படவேண்டாமடா சொக்கு!' என்று சொல்லிவிட்டு ஒன்றுஞ் சொல்லாமல் மௌனமா யிருந்துவிட்டான்.

நாடகம் முடிந்ததன்மேல் தியாகராஜன் வடிவுடையம்மையைச் சந்திக்க நேரிட்டது. 'என்ன வடிவு! உன்னுடைய தகப்பனெங்கே? தனியாகவே

வந்தாரோ? என்று கேட்டான் தியாகராஜன்.

வடிவு—இல்லை, அப்பாவும் வந்திருந்தார். அவ ரால் அதிகநேரம் கண்விழிக்க முடியாது. ஆகையால் என்னை இருந்து வரும்படியாய்ச் சொல்லிப் போய் விட்டார். இது இருக்கட்டும், நான் உங்களைச் சில கேள்விகள் கேட்கப் பிரியப்படுகிறேன், கோபங் கொள்ளாமல் விடைபகரவேண்டும்.

தியாக—கேட்கத்தகாத கேள்விகள் கேட்டா லும், அல்லது நீ என்னை வைதாலும் நான் கோபங் கொள்ளமாட்டேன். எவ்வளவுங் கேட்கலாம்!

வடிவு—நீங்க ளெப்போதாகிலும் நகரிலிருந் ததுண்டா?

தியாக—நான் அந்த வூருக்கே போனது கிடை யாது.

வடிவு—அதிக ஆச்சரியம்! உங்களுடைய தாயும் தகப்பனும் அந்த வூரிலேயே யிருக்கிறார்க ளல்லவா?

தியாக—அதுவும் எனக்குத் தெரியாது. (என்று சொல்லும்பொழுதே தியாகராஜனுடைய முகம் விச னத் தோற்றமடைந்தது. இருவரும் சற்றுநேரம் பேசாம லிருந்தார்கள். பிறகு தியாகராஜன்) வடிவு, என்னுடைய மெய்க்கதையைச் சொன்னால் நீ ஒரு சமயம் கோபங் கொள்ளுவாயென்று நினைக்கிறேன். இருந்தாலும் உன்னிடத்தில் ஒன்றையும் ஒளித்துச் சொல்ல எனக்குப் பிரியமில்லை.

வடிவு—உங்களுடைய விருத்தாந்தத்தை எனக்குச் சொல்லவா உத்தேசித்திருக்கிறீர்கள்?

தியாக—ஆம்; நான் சொன்னதன்மேல்தான் ஏன் சொன்னேனென்று நீயு மறிந்துகொள்ளுவாய். (மறுபடியும் இருவரும் ஒன்றும் பேசவில்லை. சில நிமிஷங் கழித்துத் தியாகராஜன்) எனக்கு உடம்பு ஒருமாதிரியாயிருக்கிறது; நான் போய் வருகிறேன்.

வடிவு—அப்படிச் சொன்னா லெப்படி? நீங்கள் தானே என்னை வீட்டிற்கு அழைத்துப் போகவேண்டும். வேறு யாரும் துணைவரக்கூடியவர்களில்லையே!

தியாக—அப்படியானால் கொஞ்சம் பொறுத்துக்கொள். நான் உள்ளேபோய் மீண்டும்வருகிறேன்.

என்று சொல்லிவிட்டு நாடக மேடைக்குப் போய் விட்டான். அவன் போனவுடனே மாணிக்கம் வடிவுடையம்மையின் சமீபத்திற் போய் ‘உன்னை வீட்டிற்கு அழைத்துப்போக யாருந் துணையில்லை போல் தெரிகிறதே. நான் வழி விடட்டுமா?’ என்று கேட்டான்.

வடிவு—உங்களுடைய விசாரணைக்கு நான் ரொம்பவும் வந்தேன். எனக்கு வழித்துணை யிருக்கிறது.

மாணி—யாரது? அவன் வருகிறானே?

வடிவு—ஆம், அவர்தான்.

மாணி—நீ கூப்பிட்டாயா, அல்லது அவனே வருவதாகச் சொன்னானா?

வடிவு—என்ன மாணிக்கம்! உன்னுடைய முகத்தைப் பார்த்தால் விகாரமாயிருக்கிறதே?

இவ்வாறு வடிவுடையம்மை கேட்கவே, மாணிக்கம் ஒன்றுஞ் சொல்லாமல் போய்விட்டான். நாடக மேடையை நோக்கிப்போன தியாகராஜன் 'என்னுடைய விருத்தாந்தத்தைச் சொல்லிவிடுவதுதான் சரி. என்னுடைய மனதிற்குந் திருப்தி ஏற்படும். அவளுக்கு ஒரு சமயம் என் விஷயத்தில் பரிதாபமாவது கொள்ளலாம். நான் என்ன க்ஷபாதிபெற்றாலும் ஒரு காலத்தில் பரிசாரகத் தொழில் செய்தவன்தானே' என்று தனக்குத்தானே பேசிக்கொண்டான், கொஞ்சநேரஞ் சென்று வடிவுடையம்மையை அழைத்துக்கொண்டு அம்பலவாண முதலியார் வீட்டை நோக்கிப் புறப்பட்டான்.

அவர்களிரண்டுபேரும் போவதைப் பொறாமைக்காரர்களாகிய மற்றிருவரும் பார்த்திருந்தார்கள். அவர்களில் ஒருவன் இன்னொருவனைப் பார்த்து 'மாணிக்கம்! நீ யாரை உன்னுடைய உயிரைப்போல் நேசித்து வந்தாயோ, அவளுக்கே சொக்குப் பொடி போட்டுவிட்டான் அந்தப் பயல்' என்றான். அதைக் கேட்ட மாணிக்கம், 'அந்தப்பெண் அவனைக்கொஞ்சமுஞ் சட்டைபண்ணமாட்டாள். அப்படியிருந்தும் ஏதோ அவனிடத்திலிருக்கும் மந்திர பலத்தினால் அவளைப் பக்குவப்படுத்திவிட்டான். இருக்கட்டும்

பார்க்கலாம்' என்று சொல்லிவிட்டு அம்பலவாணமுதலியார் வீட்டைநோக்கிக் குறுக்கு வழியாக வெகு வேகமாய்ச் சென்றான். சொக்கலிங்கம் தன்னுடைய விடுதிக்குப் போய்விட்டான்.

தியாகராஜனும், வடிவுடையம்மையும் ஒய்யாரமாக நடந்து போனார்கள். வடிவுடையம்மை நாடக விஷயமாகப்பேசி அதில் தியாகராஜனுடைய திறமைகளை அதிக வியந்து கூறினாள். தியாகராஜன் வடிவுடையம்மையின் பேச்சை நிறுத்தி 'என்னுடைய விருத்தாந்தத்தை உனக்குச் சொல்லுவதே நியாயம். அப்படிச் சொல்லுதற்கும் இதுதான் தகுந்தசமயம்' என்று சொன்னான்.

வடிவு—உங்களுடைய விருத்தாந்தத்தைக் கேட்க நான் ஆவலில்லாதவளாயிருக்க, நீங்களே என்பிரயாசை யெடுத்துச் சொல்லவேண்டும்;

தியாக—நாடகசாலையில் நகரியைப் பற்றியும், என்னுடைய பெற்றோர்களைப்பற்றியும் நீ கேட்டதிலிருந்து என்னுடைய விருத்தாந்தத்தைச் சொல்ல வேண்டுமென்பது எனது கோரிக்கை.

வடிவு—நான் கேட்ட கேள்விகள் உங்களுடைய மனதைத் துன்புறுத்துமென் றறிந்திருந்தால் நான் கேட்டே யிருக்கமாட்டேன். நான் கேட்டதைப்பற்றி மன்னிக்கவேண்டும்!

தியாக—நீ கேட்டதைப்பற்றி எனக்கு விசனமொன்றுமில்லை; சந்தோஷமே. அப்படி நீ கேட்டிராவிட்டால் நான் சொல்லுவதற்கு ஏதுவில்லாமலிருந்

இருக்கும். நீயும் என்னை ஒரு பெரியமனுஷன் வீட்டுப்பிள்ளையென்றோ, அல்லது தனவந்தனென்றோ தப்பபிப்பிராயங் கொள்ள வேண்டியதாய் நேரிட்டிருக்கும். நான் அப்படியொன்றும் பெரியமனுஷனல்ல, உண்மையில் நான் ஒரு அநாதையே.

வடிவு—அநாதை யென்றால் எனக்கு விளங்கவில்லையே?

தியாக—விளங்கச் சொல்லுகிறேன் கேள்! நான் குழந்தையா யிருக்கும்பொழுது யாரோ என்னை அநாதைப் பள்ளிக்கூடத்தில் கொண்டுபோய்ச்சேர்த்தார்களாம். அவ்வாறு சேர்த்தவர் பெற்றோர்களோ, அல்லது வேறு மனுஷரோ என்று சொல்லமுடியவில்லை. என்னுடைய சட்டையில் ஒரு சீட்டைத் தைத்துத் தொங்க விட்டிருந்ததாம். அந்தச்சீட்டில் என் பெயர் தியாகராஜனென்றும், நான் ஒரு குடும்பியின் புத்திரனென்றும் எழுதியிருந்ததாம். அவ்வாறு எழுதப்பட்டிருந்ததற்கு அடியில் யாருங் கையொப்ப மிட்டிருக்க வில்லையாம். அநாதையென்பதற்கறிகுறியாக அப்பாடசாலையில் யாரும் வந்து என்னைப் பார்ப்பதுங் கிடையாது.

வடிவு—(சிரம் நடுக்குற்று, மெலிந்த குரலில்) தியாகு. உங்களுடைய விருத்தாந்தம் உண்மையிலேயே மிக்க பரிதாபமாயிருக்கிறது!

தியாக—உன்னுடைய பரிதாபமான நிலைமைக்காக நீ அநாதைப் பிள்ளையைப்பற்றி நான் ரொம்பவும் நன்றியறிதலுள்ளவனா யிருக்கிறேன். நான் ஒரு

காலத்தில் அரசனாயிருந்தேனென்று கேட்கவும் அநுதாபப்பட்டீர், இன்னொரு காலத்தில் பரிசாரகனாகவுமிருந்து காலங்கழித்தேனென்று கேள்விப்படுவாயானும் அநுதாபங்கொள்ளுவதைவிட்டு அமைதிப்பு கொள்ளுவாயென்று நினைக்கிறேன். ஆனாலும் அது விஷயத்தில் எனக்கு யாதொரு விசனமுமில்லை. ஏதோ என்னுடைய பெற்றோர்கள் செய்தபுண்ணியத்தினால் மூன்றாக்கு கூறும்படியான பாக்கியமும், உன்னுடைய சிநேகத்தைப் பெறும்படியான ஒரு பெருமைதனையும் அடைந்தேன். இனிமேல் என்னுடைய சொந்த முயற்சியைக்கொண்டுதான் இந்த உலகத்தில் மதிப்புக்குக் காரணமாயுள்ள பணத்தைச் சம்பாதிக்கவேண்டும்.

மது.—உங்களுடைய விருத்தாந்தத்தை வேறு யாருக்கும் சொல்லாதிருப்பது நல்லது.

தியாக.—உண்மையை வெளியிடாதிருக்க எனக்குப் பிரியமில்லை. மேலும் என்னுடைய முன் பதவியை யறிந்தவர்கள் யாரிருக்கிறார்கள்?

மது.—இருந்தா லிருக்கட்டும். நீங்களாகவே ஏன் வெளியிட்டுச் சொல்லவேண்டும்? நீங்களொரு காலத்தில் பரிசாரகத் தொழில்பார்த்திருந்ததாக யாரும் கேள்விப்பட்டாலும் அதை நம்பவில்லை.

தியாக—யார் சொன்னது?

வடிவு—மாணிக்கம் சொன்னார். அன்றியும்
அவர் உங்கள் பேரில் விரோதம் பாராட்டுகிறார்.
அப்படியேன் அவர் செய்ய வேண்டும்?

தியாக—என்பேரில் அவனுக்கு அவ்வளவு விரோ
தமுண்டாகக் காரணம் எனக்கே விளங்கவில்லை.
அவன் விரோதங்கொண்டு என்னை வெறுப்பதுமல்
லாமல், பிறரையும் வெறுக்கும்படிச் செய்கிறான்.
அவன் அப்படிச் செய்வதைப்பற்றியும் எனக்குச் சந்
தோஷமே. ஏனென்றால், நான் படிப்பதற்காகவே
இங்கு வந்திருக்கிறேன்: விளையாடுவதற்கன்று.
மாணிக்கமும் மற்றப்பிள்ளைகளும் என்னிடத்திலதிக
நேசமாயிருந்தால் நான் படிப்பைவிட்டு விளையாட்
டின்பேரில் பராக்காயிருந்துவிடுவேன். அப்படியெல்
லாம் வியர்த்தமாகக் காலம் போக்காமல் என்னு
டைய காரியத்திலேயே முயற்சியா யிருப்பதற்கு
மாணிக்கத்தின் நடவடிக்கைகள் எனக்கு உதவியா
யிருக்கின்றன.

வடிவு—யோசிக்கும்போது, அந்தத்துன்மார்க்
கன் உங்களுக்கேதாகிலுங் கெடுதி செய்தாலுஞ் செய்
வான்போல் தோன்றுகிறது.

தியாக—அதைப்பற்றி யொன்றும் பயமில்லை!
என்னுடைய பிறப்பைப்பற்றி உனக்குவெளியிட்டே
னாகையால் இனிமேல் என்னைக் கனவிலும் நினைக்கா
தே. அது உன்னுடைய நன்மைக்கே.

என்று இருவரு மிவ்வாறு பேசிக்கொண்டே அம்
பலவாண முதலியார் வீட்டு வாயிற்படியண்டைவந்து
நின்றார்கள்.

வடிவுடையம்மை தியாகராஜனைப் பார்த்து 'நான் உங்களுக்கு ரொம்பவும் சிரமங்கொடுத்தேன். இந்நேரத்தில் நீங்கள் தனியாய்த் திரும்பிப் போவதென்றால் எனக்குச் சம்மதமில்லை. நம்முடைய வீட்டில் படுத்திருந்து பொழுதுவிடிந்தபிறகு போகலாம்' என்றாள். 'அது தகாது நான் போய்வருகிறேன்: வந்தனம்' என்று சொல்லிவிட்டுத் தியாகராஜன் பள்ளியை நோக்கித் திரும்பினான். அங்கிருந்து பள்ளிக்கூடத்திற்குச் சுமார் இரண்டு மைல் தூரமிருந்தது. தனக்கு முன்னிருந்த தூரத்தை நினைத்து நடுங்கினான். நாடகசாலையிலிருந்து வரும்பொழுதாவது கூடவொரு வழித்துணை யிருந்தது. இப்பொழுதோ ஒரே யிருளா யிருந்த வெட்டவெளியில் தன்னந்தனியாக நடப்பதென்றால் யார்தான் துணிவார்? 'நானேன் அம்பலவாணமுதலியார் வீட்டிலேயே இவ்விரவுப் பொழுதைக் கழித்திருக்கக்கூடாது? வடிவுடையம்மையுங் கெஞ்சிக் கேட்டுக்கொண்டாளே. தகாதென மறுத்துக் கடைசியாக என்ன பைத்தியக்காரவேலை செய்துகொண்டோம்? இப்பொழுது திரும்பிப்போவதும் நன்றாயிராது. சரி, ஈசன் துணையிருக்கிறது' என்று சொல்லிக்கொண்டு ராஜபாதையிற் சென்றால் அதிக தூரமாகுமென்று கருதி குறுக்குவழியாக நடந்து போனான். போகும்போது உலகானுபவவிஷயங்களைப்பற்றிப் பல பல யோசனைகள் அவன் மனதில் தோன்ற அவ்யோசனைகளின் வசப்பட்டவனாகவே நடந்து போனமையால், தன்னையே மறந்த வண்ணமாகச்சென்றான். ஆகவே, தன்

னெதிரில் ஓர் உருவம் வந்து தன் பின்புறமாகப் போய் மறைவதுபோல் தொடர்ந்து வந்ததைக் கவனித்தவனல்ல.

அவ்வழியில் பலகையினுல் செய்யப்பட்ட ஓர் பழைய பாலமிருந்தது. அஃது அவ்விடத்தி லோடும் படியான நதியொன்றைக் கடப்பதற்காகக் கட்டப் பட்டது. அதற் கிருபுறத்தில் கைப்பிடியுங் கிடை யாது. தியாகராஜன் அப்பாலத்தின் மேலேறிப் பத் தடிதூரஞ் சென்றுன். அப்பொழுது அவனுடைய பின் மண்டையில் பலத்த வோரடி தலை பிளந்து போனதுபோல் விழுந்தது. அவ்வடியி னதிர்ச்சியை அவன் தாளமுடியாமல் சுருண்டு கீழே போய்த் தண் ணீரில் விழுந்துவிட்டான். சற்றுநேரம் ஒன்றுந் தெரியாமல் மூர்ச்சையாயிருந்தான். அரை மணி நேரஞ்சென்று கொஞ்சம்பிரக்ஞைவரவும் எழுந்து நின்றுன். அவன் விழுந்த தண்ணீர் கணுக்காலளவு ஆழமுள்ளதா யிருந்தது தெய்வாதீனமேயாம். நாற் புறமுஞ் சுற்றிப்பார்த்தான். எந்த வுருவமுந் தோற்ற வில்லை. சாதாரணமா யிருப்பவனுக்கே இருட்டில் ஒன்றுந் தோன்றாதென்றால், மருண்டுபோயிருக்கும் அவனுக்கு எவ்வாறு தோன்றும்?

தியாகராஜன் அதிக தைரியசாலி. கொஞ்ச நே ரம் சிந்தித்து, தன்னை யடித்தது ஓர் ஆளாகவே யிருக்கவேண்டுமென்றும், அவன் எதைக்கொண் டடித்திருக்கலாமென்றும் நினைத்து நாற்புறமுந் தட வினுன். ஒன்றுங் கிடைக்கவில்லை. 'சரி, நானென்ன தேட வேண்டும்? என்னையடித்தவன் யாரென்றும் எனக்கு

நன்றாய்த் தெரியும். இந்தஅடி என்னைபறமேலதொலைத்திருக்குமென்கிற நம்பிக்கை அவனுக்குப் பூராவாயிருக்கவேண்டும். இருக்கட்டும், நடப்பதெல்லாம் நன்மைக்கே' என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டு மெதுவாக நடந்து மீதி வழியையுங்கடந்து தன்னுடைய அறைக்குப்போய்ச் சேர்ந்தான். துணிகளெல்லாம் நனைந்துபோயிருந்தன. அவைகளைக் களைந்துவிட்டு வேறே யுடைகளைத் தரித்துக்கொண்டான். தன்னுடைய தலையைத் தடவிப்பார்க்க, அடிபட்டவிடத்தில் ஒரு அங்குலபரிமாணம் வீங்கியிருந்தது. 'இந்த அடி இன்னொரு அங்குலம் உயர்ந்தவிடத்தில் விழுந்திருந்தால் என்னுடைய ஆவி பறந்தே போயிருக்கும். எல்லாம் எனையாளும் ஈசன் செயல்' என்றுசொல்லிக்கொண்டே சிவநேசனுடைய அறைக்குப் போனான். அது சாத்தப்பட்டிருந்தது. 'சரி, நாடகத்திலிருந்து இன்னும் வரவில்லைபோலிருக்கிறது' என்பதாக நினைத்துத் தன்னுடைய அறைக்குத் திரும்பிப்போய்ப்படுத்துக்கொண்டான்.

மறுநாள் தியாகராஜன் எப்பொழுதும்போல் அதிகாலையிலெழுந்திருக்கவில்லை. அவனை நெடுநேரமாகக் காணாதிருந்த சிவநேசன் பள்ளிக்கூடந்தொடங்குவதற்குச் சற்று முன்பு தியாகராஜனுடையஅறைக்குப் போனான். அவன் படுத்திருந்ததைக் கண்டு 'தியாகு! இன்னுமுமா படுத்துக்கொண்டிருக்கிறாய்' என்றான். தியாகராஜன் விழித்துப்பார்த்து 'ஆம், எனக்கு உடம்பு சரியாயில்லை. தயைசெய்து என்னுடைய உபாத்தியாயரிடத்தில் போய், உடம்பு அசௌக்

கியத்தினால் பள்ளிக்கூடத்திற்கு வர எனக்குச் சாத்தியப்படவில்லையென்று சொல்' என்றான். 'உண்மையிலேயே அவ்வளவு அசௌக்கியமா?' என்று கேட்டான் சிவநேசன். 'அவ்வளவாய் அசௌக்கியமில்லையானாலும் இன்றையதினம் என்னால் வருவதற்குப் போகப்பிரியமில்லை' என்று தியாகராஜன் சொன்னான். இவ்வாறு சிவநேசனிடம் வார்த்தையாடிக்கொண்டிருக்கும்போது தியாகராஜன் தன்னுடைய தலையைத் தலையணையின்மேல் சாய்த்து வைத்திருந்தானாதலால் அவன் தலையிலிருந்த வீக்கத்தைச் சிவநேசன் கவனிக்கவில்லை.

பள்ளிக்கூடம் முடிந்ததன்மேல், சிவநேசன் தியாகராஜனுடைய அறைக்குப்போய், 'சிநேகிதா! இப்பொழுது எப்படி யிருக்கிறது?' என்று கேட்டான். கட்டிலின்மேலேயே படுத்திருந்த தியாகராஜன் 'கொஞ்சம் சௌக்கியந்தான். நான் சிலசங்கதி உன்னிடத்தில் சொல்லப்போகிறேன், ஆனால் அதை நீ யொருவருக்கும் வெளியிடக்கூடாது' என்றான். 'அப்படியொன்றும் வெளியிடமாட்டேன்' என்று சிவநேசன் சொல்லவே, தியாகராஜன் உண்மையை யொளித்து முந்தியநாளிரவு வரும் வழியில் காலிடறி விழுந்து அதனால் உடம்பு கொஞ்சம் நலிவுற்றதென்று சொல்லி, நாடகம் முடிந்தபிறகு மாணிக்கம் எங்கே போனான் என்பதைப்பற்றி அந்தரங்கமாய் விசாரிக்கும்படிக்கேட்டுக்கொண்டான். சிவநேசன் அவ்வாறே விசாரித்துத் தெரிவிப்பதாகச் சொல்லிப் போய்விட்டான்.

சிவநேசன் யாராரைப் பக்குவமாக விசாரிக்க வேண்டுமோ அவர்களை யெல்லாம் விசாரித்தும், நாடகத்திற்கு வந்திருந்தவர்களெல்லாம் போனதன் பிறகே மாணிக்கம் நாடகசாலையைவிட்டுப் புறப்பட்டானென்று தெரிய வந்தது. இப்படியே தியாகராஜ னிடத்தில் தெரிவித்தான் சிவநேசன். தியாகராஜன் எத்தனையோ விதமான கேள்விகளெல்லாம் கேட்டான். கேட்டுமென்ன, சிவநேசன் சொன்ன மறு மொழிகளால் மாணிக்கம் நாடக முடியுமளவும் அங் கேயே யிருந்ததாக ஏற்பட்டது.

இரண்டுநாள் வரையில் தியாகராஜன் தன்னு டைய அறையைவிட்டு வெளிப்படவில்லை. மூன்றும் நாள் வெளியே வந்தபொழுது மாணிக்கத்தைச் சந் தித்தான். ஒருவரோடொருவர்வார்த்தையாடவில்லை. தியாகராஜன் மாணிக்கத்தை உற்றுக் கவனித்தான். அவனுடைய முகத்தில் யாதொரு விதமான குறியுங் காணப்படவில்லை. 'நான் மாணிக்கத்தைக் காரண மின்றி யேன் சந்தேகிக்கவேண்டும்?' என்றும், 'அவ னில்லாவிட்டால் வேறு யார்தான் அப்படிப்பட்ட துர்க்கிர்த்தியஞ் செய்யத் துணிவார்கள்?' என்றும், 'இருக்கட்டும், உண்மையை நானறியாமற் போகிற தில்லை' என்றும் இப்படியெல்லாந் தனக்குள்ளேயே யோசிக்கலானான். தியாகராஜன் அதி நுட்ப புத்தி யுள்ளவன். நகரியில் பரிசாரகத் தொழிலிருந்த பொழுது பல அநுபவங்களைக் கண்டிருந்தான். ஒரு சமயத்தில் ஓர் துப்பறியும் உத்தியோகஸ்தனுக்குப் பெருத்த உதவிசெய்தான். அப்பொழுது அவ்வுத்தி

யோகஸ்தன் இவனிடம் பிரியங்கொண்டு தன்னுடைய அனுபவக் கதைகள் பல சொன்னது மல்லாமல், சில யோக்கியர்களுடைய செய்கைகளை யறியும் மார்க்கமுங் காட்டினன். அக்காலத்தில் தானுமெப்படியாகிலுந் தப்பிப் பிழைத்து யோக்கியனாகவேண்டுமென்கிற எண்ணங் கொண்டான். ஆனாலவனெண்ணம் கொஞ்ச காலத்துக்குப்பின் மாறி உன்னத பதவியை யடைய எண்ணினான்.

நாடக விஷயத்தைப் பற்றி யொருவரிடமும் பேசி யோசனை கேட்கவில்லை, தன்னுடைய சொந்த யோசனையின் பேரிலேயே அதைக் கண்டு பிடிக்க முயன்றான். ஆனால் ஒரு ஆதாரமும் கிடைக்கவில்லை. தனக்கு ஆபத்து நேரிட்ட பாகத்திற்குப் பக்கமுள்ள போய் ஏதாகிலும் காரணமகப்படுமென்று தேடிப் பார்த்தான். அப்போதும் ஒன்றும் கிடைக்கவில்லை, நாடகம்நடந்த விடத்திற்குப்போனான். போய் நாடக சாலையின் பலபுறத்திலுமிருந்த வாசற்படிகளை யெல்லாம் பரிசோதித்து தப்பியோடினவனெந்த திக்கிற்குச் சென்றிருப்பானென்று பார்த்தான். அதனாலும மனதிற்கு ஒரு திருப்தி யேற்படவில்லை. பிறகு வெளியே வந்து பார்த்துக்கொண்டிருக்கையில் ஒரு மாட்டுக்காரப் பையனைச் சந்தித்தான். அந்தப்பையனுடைய கையில் ஒருகை பிரம்பிருந்தது. அவனை யிதற்கு முன் தியாகராஜன் பார்த்ததில்லை யானாலும், அவன் விஷயத்தில் ஏதோ மனதில் ஒர்விதமான சந்தேக மேற்படவும், அவனை யணுகி,

'தம்பி, இந்தத் தடியை யெங்கேதடா?' என்று கேட்டான்

பையன்—ஏன்? அந்தத்தோட்டத்திலிருந்து வெட்டிக்கொண்டு வந்தேன்.

தியாக—எவ்வளவு காலமாய் அதை வைத்திருக்கிறாய்?

பையன்—(சிறிது நேரம் யோசித்து) கொஞ்ச நாளாய்த்தான்.

தியாக—(அவன் முகக் குறியையும், யோசித்துப் பேசுவதையுங் கவனித்து) ஏதோ சங்கதியை மனதில் வைத்துக்கொண்டு ஒளிக்கிறாய்: உண்மையைச் சொல்.

பையன்—இந்தத்தடியைப்பற்றிய கதையொன்றுண்டு. ஆனால், சொல்லப் பயமாயிருக்கிறது!

தியாக—அப்படியானால், அது பெயர்பெற்றதடியாகவேண்டும். அக்கதையைச் சொல்: பயமொன்றுமில்லை!

பையன்—நான் உனக்குச் சொல்லுகிறேன். ஆனால் நீ இதை வேறு யாருக்கும் வெளியிடக்கூடாது. என்னையும் ஒன்றுஞ் செய்யக்கூடாது.

தியாக—ஒன்றுஞ்செய்யமாட்டேன். பயப்படாமற் சொல்!

பையன்—நீதானே அந்தத் தோட்டத்திலுள்ள மரக்கிளைகளிலேறி அதிக சாமார்த்தியமாக விளையாடினது? நானும் அன்றையதினம் பார்க்கவந்திருந்தேன். எனக்கு விளையாடத் தெரியாது. ஆனாலும் நீ விளையாடினது எனக்கு மிக்க சந்தோஷத்தை யுண்டாக்கிறது.

தியாக—நான் செய்த வேலைகள் அவ்வளவு பிரமாதமானவை யல்ல.

பையன்—பிறகு நாடகத்திற்கும் போயிருந்தேன். அங்கே ராஜாவேஷம் போட்டிருந்தவர் நீதானென்று நினைக்கிறேன்?

தியாக—ஆம், அது போகட்டும். நீ வைத்திருக்குந் தடியைப்பற்றிய கதையைச் சொல்!

பையன்—நாடகம் நடந்த இரவு ஒரு பையன் அதிக விரைவாக அதோ தெரிகிற என்னுடைய குடிசைக்கு வந்தான். நான் அப்பொழுதுதான் நாடகத்திலிருந்து திரும்பினேனாகையால் திண்ணையின் பேரில் உட்கார்ந்தேன். அவன் என்னிடம் வந்து என் கையில் தடி யிருக்கக்கண்டு 'இந்தத் தடியைக் கொடு' என்றுகேட்டான். ஏதோ காரணங்கொண்டு கேட்கிறானென்று நானறிந்து 'நாலணாகொடுத்தால் கொடுப்பேன்' என்றேன். உடனே தன்னுடைய சட்டைப்பையில் கையிட்டு அரை ரூபாயை யெடுத்து என் கையில் போட்டுத் தடியைப் பிடுங்கிக்கொண்டு வெகு வேகமாக நடந்துபோனான். அவன் நடந்து போன வேகத்தையும், நாலணா கேட்க எட்டணா கொடுத்ததையும் யோசிக்க அவன் ஏதோ துர்க்காரியம் நடத்த உத்தேசித்தே தடியை வாங்கிப் போனானென்று என் மனதிற் பட்டதால், அவனறிந்து கொள்ளாதபடி அவனைப் பின்தொடரலாயினேன். அவன் நேராய் அம்பலவாண முதலியாருடைய வீட்டிற்குப்போய் அங்கிருந்து திரும்பி மைதானத்தை

நோக்கி நடந்து போனான். நான் அவனுக்குப்பிறகே நடந்துபோயும், எப்படியோ திடீரென்று இருட்டில் அவனுருவம் என்னுடைய கண்ணுக்குத் தெரியாமல் மறைந்துவிட்டது. நான் அங்கோரிடத்திலுட்கார்ந்தேன். கொஞ்சநேரங் கழித்து நீ அதே வழியாகப் பள்ளிக்கூடத்தை நோக்கி நடந்து வந்தாய். ஆனால் உன்னுடைய அடையாளம் இருட்டில் தெரியவில்லை. நானிருந்ததையுங் கவனியாமல் நீ போய்க்கொண்டிருந்தாய். நான் உன்னைப் பின்பற்றலானேன். நீ வாராவதியைச்சேர்ந்ததும் உன்பின்னாகத் திடீரென்று யாரோ வொருவன் அடிக்கப் பார்த்தேன். அந்த இருட்டில் உன்னை நானறிந்துகொள்ளமுடியாதிருந்தாலும் உன்னை யடித்தவனைமாத்திரம் என்னிடத்திலிருந்து தடியை வாங்கிப் போனவனே யென்று அறிந்து கொண்டேன்.

தியாக—நீயேன் எனக்கு உதவி புரிய வந்திருக்கப்படாது.?

ஐயன்—உதவி புரியவே வந்தேன். ஆனால் நீ திடீரென்று ஜலத்தில் விழுந்த சப்தத்தைக் கேட்டுப் பின் வாங்கினேன். ஏனென்றால், அந்தச் சமயத்தில் உன்னை யடித்தவன் ஓட்டம் பிடிக்கவும், நான் உன்னிடம் வந்தால், என்னைத் தவிர வேறு யாருமில்லாததுபற்றி என்பேரில் பழி சுமத்தப்படுமென்று அஞ்சியே நான் நெருங்கவில்லை. மறுநாள் அதி காலையில் அவ்விடத்திற்குப்போனேன். யாரையுங் காணோம். இந்தத் தடிமாத்திரம் அங்கேயிருந்தது; எடுத்துக் கொண்டு வந்துவிட்டேன்.

தியாக—ஆம். அடிபட்டவன் நான்தானென்று நீ எப்படி யறிந்தாய்?

பையன்—மறுநாள் பள்ளிக்கூடத்திற்கு அருகாமையில் நான் என்னுடைய மாடுகளை மேய்த்துக் கொண்டிருந்தபோது உன்னை மாத்திரம் அங்கே பார்க்கவில்லை. அதனால் உன்னைப்பற்றி விசாரிக்க, நீ பள்ளிக்கூடம் போகவில்லையென்றும், நோவாயிருந்தாயென்றுங் கேள்விப்பட்டேன். இவற்றால் அடிபட்டவர் நீதானென்று நிர்மாணித்துக்கொண்டேன்.

தியாக—சரி, இனி யென்னை அடித்தவன் யாரென்று தெரிவிக்கக்கூடுமா?

பையன்—நானவனைத் தெரிவித்தால் என்ன செய்வாயோ?

தியாக—ஒன்றுமில்லை; பயப்படாதே!

பையன்—அப்படியானால் சொல்லுகிறேன். உன்னை யடித்தவன் 'மாணிக்கம்' என்பவனே.

தியாக—அப்படித்தான் நானும் நினைத்தேன்: ஆனால் எனக்குத்தக்க ஆதாரங்கிடைக்கவில்லை.

பையன்—இப்பொழுது ஆதாரங் கிடைத்ததே, அவனை என்னசெய்ய உத்தேசம்?

தியாக—நான் ஒன்றுஞ்செய்யப்போகிறதில்லை. நீயும் இந்த விஷயத்தை வேறு யாருக்குந் தெரிவிக்காதே!

பையன்—நான் யாருக்குஞ் சொல்லமாட்டேன். சொன்னாலும் அவன் என்பேரிலேயே ஒருக்கால் பழியைப் போட்டுவிடுவான். ஜனங்களும் அவன்பேச்சை நம்புவார்களேயொழிய என்னுடைய பேச்சை நம்பமாட்டார்கள். அது காலக்கூத்து.

இவ்வாறு சம்பாஷணை நடந்தபிறகு மாட்டுக்காரப்பையனை விட்டு நீங்கித் தியாகராஜன் தன்னுடைய அறைக்குப்போய் நடந்தசம்பவங்களைப்பற்றி நெடுநேரம் யோசிக்கலானான். 'மாணிக்கம் நம் விஷயத்தில் நடத்திய கொடுஞ் செய்கைகளுக்காகப்பழிக்குப்பழி வாங்கக்கூடும். ஆனால் அவன்தான் துஷ்டபுத்தியால்செய்தாலும் நாம் செய்வது தகுதியன்று. திருவள்ளுவரும்,

*"திறனல்ல தற்பிறர் செய்யினு நோநொந்
தறனல்ல செய்யாமை நன்று." என்று

கூறினாரல்லவா?' என்பதாகத் தனக்குத்தானே ஆறுதலடைந்தான். இரண்டொருநாள் கழித்துத் தியாகராஜன் தோட்டத்தி லுலாவிக்கொண்டு வரும்பொழுது வடிவுடையம்மையைச் சந்தித்தான். அவள் இவனைக் கண்டும், எப்பொழுதும் பேசுவதுபோல அன்றையதினம் பேசவில்லை. அப்படியவள் பேசாததற்குக் காரணம் தியாகராஜனுடைய வேண்டுகோ

---

* (இ-ள்) செய்யத்தகாத கொடியவைகளைத் தன்னிடத்துப் பிறர் செய்தாலும், அதனாலுண்டாகுந் துன்பத்திற்காக வருந்தித் தான் தருமமல்லாத செய்கைகளைச் செய்யாதிருத்தல் (ஒருவனுக்கு) நல்லது.

ளல்லவா? தன்னுடைய வேண்டுகோளின் பேரிலேயே பேசவில்லையென்று அறிந்தும், அவள்பேரில் வைத்திருந்த ஆசைப்பெருக்கினால், அவள்பேசாமையைக் காண அஃது அவனிருதயத்தில் ஆணியறைந்ததுபோலாயிற்று. தானாகவே பேசலாமென்றும் எண்ணினான், அப்படிப் பேசுவதனால் தன்னுடைய நெறி கெட்டுப் போகுமென்று கருதி உடனே மனதைத் திடப்படுத்திக்கொண்டு அவ்விடத்தினின்று நீங்கி வந்துவிட்டான்.

சில மாதங்கள் கழிந்தன. யாதொரு விசேடமும் இடையில் நடக்கவில்லை. தியாகராஜன் முன்போல வெளியே போவதையும் நிறுத்திப் படிக்கத் தலைப்பட்டான். பாடமல்லாத சில அரியபெரிய விஷயங்களையும் தன்னுடைய சொந்த நன்மையின் பொருட்டுப் படித்து வந்தான். இப்படி யிருக்கும் பொழுது மழைக்காலந் தொடங்கினது.

அத்தியாயம் - 7.

தியாகராஜன் பிராணாபத்து.

பல நாட்களாய் அறையிலேயே படித்திருந்த தியாகராஜனுக்கு உலாவப்போகலாமென்னும் இச்சையுண்டாக; ஒருநாள் மாலை 6-மணி சுமாருக்கு வெளியே புறப்பட்டான். அப்பொழுது பூர்வபட்ச துவாதசி காலமானதால் நிலவு புறப்பட்டிருந்தது. ஆகாயம் களங்கமின்றி யிருக்கவே, அதில் முளைத்த

சந்திரனும் அதிக தாவள்யமாய்ப் பிரகாசித்தான். சந்திர கிரணம் தேகத்திற்குக் கெடுதியை விளைவிப்பதாயிருந்தும், அந்த வொளியில் நடக்கப் பிரியங் கொள்ளாதவர்கள் வெகு சிலரே. உலாத்தப் புறப்பட்டவன் அதிக தொலைதூரம் போய்விட்டான். நிலவு வெளிச்சத்தினாலும், சுத்தக் காற்று வீசுதலினாலும் மனோரம்மியமாயிருந்ததால் எவ்வளவு தூரம் நடந்துவந்தானென்றும், எவ்வளவு நேரமாயிற்றென்றும் அவனுக்குத் தோற்றவில்லை. சற்று நிதானித்து சட்டைப்பையிலிருந்த கடிகாரத்தை யெடுத்துப் பார்க்க மணி 9 ஆயிருந்தது. 'அடடா! நெடுநேரமாய்விட்டதே' என்று சொல்லிக்கொண்டான். அவ்வளவு நேரம்வரைக்கும் வெளியே போயிருப்பது பள்ளிக்கூடத்துச் சட்டங்களுக்கு விரோதமென்பதைத் தியாகராஜன் நன்றாயறிவான். 'இப்பொழுது திருட்டுத்தனமாகத்தான் நம்முடைய அறைக்குப் போகவேண்டும். இல்லாவிட்டால் நாளையதினம் நமக்குத் தகுந்த தண்டனை விதிக்கப்படும்' என்பதாக யோசித்து அதிக தீவிரமாகப் பாடசாலையைநோக்கி நடந்துவந்தான். இரண்டுமைலுக்கு அப்புறந்தான் இருமருங்கிலும் வீடுகளுண்டு. இதனிடையில் நாற்புறமும் வெட்டவெளியான மைதானமிருந்தது. தன்னுடைய உயிருக்கேனும், சரீரத்திற்கேனும்எதாவது கெடுதி நேரிடுமென்று தியாகராஜன் எண்ணிப் பயந்தவனல்ல. பரீட்சைகாலம் சமீபித்திருந்தது. அதில் கட்டாயமாய்த்தேறுவோமென்று அவனுக்குத் திடமிருந்தது. தேறியபிறகு நகரியிலுள்ள கல்லூரியில் போய்ப்படிக்கப்போகிறோமல்லவா வென்கிற ஆசை

அவனுடைய மனத்தை அப்படியே கவர்ந்து கொண்டது. இவ்வாறெல்லாம் தன்னுடைய சொந்த விஷயங்களையும், பிற்கால நிலைமைகளையும் பற்றி மனோராஜ்யம் பண்ணிக்கொண்டு போனானையால், தன்னையொருவன் பின்பற்றி வருவதைக் கவனித்தவனல்ல.

ஒருமைல் தூரம் கடந்துவிட்டான். அதற்கப்புறம் சாலையினொருபுறமாய் அச்சாலையினூடே ஒரு மதிற்சுவர் சென்றிருந்தது. அது அந்நகரத்திலிருந்த பழமையான கோட்டையின் மதிற்சுவர். அநேகமாய் அரைமைலுக்கு நெடுகப்போயிருந்தது. அந்தச்சுவற்றோரமாய் நடந்துவந்தபொழுது திடீரென்று காது பிளந்துபோகும்படியாய் ஒரு வெடியல் சப்தங்கேட்டது. தன்னுடைய தலைக்குமேல் ஒருகுண்டு பறந்து போனதாக வறிந்தான். ஒன்றுந்தோற்றாமல் திக்பிரமைகொண்டு சிறிதுநேரம் நின்றுவிட்டான். மீண்டும் மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு திரும்பிப் பார்த்தான். தான் நின்றிருந்த விடத்திற்கு நேரெதிரில் மதிற் சுவற்றினிடமிருந்து புகை கிளம்பிக்கொண்டிருந்தது. தியாகராஜனிடத்தில் வழித்துணையாகச் சிறுதடியுமில்லை. அதிக தைரியத்துடன் சுவற்றின் பேரிலேறினான். அவன் ஏறும்பொழுதே இரண்டாவதாக வெடியல் சப்தங்கேட்டுத் தோளின் பக்கமாக மற்றொருகுண்டு பறந்துபோயிற்று. இந்தக் குண்டும் நம்முடைய கதாநாயகனுடைய அதிர்ஷ்டவசத்தினால் குறி தப்பியதென்றே சொல்லவேண்டும்.

சற்று நிதானித்துச் சுவற்றிற்கு அப்புறங்குதித்தான். அந்தச் சமயத்தில் களங்கமில்லாத ஆகாயத்தில் மேகந் தோன்றிச் சந்திரனை மறைத்திருந்தது. குதித்ததும், ஒரு ஆள் துப்பாக்கி சகிதம் தன்னெதிரில் நிற்கக்கண்டான். ஆனால் அவனின்னானென்று அறிய முடியவில்லை. அவன் தியாகராஜனை நெருங்கித் துப்பாக்கியை யோங்கித் தலையில் அடிக்கவந்தான். தெய்வாதீனமாய்த் தியாகராஜன் சற்றுவிலகவும், அவனை யவ்வடி தாக்கவில்லை. உடனே தியாகராஜன் தன்னெதிரில் நின்றிருந்த ஆள்மேற் பாய்ந்து அவனுடைய துப்பாக்கியைத் தன்கைக்கொண்டு, மற்றொருகையால் அவனுடைய கழுத்தையுங் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டான். அப்பொழுது மேகத்தினின்று விடுபட்ட சந்திரன் பிரகாசிக்க, தன்னுடைய உயிரை வாங்கப் பிரயத்தனப்பட்டவன் மாணிக்கமென்று அறிந்தான். 'மாணிக்கம்! இஃது உனக்குத் தகுமா? என்னைக் கொலைசெய்யவா பார்த்தாய்?' என்றான் தியாகராஜன். தன்னுடைய கழுத்தைத் தியாகராஜன் கையினின்றுந் திமிறிக்கொள்ளப்பார்த்தும் முடியாமல், மாணிக்கம் உடனே கீழே குனிந்து தரையிலிருந்த ஒரு தடியைக் கையிலெடுத்துக்கொண்டு 'என்னுடைய கழுத்தை விடுகிறாயா, இல்லையா'? என்று கேட்டான். தியாகராஜனொன்றும் பதில் சொல்லாமலிருந்தான். மாணிக்கத்தின் விழியிரண்டும் வெளிவரவே ஆயத்தமாயிருந்தன. அப்படியிருந்தும் தியாகராஜனைப் பார்த்து 'உன்னைநான் கொன்றுபோடுவேன்' என்று பயமுறுத்தினான்.

16

தியாக—என்னைச் சொல்ல நெருக்காதாம் உன் னுக் குறையாது. உன்னைப்போலொத்த பெருமையை நான் பார்த்ததுமில்லை. உன்னை முதல் முதல் பார்த்த பொழுதே நீ பெரிய ஐசுவரியவானாயிருக்கவேண்டு மென்று எண்ணினேன். அந்த எண்ணத்தை நீ நிலை நிறுத்திவிட்டாய், என்னுடைய உயிருக்கு நீ உயி வைத்தது இஃதிரண்டாவது தடவை.

ராணி—உன்னை நான் கட்டாயமாய் இன்றிரவு கொண்டுபோகிறேன். என்னைப்பற்றிப்பலவிதமாக பொய்க்கதைகளை யெல்லாம் வடிவுடையம்மையி னிடத்தில் நீ சொல்லியிருக்கிறாய்.

தியாக—உன்னைப்பற்றி நான் ஒருவார்த்தையும் அப்பெண்ணிடத்தில் பேசி யறியேன். நான் சொல் லாமலே உன்னைப்பற்றி யவள் அதிகமறிந்திருக்கி றாள். உன் விஷயத்தில் ஜாக்கிரதையா யிருக்கும்படி யும் எனக்குப் பலதடவை சொன்னாள்.

ராணி—நீ சொல்வதெல்லாம் சுத்தப் பொய்.

தியாக—மாணிக்கம்! நான் சொல்லுவதைக் கவனி! நான் முன்பு சொன்னபிரகாரம் நீ என் னுடைய உயிரை வாங்கப்பிரயத்தனப்பட்டது இஃது இரண்டாந்தரம். நீ இம்மாதிரியே செய்து வருவா யானால் இனி என்னால் பொறுக்க முடியாது. ஒன்று நீயே இந்த ஊரைவிட்டு ஓடிப்போகவேண்டும். அல் லது, நான் உன்மேல் குற்றஞ்சாட்டி நீ வந்தவிடத் திற்கு உன்னுடைய சகோதரியே போனயோ அந்த விடத்திற்கே (சிறைச்சாலைக்கு) கட்டாயம் அனுப்பி வைத்துவிடுவேன். இது சத்தியம்!

மாலினி—(கடகடவென்று சிரித்துக்கொண்டு) என்பேரில் நீ குற்றஞ்சாட்டினால் அதை நம்புவது யார்?

தியாக—தகுந்த சாட்சியொன்று எனக்கிருக்கிறது.

மாலினி—(சுற்றுமுற் றிரும்பிப்பார்த்து) உன்னுடைய சாட்சி யெங்கே?

தியாக—என்னுடைய சாட்சி யாரென்றும் எங்கேயென்றும் உனக்குச் சொல்லவேண்டிய அவசியமில்லை. சொன்னால், அவனுடைய உயிரைக் கட்டாயமாய் நீ வாங்கிவிடுவாய். உன்னைப்போலக் கொலைபாதகியை நான் பார்த்ததே கிடையாது. இதை மாத்திரம் நம்பு! இந்தப் பள்ளிக்கூடத்தைவிட்டு நீ உடனே ஓட்டமெடுக்கவேண்டியது. இல்லாவிட்டால் நீ ஜெயிலுக்குப்போவது திண்ணம்.

மாலினி—உன்னால் ஒருக்காலும் என்பேரில் குற்றஞ் சாட்டவே முடியாது.

இப்படி மாலினி சொல்லிக்கொண்டே ஒரு பயங்கரமான காரியஞ் செய்தாள். பேசப்பராக்கிலிருக்குந் தியாகராஜனுடைய கையிலிருந்து தன்னுடைய கழுத்தைத் திமிறென்று விடுவித்துக்கொண்டு (முன்பு குனிந்தெடுத்துக் கையில் வைத்துக்கொண்டிருந்த) தடியை இருகையிலும் பிடித்து உருவினாள். தடி விண்டுபட்டு அதினின்றும் ஓர் பட்டாக்கத்தி தோன்றினது. அதைத் தன் கையிலேந்திக்கொண்டு தியாகராஜன்மேல் ஒரே பாய்ச்சலாய்ப்பாய்ந்தாள்.

பார்த்ததில், காலிடறித்தியாகராஜனுடைய காலடியில் விழுந்தான். தானெறிந்த நீள் கத்தியில் அவனுடைய கத்தி மேலேபட்டு இருதுண்டாய்ப்போய்விட்டது. விழுந்த அதிர்ச்சியில் கொஞ்சநேரம் ஒன்றுஞ் செய்யாமலிருந்தான். தியாகராஜன் வேண்டுமென்றால் மாணிக்கத்தின் முதுகின்மேலேறி அவனைக்குப்புறத் தள்ளிவைத்திருக்கலாம். அவன் அவ்வாறு நீதி குணமுள்ளவனல்லவென்பது ஏற்கெனவே தெரிந்திருக்கிறதல்லவா? ஆகவே, அவன் மாணிக்கமெழுந்திருக்கும்வரையும் ஒன்றுஞ்செய்யாமல் நின்றான். மாணிக்கம் பிறகு எழுந்திருக்க, இருவரும் ஒருவரையொருவர் எதிர் நோக்கி நின்றார்கள்.

'மாணிக்கம்! இனியாகிலும் புத்தி வந்ததா?' என்று கேட்டான் தியாகராஜன். 'ஐயா ஸ்வாமி! உன்னுடைய உபகாரங்கள் இன்னுமும் என்னால் முடியும்' என்றான் மாணிக்கம்! 'என்னையா கொல்லுவாய்? இனி உன்னால் முடியாது. இதைத்திடமாய் நம்பு! உன்னை யென்னசெய்வதென்று தெரியவில்லை. உன் விஷயத்தில் பரிதாபப்படவும் எனக்குப்பிரியமில்லை. கடைசியாக நீ போலீஸ்சேவகருடைய இடத்திற்கு உன்னை அனுப்பிவைப்பதுதான் மேல். அந்த உனது வாழ்நாளெல்லாம் துக்கமாயிருக்குமாகையால், நன்றாய் யோசித்துப்பார்த்து நான் சொன்னபிரகாரம் இவ்வூரைவிட்டு ஓடிப்போய்விடு. கோபாவேசத்திலிருக்கிறபடியால் இப்பொழுதொன்றும் உனக்குத் தோன்றாது. கொஞ்சநேரங்கழித்து உன்னுடைய சரீரத்திலிரத்தம் குளிர்ந்தவுடனே கவனித்துப்பார்!' என்று தியாகராஜன் சொன்னான்.

மாணிக்கத்தின் பராவருணம் போதாதல்லவா? அவன் மறுபடியும் தியாகராஜனைத் தாவிப் பிடித்து அவனைக் கீழே வீழ்த்தப்பார்த்தான். இருவருக்குங் கொஞ்சநேரம் மல்யுத்தம் நடந்தது. அந்த யுத்தத்தில் தியாகராஜன் மாணிக்கத்தைச் சிறு குழந்தையைத் தள்ளுவதுபோலக் கீழே தள்ளி, அருகாமையிலிருந்த தண்ணீர்த் துறைக்கு இழுத்துக்கொண்டு போய், 'நீ ஒருதடவை என்னைத் தண்ணீரில் தள்ளினாய். நான் இப்பொழுது உன்னுடைய கோபாக்கினியைத் தண்மைப்படுத்த உன்னைத் தள்ளுகிறேன்' என்று சொல்லி அவனை யந்த நீரில் தள்ளினான். நீர் இடுப்பளவிருந்தது. விழுந்ததும், மாணிக்கம் சமாளித்து எழுந்து நின்று கரைக்குவந்து சேர்ந்தான். தியாகராஜன் அவனுடைய வருகையை எதிர்நோக்கியிருந்தான். வெளிவந்ததும் அவனைப் பார்த்து 'இப்போதாவது என்னைக்கொல்ல உன்னால் முடியாதென்றும், வேண்டுமென்றால் என்னால் உன்னை ஜெயிலுக்கு அனுப்பிவைக்க முடியுமென்று அறிந்தாயா? இன்றையிலிருந்து உனக்கு ஒருவாரம் தவணை கொடுக்கிறேன். இந்த ஒருவாரத்திற்குமேல் உன்னைப் பார்க்கநேரிட்டுமேயானால், உன்பேரில் பிரயாதுசெய்து உன்னைக் கட்டாயமாய் ஜெயிலுக்கு அனுப்பிவைப்பேன் தெரியுமா? ஜாக்கிரதை!' என்று பேசிவிட்டு மதிற்சுவரேறிக் குதித்துத் தன் வழியே நடந்துபோனான். போகும்போது மாணிக்கத்தைப்பற்றியும் அவன் தன்னைப் பலவிதத்திலுங் கொல்லப் பலவகைதேடினதைப்பற்றியும் நினைத்துவிசனப்பட்டான். தன்னுடைய அறைக்குப்போய்ச் சேர்ந்தான். படுக்கையில்

இரண்டு மூன்று தடவை படித்துப் பார்த்தான். தூக்கம் வரவில்லை. படிக்கவும் மனம் வரவில்லை. இராமுழுவதும் அறைக்குள்ளேயே உலாவிக்கொண்டிருந்தான்.

காலை 6 மணிக்குச் சிவசேகரன் தியாகராஜனுடைய அறைக்குள் நுழைந்து "தியாகு! உன்னைப் பார்த்தாலென்ன இரவெல்லாம் கண்விழித்தவனைப் போலிருக்கிறதே? இப்படிக் கண்விழிப்பது நல்லதல்ல" என்று சொன்னான். "நான் உலாத்தப் போய் வருகிறேன். என்னை இந்த ஸ்திதியில் பார்த்ததாக ஒருவருக்குஞ் சொல்லாதே" என்று சொல்லிவிட்டுத் தியாகராஜன் வெளியேபோய், பள்ளிக்கூடநேரத்திற்குச் சரியாகத் திரும்பி வந்துவிட்டான்.

மாணிக்கம் அன்றையதினம் பாடசாலைக்குப் போகவில்லை. தேக அசௌக்கியமென்று சொல்லி நின்றுவிட்டான். இரண்டுநாள் - நாலுநாள் - ஒரு வாரம் - பத்துநாளாயின. மாணிக்கம் தன்னுடைய அறையைவிட்டு வெளியே வரவில்லை. அவனுடைய தேக நிலைமை உண்மையிலேயே அதிக கேவலமுற்றிருந்தது. தான் செய்த கொடிய விஷயங்களையெல்லாம் ஒருக்கால் வெளிப்படுத்தித் தியாகராஜன் சங்கடத்துக்குள்ளாக்குவானென்னும் பயமே இதற்குக் காரணம். இரண்டு வாரத்திற்குமேல் மாணிக்கம் பள்ளிக்கூடத்தை விட்டுத் தன்னுடைய ஊராகிய நகரிக்குப்போவதாகப் பிரஸ்தாபிக்கப்பட்டது. குறித்த நாள்வர, பிள்ளைகளெல்லாம் அன்றையதினம் அவ

னுடைய பிரியாத்துமாவைப் பாண்டித்தியம் காட்டினு ர்கள். கொஞ்சநாளுக்குள் பிள்ளைகள் பேரில் அதிப தியைச் செலுத்தி வந்தவனுகையால், அவர்கள் தங்க ளுடைய எஜமானை பிரிந்துபோனவேளையில் வருத்தப் பட்டார்கள். தன்னுடைய சம்சாரத்தின் பேரி லேயே மாணிக்கம் பாடசாலையிலிருந்து [illegible] ன்று தியாகராஜன் [illegible] மாதிரிமதிப்பான். மன் னுதான் இப்பொழுது போய்விட்டதால், இன்னுஞ் சில மாதங்களில், தான் போய்ப்படிக்க உத்தேசித்தி ருக்கும் காசியில் அவளைச் சந்திக்காமல் போகமுடி யாதென்று தியாகராஜன் எண்ணினுன்.

மாணிக்கம் பாடசாலையை விட்ட சில நாட்கள் கழித்தபின் ஒரு விசேஷமுண்டாயிற்று. அதா வது—அப்பையரை முதலியாருக்குச் சில மாதங் களாக அடிக்கடி வியாதி வருவதைக்கருதி, வைத்தி யர்கள் அவரை இவ்வூரிலின்று நீங்கி வெளியூருக்கு ப்போய் வசிக்கவேண்டுமென்று சொன்னவுடன் அவர் தனது வீட்டை வாடகைக்கு விட்டு, காசிக்குப் போய் அங்கேயே வசிக்கப்போவதாக ஏற்பாடுசெய்தா ரம் முடிந்துவிட்டன என்பதே. இதைக்கேட்டதும் தியாகராஜன் சொல்லமுடியாத சந்தோஷமடைந்தான். அவ னது மனவேக்கத்திற்கு எல்லையேயில்லை. இப்பொழு [illegible] [illegible] லே, இந்தச்சமாசாரத்தைக் கேட்டவுடன் [illegible] சாதிபம். [illegible] அத்தியாயத்திலே, பிள்ளைகளைப்பற்றியது.

“ உடம்போ டுயிரிடை யென்னமற் றன்ன
மடந்தையோ டெம்மிடை நட்பு ” என்றார்.

காதலானது ஒருவனுக்குச் சத்துருவாகவும், மித்து ருவாகவு மிருக்கிறது. காதலிக்கப்பட்டவள் தனக் குக் கிடைக்காத போது காதல் கொண்டிருந்தவ னுடைய மனத்திற்குந் தேகத்திற்குங் கேட்டைவிளை விப்பதில் அது சத்துருவாகவும், கிடைத்த போது ஆநந்தத்தை விளைவிப்பதில் மித்துருவாகவு மிருக்கி றது. தான் காதலித்துவந்த வடிவுடையம்மை அவ் வூரைவிட்டுத் தன்னுடைய தகப்பனுரொடு நகரிக்கு ப்போவதாகக் கேள்விப்பட்டதிலிருந்து தியாகராஜன் இரவில் சரியானபடி தூக்கமுங்கொள்வதில்லை. எந் நேரமும் அவளையே சிந்தித்திருந்தபடியினுல், சில போது அவளோடு வார்த்தையாடுவது போலவுந் தனியே பிதற்றுவான்.

ஒருநாள் மாலை மணி 7 இருக்கும். தன்னு டைய அறையில்உட்கார்ந்துகொண்டு, தலையைத்தன் னிருகைகளாலுந்தாங்கி, நாடகத்தில்சோகபாகத்தை நடித்துக்காட்டுபவனைப்போலிருந்தான். தனதுபெய ரை யாரோ கூப்பிட்ட குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். அவனுடைய ஆச்சர்யத்திற்கு ஒ ரெல்லை யே யில்லை. தான் யாரைப்பற்றி இவ்வளவாக ஏக்கங் கொள்ளவேண்டியதா யிருந்ததோ, அவளையே தன் முன்பாக நிற்கக்கண்டான். அவள் ‘தியாகு! க்ஷேம ந்தானு?’ என்று கேட்டாள்.

தியாக—க்ஷேமந்தான். உன்னுடைய க்ஷேமா திகளெப்படி?

வடிவு—உங்கள் தயவால் க்ஷேமமே. நீங்கள் உட்கார்ந்திருந்த நிலைமையைப்பார்த்தால், ஏதோ ஒரு புதிய நாடகத்திற்காக அபிநயித்துக்கொண்டிருப்பதைப்போல் தோற்றியது. அப்படி யோசித்தும் சோகபாகமாயுள்ள நாடகம் சமீபத்திலநடத்த உத்தேசமா? அல்லது, நாடகத்திலேயே சேர்ந்துவிடப்போகிறீர்களா?

இதைக்கேட்டதும், தியாகராஜன் வடிவுடையம்மையை உற்று நோக்கினான். அவனுடைய பார்வை அந்தச் சமயத்தில் அதிக கம்பீரமா யிருந்ததன்றியும், அவன்முகம் அவ்வளவு கீர்த்தியாய்ப்பிரகாசித்ததை வடிவுடையம்மை இதற்குமுன் கண்டதுமில்லை. தியாகராஜன் மிகவும் பரிதாபமான குரலில், 'ஒரு காலத்தில் பரிசாரகனாயிருந்தவன் நாடகத்தில் சேருவதைவிட வேறெந்தப் பதவியை யடைய முடியும்?' என்றான்.

வடிவு—தியாகு! நான் வேடிக்கையாகச் சொன்னதை நீங்கள் இவ்வளவு விபரீதமாகக்கொள்ளுவீர்களென்று நான் சற்றும் நினைக்கவேயில்லை. நினைத்திருந்தால் சொல்லியே யிருக்கமாட்டேன். என்னுடைய மடமையை மன்னியுங்கள்.

தியாக—உனக்கு விசனத்தையுண்டாக்கிய என்னுடைய மடமைக்காக நானல்லவா உனது மன்னிப்பைக் கோரவேண்டும்? அது போகட்டும், நீயும் உனது தகப்பனும் நகரித்துப் போய்விட்டதாகக் கேள்விப்பட்டேன். அது உண்மைதானா?

வடிவு—ஆம்; பிறந்ததிலிருந்து இந்த ஊரிலேயே பழகிவிட்டபடியால் எனக்கு மாத்திரம் நகரித்துப்போவதைப்பற்றி சந்தோஷமே கிடையாது. தியாகு, உங்களிடத்தில் ஒரு விஷயம் அறியவேண்

டும். மாணிக்கம் பாடசாலையைவிட்டுத் தன்னூருக்கு ஏன் திரும்பிவிட்டாரென்று உங்களுக்குத் தெரியுமா?

(தியாகராஜனுக்குப் பதில் சொல்ல நா வெழவில்லை. பேசவாரம்பித்தான்; நா குழறிற்று. வடிவுடையம்மை அவன் முகத்தை யுற்றுப்பார்த்த வண்ணமாக நின்றாள். பிறகு 'இந்த ஊரைவிட்டு ஓடிப்போகும்படி நீங்கள் கட்டளையிட்ட துண்டா?' என்றாள்.)

தியாக—ஆம், நான் கட்டளையிட்டதுண்டு.

வடிவு—போகாவிட்டால், சங்கடத்திற்குள்ளாக்குவதாய்ப் பயப்படுத்தியதுண்டா?

தியாக—(கடுகடுத்த முகத்தோடு) ஆமாம், பயப்படுத்தியதுமுண்டு. அதற்கென்ன?

வடிவு—(அவனுடைய முகக்கடுமையைக்கண்டு இரக்கமான குரலில்) மாணிக்கத்தை நீங்கள் ஏன் தண்ணீரில் தள்ளினீர்கள்? இப்படிச் செய்ததுமல்லாமல், ஊரைவிட்டுப்போகும்படியாகவுங் கட்டளையிட்டீர்களாமே, காரணமென்ன?

தியாக—(வெகு கோபமாய்) நான் காரணஞ் சொல்லமாட்டேன்! அந்தவிஷயத்தைப்பற்றி என்னை யொன்றுங் கேட்காதே!

(மாணிக்கம் விஷயமாய் வடிவுடையம்மை விசாரிக்கவும், அவள்பேரிலிருந்த பிரியத்தையும் தியாகராஜன் கவனிக்கவில்லை.)

வடிவு—(மிகவும் தாழ்மையாய்) தியாகு, அந்த விஷயத்தைப்பற்றிச் சில பேச்சுகள் என்னுடைய காதிற் கெட்டின. ஆனாலும், உங்களுடைய வாக்கு

ழலத்தைக் கேட்கப் பிரியங்கொண்டிருந்தபடியால் கேட்டேனே யல்லது, வேறு விபரீதங் கருதியன்று.

தியாக—என்னுடைய வாக்குழலத்தை நீயறிய முடியாது. நான் அவனைத் தண்ணீரில் தள்ளினதும், ஊரைவிட்டோட்டியதும் உண்மையே!

வடிவு—என்னுடைய எண்ணம் ஈடேறவில்லை. நான் போய் வருகிறேன். வந்தனம்! (என்று சொல்லிப் போய்விட்டாள்.)

வடிவுடையம்மை தான் வெளியிடவெண்ணியதை முழுவதும் சொல்லியிருப்பாளே யானால், நம்முடைய கதாநாயகனும்நடந்தவிஷயங்களையெல்லாம் கட்டாயமாய்ச்சொல்லிவிட்டிருப்பான். அவள் தனது எண்ணத்தை வெளியிடாதொழிந்ததும் விசனிக்கத்தக்கதே. தியாகராஜன் வடிவுடையம்மையை மறுபடியுஞ் சந்திக்கவேயில்லை. இரண்டுவாரத்தின் பிறகு அவள் தன் தகப்பனோடு நகரிக்குப் போய்விட்டாள். அவள்பிரிவை யாற்றமுடியாமல் தியாகராஜன் பெரிதுந் துக்கித்தான். அவளை நினைக்கிறதில்லையென்று பிரதிக்கினை செய்தும் பார்த்தான். நினைக்காமலிருக்க முடியவில்லை.

வடிவுடையம்மையின் எண்ணம் ஒருபக்கமிருந்தாலும், தன்னுடைய பாடங்களில் எப்போதும் போல் கவனம் வைத்துப் படித்துவந்தான். பரீட்சை காலத்தில் மற்றப் பிள்ளைகளைவிட முதன்மையாகத் தேறினான். இனி, முன் சொல்லியபிரகாரம் நம்முடைய கதாநாயகன் இந்தப் பாடசாலையைவிட்டு நகரியிலிருந்த கல்லூரிக்குப் போகவேண்டி நேர்ந்தது. பிரதம உபாத்தியாயர் தியாகராஜனைத் தனது அறைக்கு வரவழைத்துப் பலபுத்திமதிகளைச்சொல்லி யனுப்பினார். அவருக்கும், மற்றைய உபாத்தியாயர்களுக்

கும், பாடசாலை மாணவர்களுக்குந் தகுந்த மரியா தை செய்துவிட்டு வைரவபுரத்தினின்றும் நீங்கி நகரியைநோக்கிப் பிரயாணப்பட்டான். போகு மார்க்கத்தில் நகரிக்கருகாமையிலிருந்த தன்னுடையபரோபகாரியின் குடும்பத்தாரைக்கண்டு அவர்கள்வீட்டில் இரண்டொருநாள் தங்கியிருந்து, பிறகு நகரிக்குப் போய் அங்கிருந்தராஜாங்கக்கல்லூரியில்சேர்ந்தான். சொற்ப வாடகையில் ஒரு சிறு அறை பேசினான். அவ்வூரிலிருந்த ஓரந்தணனாகின் ஹோட்டலில் மாதம் சொற்ப தொகையில் சாப்பாட்டிற்கும் ஏற்பாடு செய்துகொண்டான். அந்தக் கல்லூரியைச் சேர்ந்த புத்தகசாலையொன்றும், 'பந்துவிளையாட்டுச் சபை' யொன்றுமிருந்தன. அவை யொன்றிலும் தியாகராஜன் சேரவில்லை. ஒருவரோடும் சிநேகம்வைத்துக் கொள்ளவுமில்லை. தன்னுடைய பாடங்களைப் படிப்பதும், இஷ்டமாயிருந்தால் அவ்வூரிலுள்ள 'பார்க்' என்னும் உத்தியானவனத்தில் கொஞ்சநேரம் உலாவி வருவதுந்தான் அவனுடைய முக்கிய வேலைகளாயிருந்தன.

ஒருநாட்பொழுது (அன்றையதினம் கலாசாலை விடுமுறைநாள்) மாலை 4 மணி சுமாருக்கு மேற்படி சிங்காரத்தோட்டத்தில் தியாகராஜன் உலாவிக்கொண்டு, சாலையின் ஒருபுறமிருந்து மற்றொருபுறங் கடந்து போம்பொழுது இரண்டு குதிரைகள் பூட்டிய 'கோச்சு' வண்டியொன்று அதிகச்சமீபத்தில் வந்துகொண்டிருந்தது. வண்டி யோட்டுபவன் தியாகராஜனைப் பார்த்துச் சீக்கிரம் தாண்டிச் செல்லும்படியாய் அதட்டினான். வழியைவிட்டு விலகித் தியாகராஜன் ஓரமாய் நின்றான். வண்டி தன்னோரமாய்ப்போகவும், வண்டியிலுள்ளிருப்பவர்களைக் கண்டான். கண்டதும், அவனுடைய மனம் புழுங்கிற்று. தன்னுடைய கொடும் பகையாளியாகிய மாணிக்கமும், அவனுக்கருகாமை

யில் தான் அத்தியந்த பிரியங்கொண்டிருந்த வடிவுடையம்மையும் பார்த்திருக்கக்கண்டான். 'நான் நினைத்தபடியே முடிந்தது' என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டான். [illegible] களோ வண்டிக்காரன் திரும்பும்படியாக எச்சரிக்கச்சப்தங் கேட்டு இருபக்கத்திலும் திரும்பிப்பார்த்தார்கள். 'அந்தப் பயல் தியாகராஜன் போன்றிருக்கின்றான்பார்' என்று மாணிக்கம் வடிவுடையம்மைக்குக் காண்பித்தான். கவலையால் வாட்டமுற்றிருந்த அவளுடைய முகம் தியாகராஜனைக் கண்டமாத்திரத்தில் தெளிவடைந்தது. 'என்னைக் கொலைசெய்ய வந்திருக்கிறான்போலத் தோற்றுகிறது. என்னுடையஜென்மத்திலும் அவனுக்கு யாதொருதீங்குஞ் செய்ததுகிடையாது. அவன் ஏனோ என்னுடைய உயிருக்கே உலைவைத்துக்கொண்டு திரிகிறான்' என்றான் மாணிக்கம். “ஏதாவது காரியார்த்தமாக வந்திருக்கக்கூடாதோ?” என்று வடிவுடையம்மை கூறினாள். 'அப்படியிருந்தால் நல்லதாயிற்று. இல்லாவிட்டால் இவ்வளவு நாள் பொறுத்ததுபோல் இனிமேல் பொறுக்கப்போகிறதில்லை. என்னுடைய ஜோலிக்கு வருவானானால் சரியானபடி செய்யாமற் போகிறதில்லை' என்று மாணிக்கம் சொல்லவும், இருவரும் அதிக தூரங்கடந்து போய் விட்டார்கள்.

தியாகராஜன் தானிருந்த [illegible] நடந்துபோய்ப் பலவிதமாக யோசித்தான். 'நான் ஏன் அவர்களைப் பார்த்தேன்? என்னுடைய எண்ணமெல்லாம் ஆகாயக் கோட்டையாயிற்றே. நான் உண்மையிலேயே வடிவுடையம்மையைக் காதலித்தபோதும், அவள் நெஞ்ச[illegible] மாணிக்கத்[illegible] காதலித்து வந்தாள்? இக்காரணத்தை [illegible] என்னுடைய தகப்பனாரிடத்தில் [illegible] வந்திருக்கவேண்டும். 'மாதர்களை நம்பலாகாது' என்றும்

'சித்திரவிசித்திரப் பெருக்கு தெரிக்கவில்லை என்பார்' என்றல், சொல்லியிருப்பதெல்லாம் வீண் போகவில் லையல்லவா? ஐயோ! நான் ஒரு விஷயத்திற்காகவல் லவா பரிதாபப்படுகிறேன்? அந்தப் பெண் அதி புத் திசாலியாயிருக்கிற. இருந்தும், மாயாவியாகிய அவன் மேல் எப்படிப் பிரியங்கொண்டாள்? ஒரு சமயம் இப்பொழுதவன் சந்தோஷமாக நடத்திவந்தாலும், விவாகமானபின்மேல் அவள் ஒரு சுகத்தையும் அடையமாட்டாளே. கூடா ஒழுக்கங்களுக் கெல் லாம் உறைவிடமாயிருக்கிற அவனுள்ளம். பாபம்! அந் தப்பெண்மணியின் விதியிருந்தவாறென்னே!' என்று எண்ணினான்.

பலமாதங்கள் சென்றன. இதற்கிடையில் விசேஷ சம்பவமொன்றுமில்லை. காலக்கிரமத்தில் தியாகரா ஜன் பி. ஏ. (B. A.) பட்டப்பரீட்சையில் தேறினான். தான் கலாசாலையில் வாசித்து வந்த காலத்தில் முன் சொன்ன ஒரேயொரு நாள் தான் மாணிக்கத்தைப் பார்க்கநேரிட்டது. மாணிக்கம் நகரியிலிருந்த மற் றொருகல்லூரியில் வாசித்துவந்தாள். பங்காளியா ட்டின் பொருட்டுத் தியாகராஜன் வாசித்திருந்த கல் லூரிக்கு அடிக்கடி வருவதுண்டென்றாலும், தியாக ராஜன் அந்தப் பங்காளியாட்டிற் சேரவில்லையாகை யால் மாணிக்கத்தைப் பார்ப்பதுகிடையாது.

மாணிக்கம் அந்த வருஷம் பரீட்சையில் தேற வில்லை. தியாகராஜன் தேறின சமாசாரத்தைக் கேள் விப்பட அவளுடைய இயற்கைக் குணமாகிய பொறா மையினால் புழுங்கி வருந்தினாள். வடிவுடையம்மை யையும் தியாகராஜன் 'பார்க்' தோட்டத்தில் முன்பு பார்த்ததற்கு அப்புறம் பார்க்கவேயில்லை. அதாவது; சமயம் வாய்க்கவில்லையென்று சொல்லுவோம். அவ ளுடைய தகப்பனாருடைய ஆஸ்தி கொடிக்கணக்கா

யிருப்பதாய் அவ்வூரெங்கும் சப்தித்தது. அவ்வளவு திரண்ட ஐஸ்வரியத்திற்குச் சுதந்தரியாயுள்ள வடிவுடையம்மையை அவ்வூரில் அறியாதவர்கள் வெகு சிலரென்றே சொல்லலாம்.

அத்தியாயம் - 8.

மாணிக்கத்தின் மோச பங்கங்கள்.

நம்முடைய கதா நாயகன் பி. ஏ. பரீட்சையில் தேறியதன்மேல் பி. எல். பரீட்சைக்குப் படித்து வந்தான். மாணிக்கமோ, பி. ஏ. பரீட்சையில் தேறுகையினால் வாசிப்பை நிறுத்தித் தனது தகப்பனருடைய வேலையைப்பார்த்துவர எண்ணினான். மாணிக்கத்தின் தந்தை நடராஜ முதலியார் நகரத்திற்கு மூன்று மைல் தூரத்திலிருந்த 'தாண்டவபுரம்' என்னுங் கிராமத்தில் 'திருச்சிற்றம்பல மந்திரம்' எனப் பெயரிய பெரிய பங்களாவில் வசித்து வந்தார். அவரைப் போய்ப்பார்த்துத் தன்னுடைய அபிப்பிராயத்தை வெளியிடலாமென்று கருதி மாணிக்கம் தாண்டவ புரத்திற்குப் போனான்.

நடராஜ முதலியார் கடகத்தில் வியாபாரியென்று முதலத்தியாயத்திற் கூறினோம். இவருடன் கூட்டாய், வியாபாரஞ்செய்து வந்தவர்கள் ஆறுமுக முதலியார், வேதாசல முதலியார் என்னும் பெரிய மனிதர்கள். வியாபாரம் ஜோராகவே நடந்து வந்தது; நடராஜ முதலியார் இவ்வியாபாரத்தின் பிரதம பங்காளியாகையால் அவருக்குப் பலரிடத்தும் அதிகமதிப்புண்டு. அவர் வியாபாரநிமித்தமாய்ப் பல ஊர்களுக்குப்போய் அங்கங்கே தங்கியிருந்தாலும், தேக சௌகரியத்திற்கும், மனோரம்மியத்திற்கும் வச

தியாய்க் கட்டப்பட்ட தனது திருச்சிற்றம்பலமந்திரத்திற்கு அபிஷேகத்திற்கென்று இரண்டொருமாதங்களுக்குமுன்னே, அப்படிப்பட்ட சமயமே மாணிக்கம் தப்பறைப் போய்ப்பார்க்க நேரிட்டது.

மாணிக்கம் டோராஜுமுதலியாருக்கு ஏகபுத்திரன். அவனன்றியே, இரண்டு பெண் மகவுமுண்டு. அவர்கள் தகுந்த இடங்களில் விவாகஞ்செய்து கொடுக்கப்பட்டிருந்தார்கள். டோராஜுமுதலியார் தன் குமாரன் மாணிக்கத்தைக் கண்டதும், அவன் கலாசாலையை விட்டபின் காரண முதலியவைகளை உசாவித் தன்னுடைய வியாபாரத்துறைக்கு அவனை அழைத்துப் போவதாய்ச் சொன்னார். மறுநாள் காலையில் மாணிக்கத்தைத் தனியாகத் தன்னுடைய அறைக்கு அழைத்து 'அப்பா மாணிக்கம்! உனக்குச் சில அந்தரங்கமான விஷயங்களைச் சொல்லத் தீர்மானித்திருக்கிறேன். அவைகளைப் பொறுமையுடன் கேட்டு நான் கற்பிப்பதுபோல் நடப்பாயானால் தந்தைசொற்கடவாத தனயனாவாய். சுகமும் பெறுவாய். நாங்கள் இது காறும் கௌரவமாய் நடத்திவந்த வியாபாரம் சில காரணங்களால் நஷ்டத்துக்குள்ளாகி இப்பொழுது முறியும் பருவத்திலிருக்கிறது. இந்த சமாசாரம் தற்காலம் வெளியாருக்குத் தெரியாதாயினும், இன்னும் இரண்டொருவாரங்களில் இச்சென்னை ராஜதானி முழுவதிலும் எங்களுடைய வள்ளல் வெளியாய்விடும். இந்த நஷ்டத்திற்காக உடன்பங்காளிகள் யாரும் உத்தரவாதிகளல்ல. நமக்கிருக்கும் நிலங்கள், வீடுகள் முதலியவைகளையெல்லாம் விற்றுமொழிய கடன்காரர் ஜெயிலில் போய் உட்காரவேண்டியதாய் நேரிடும். அவ்வித கௌரவக்கேடான சம்பவம் எனக்கு நேரிடாமல் காப்பாற்ற உன்னாலன்றி மற்றவர்களால் முடியாது. இதற்கொரு சூட்சியுண்டு. அம்பலவாண

முதலியாரின் குமாரத்தியை ச் வைரவபுரத்திலேயே சாதரித்து வந்ததாகக் கேள்வி. அவர் தனது குடும்பத்தோடு இப்போது நகரியில் வசிப்பதாகவுந் தெரிகிறது. தற்காலம் அவர்தான் கோமல்லவரா யிருக்கிறார். அவருக்கிருப்பதோ ஒரேயொரு குமாரத்திதான். ஆகையால் எந்தவிதத்திலாயினும் அப்பெண்ணைச் சிலதினங்களுக்குள் விவாகஞ் செய்துகொள்ளுவாயானால் நம்முடைய கௌரவங் கெடாமலிருக்கும்' என்று சொன்னார்.

'அப்பா! நானிதுவரைக்கும் என்னுடைய உள்ளக் கருத்தை உடையப்பனுக்கு வெளியிடவில்லை. வெளியிட்டாலும் யாதொரு ஆட்சேபனையுமின்றி அவனும் உடன்படுவான். இரண்டொருதினத்தில் தங்கள் கருத்தின்படியே கல்யாணத்திற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையுஞ் செய்துவிடுகிறேன் பாருங்கள்!' என்றான் மாணிக்கம். 'எப்படியாவது முடித்துவிடுவது உன்பாரம். உன்னுடைய பிற்கால நிலைமையை நினைக்கும்பொழுதெல்லாம் எனக்கு அதிக விசனமாயிருக்கிறது. உன்தகப்பனாரிடமிருந்து உனக்கு ஒரு காசுங் கிடைக்கப்போகிறதில்லையென்று நம்பு! இன்னும் எத்தனை காலத்திற்கோ உன்னைக் கோமல்வனாகத் தற்சமயம் உலகம் நம்பி யிருக்கிறதாகையால், பணமோசம் வெளிப்படுமுன் அம்பலவாண முதலியார் குமாரத்தியை நீ விவாகஞ் செய்துகொள்ளுவதுசிதம்' என்று நடராஜமுதலியார் சொன்னார்.

அந்தோ! உலகம் பிறருடைய சொத்திற்கு இப்படியேன் பேயாய்ப்பறக்கவேண்டும்? 'உடைமையும் வறுமையும் ஒருவழி நில்லா' என்றும் 'செல்வம் சகடக்கால்போல வரும்' என்றுஞ் சொல்லியிருக்கவில்லையா? எல்லாந் தன்னிலையில் மாறும்படியானகாட்சியிருக்கும் இந்த உலகத்தில் நிலையாய் நிற்கக்கூடிய

தொன்றுண்டோ? [இவைகளை யறிந்து உன்னிடத்திலேயே திருப்தியடையாமல், நீ கெட்டுப்போகுஞ்சமயத்தில் இன்னொருவனுடைய பொருளைக்கவரநினைப்பது நடராஜ முதலியாரே! உன்னுடைய படிப்பிற்கும், வயதிற்குந் தகுமா? நீயே உனது குமாரனுக்கு வஞ்சகத்தன்மையைக் கற்பிப்பதென்றால், யாருனக்குப் புத்தி புகட்டவல்லார்?] நடராஜ முதலியாரும், மாணிக்கமுங் கலந்துநடத்தும் வஞ்சகத்தில் அம்பலவாணமுதலியாரும், அவருடையம்மையும் அகப்படாமலிருக்கச் சர்வஞ்ஞனாகிய பரமஸாக்ஷியே காப்பாற்றுவாராக!

மாணிக்கம் அன்றைய பிற்பகலே தாண்டவபுரத்தைவிட்டுப் புறப்பட்டு நகரியையடைந்து அம்பலவாண முதலியார் வீட்டைநோக்கி நடந்தான். முதலியார் கோடீஸ்வராயினும், நடராஜ முதலியாரைப் போல் பங்களாவில் வசித்துவரவில்லை. அவர் வசித்துவந்தது பெரிய வீடென்றாலும், தன்னுடைய செல்வாக்கிற்கிருக்கவேண்டியதைப்பார்க்கிலுஞ்சிறியதே. 'சிறுகக்கட்டிப் பெருகவாழ்' என்பதைக்கைப்பிடித்தவராகும் அம்பலவாண முதலியார். அவர்வீட்டின் தெருவாயிற்படியில் 'இலட்சுமி விலாஸம்' என்றெழுதப்பட்டிருந்தது. இலட்சுமி விலாஸமென்றாலுந் தகும். தெருவாயிற்படி கடந்து உட்புறத்திலே அகண்ட கூடத்தில் பற்பலவிதமான சித்திரப்படங்கள் தொங்கவிடப்பட்டிருந்தன. அவைகளெல்லாம் இக்கலியுகத்தில் புகழுடம்பை நிலைநிறுத்திப்போன ரவிவர்மாவின் செல்வங்கள். அச் செல்வத்திற் சிறந்த மகாலட்சுமியின் படமும், சரஸ்வதியின் படமும் கூடத்தின் நடுவில் வைக்கப்பட்டிருந்தன. பொருட்

செல்வத்தையும், கல்விச் செல்வத்தையும் ஒருங்கே படைய முடியாதென்று கூறுபவர்களைப் பார்த்து இதோ! அவை இரண்டும் ஒருங்கே அமைந்திருக்கின்றன பாருங்கள்! என்று காட்டுவனபோல் நின்றன.

அம்பலவாண முதலியார் வீட்டைச் சேர்ந்ததும், 'முதலியாரிருக்கிறாரா?' என்று விசாரிக்க அவர் வீட்டிலில்லையெனத் தெரியவந்தது. வடிவுடையம்மையும் தன்னுடைய அத்தை வீட்டிற்குப்போயிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. அடுத்த இரண்டு மூன்று தினமும் போய்ப்பார்த்தான். அவள் திரும்பவில்லை. நாலாம்நாள் சாயங்காலம் அம்பலவாண முதலியார் வீட்டைநோக்கிப் போகையில், வழியில் தியாகராஜனைச் சந்தித்தான். இதற்குமுன் அறியாதவர்களைப்போல ஒருவரோடொருவர் பேசாமல் தன்தன் வழியே போய்விட்டார்கள். 'அந்தப்பயல் எங்கிருந்து தோன்றினன்? இங்கே என்ன செய்துகொண்டிருக்கிறான்?' என்று தன்னையே கேள்வி கேட்டுக்கொண்டான் மாணிக்கம். முதலியார் வீட்டிற்குப் போனதும், வடிவுடையம்மையை நடைவாயிற்படியண்டையே சந்தித்தான். 'வடிவு! உன்னோடு நான் அந்தரங்கமான சில விஷயங்கள் பேசவேண்டும். சற்று என்னுடன் வெளியே உலாத்த வருவாயா?' என்று கேட்டான். வடிவுடையம்மையும் மாணிக்கம் வேண்டிய பிரகாரமே இசைந்து அவனோடுவெளியே புறப்பட்டாள்.

ஜனக்கூட்டமாயுள்ள இடங்களைத் தாண்டி 'பார்க்' தோட்டம் வந்தார்கள். வந்தவுடன், 'வடிவு! கடைசியாக என்னுடைய அந்தரங்கக் கருத்தைத் தனியாயுன்னுடன் சொல்ல இன்றுதான் சமயம் வாய்த்தது' என்றான் மாணிக்கம், வடிவுடையம்மை

புன்னகைபோடு "என்னுடன் தனியாய்ப்பேச உண்மையிலேயே உங்களுக்குப் பிரியமா?" என்று கேட்டாள்.

மாணி—அதற்கென்ன சந்தேகம்? நீயே என்னுடைய தியானத்திலு மிருக்கிறாயென்றால் வேறென்ன சொல்லவேண்டும்?

வடிவு—என்ன சாந்தமாயிருக்கின்றன உங்களுடைய பேச்சும் நடைபாவனையும்? இதுவரையில் நானிவ்வாறு கவனிக்கவில்லையே!

(வடிவுடையம்மை இவ்விதம் பேசியதைக் கண்டு மாணிக்கம் தனது ஜயஞ் சாயாதென் றெண்ணினன். மறுகணம் விளையாட்டாகத் தன்னோடு இப்படிப் பேசியிருக்கலாமென்று தீர்மானித்துக்கொண்டான். பிறகு,)

மாணி—கண்ணே! உன்னை நான் அல்லும் பகலுங் காதலித்துவருகிறேனே. அதற்கிசைந்தபடி நீயும் உன்னுடைய கடாட்சத்தை என்மீது செலுத்தி எனக்கு மனைவியாவாயென்று எதிர் பார்க்கிறேன். தயவான பதிலளிக்க வேண்டுகிறேன்.

வடிவு—உங்களுடைய மனைவியாக முடியாது! அந்த நோக்கமிருந்தால் அதை யறவே யொழித்து விடுங்கள்! வேறு விஷயத்தைப் பேசுங்கள்.

(இந்த உத்தரத்தைக் கேட்டதும், மாணிக்கத்தின் மனந் துடிதுடித்துக் கண்கள் சுழலலாயின. இவ்வித மறுமொழி வருமென்று அவன் கனவிலுங் கருதினவனல்ல. மனதைத் திடப்பண்ணிக்கொண்டு,)

மாணி—வடிவு! நீ என்னைச் சோதிக்கவேண்டி இவ்வாறு சொல்லி யிருக்கவேண்டுமென்று நம்புகிறேன்.

வடிவு—மாணிக்கம்! நீங்கள் கேட்குங் கேள்விகள் எனக்கு வெறும் நகைப்பையே யுண்டாக்குகின்றன. காதல் என்றால் பரஸ்பரமாகிய அன்பு. பரஸ்பரமென்றதனால் அந்த இருதரத்தாரிடத்திலிருந்தும் ஜனிக்கவேண்டுமல்லவா? நீங்கள் என்னைக்காதலித்துவந்திருக்கலாம். ஆனால்கனவிலும்நானுங்களைக் காதலித்தது கிடையாது. அதையறிந்துகொள்ளாமல் உங்களுடைய எண்ணத்தை வெளியிட்டு, என்னுடைய உத்தரவையும் உங்கள் சார்பாகவே எதிர் பார்ப்பது வெகுஷ்டம். நாமிருவரும் பள்ளித்தோழர்கள். அந்நியோந்ய சிநேகர்கள். அதுதவிர்த்து வேறொன்றும் நினைக்கவேண்டாம். இவைகளையெல்லாங் கவனியாமலா இப்பேர்ப்பட்ட அசம்பவிதமானவிஷயத்தை இதுவரையி லென்காதில் போடாதிருந்தீர்கள்? எனது மனஞ் சோதிக்க ஒருக்கால் சொல்லியிருக்கலாம். அப்படி யென்றால் எனக்குஞ் சந்தோஷமே. ஏனென்றால், வீணே யொரு பொருள் கிடைக்கும் கிடைக்குமென்கிற ஆவலை மனத்துள் வைத்துக்கவலைப்படுகிறதைப் பார்க்கிலும், கிடைக்கும்கிடைக்காது என்று ஸ்திரமாய்த் தெரிந்துகொள்ளுவது நல்லது. கிடைக்குமாயின் தகுந்த முயற்சி யெடுக்கலாம். கிடைக்காதேல் 'கிட்டாதாயின் வெட்டனமற' என்றதைக் கவனித்து உடனே மறந்து மனஆயாஸத்தைத் தீர்த்துக்கொள்ளவேண்டும்.

(இவ்வளவு கர்ணகடூரமான புத்திகளைக் கேட்டும்,)

மாணி—வடிவு! உன்னை நான் காதலிப்பதற்கு நீயே எனக்கு இடந்தந்திருக்கின்றாய்.

வடிவு—நான் ஒருக்காலும் உங்களுக் கிடந்தரவில்லை. நீங்களே எடுத்துக்கட்டிப்பேசுகிறீர்கள். உங்களிடத்தில் நான் இவ்வளவுநாள் வைத்திருந்த மரியா

தையைப் போக்கடிக்கக் கொள்ளுந் தருணமான துபோதும். இத்தனை காலமில்லாமல் நான் இப்படிக் கோபமாய்ப் பேசுவதற்கு நீங்களே காரணமென் றறிந்துகொள்ளவும்.

மாணி—ஆனால், நீ யென்னைக் காதலித்ததே கிடையாது?

வடிவு—இல்லவே யில்லை!

மாணி—ஏன் இல்லையென்று நான் சொல்ல வேண்டும்? அந்தப் பரிசாரகப் பயல் இந்த வூருக்கு வருந்தனையும் நீ என்னைக் காதலித்தாய். அவனை அன்று இந்தத் தோட்டத்தில் பார்த்ததிலிருந்தான் னைப் புறக்கணிக்கத் தலைப்பட்டு என்பேரிலிருந்த காதலையும் அவன் பேரில் திருப்பிவிட்டாய்.

(இதைக்கேட்டதும், வடிவுடையம்மையினுடைய கண்கள் சிவந்து தேகமாதியந்தம் நடுக்கமுறக் கோபமாய்)

வடிவு—என்னை யிவ்விதம் அவமானஞ் செய்த உன்னை நானென்ன செய்யப்படாது?

மாணி—நான் உன்னை யெவ்விதம் அவமானஞ் செய்தேன்; எனக்கே விளங்கவில்லை.

வடிவு—மூர்க்கனுக்கு விளங்குமா? ஏதோநான் உன்னை நெடுநாளாக வைரவபுரத்தில் அறிவேனாகை யால் பொறுத்தேன். இந்தக்ஷணத்திலிருந்து இனி யுன் ஆயுள் பரியந்தம் என்னோடு வார்த்தையாடா தே! ஜாக்கிரதை!!

மாணி—வடிவு! நீ எப்படியும் என்னுடைய மனைவியாவாய். எனது வாழ்க்கை யின்பத்தை யுன் கோபச்சொற்களால் போக்கிக்கொள்ளுவேனென்று நீ யொருக்காலுங் கருதாதே. நானுன்னைக் காதலித் திருக்கேன். நீயும் அதற்கனுசரணையாயிருந்தாய்.

ஆகையினல் நீ கட்டாயம் என்னுடைய மனைவியாக வேண்டும். பார்க்கிறேன் ஒருகை!

(வடிவுடையம்மை ஒன்றும் பதிற் சொல்லாமல் நின்றிருந்தாள். மறுபடியும்,)

மாணி—என்னுடைய வாழ்க்கையைக் கெடுக்கப்பார்த்தால் உன்னுடைய சுகத்தை அறவே கெடுத்துவிடுவேன். உன்பேரில் அபவாதம் ஏற்படுத்தவேண்டுமானலும் அதிக சுலபத்திலேயே செய்வேன். உலகத்தில் ஆண்கள் மாதர்களைக் காதலிக்காத விதமாய் உன்னைக் காதலித்து வந்தும் நீ என்னை ஏமாறப் பார்க்கிறாய். ஜாக்கிரதை! உன்னைப் பெருந் துன்பத்திற் காளாக்கி விடுவேன்!

வடிவு—உன் மிரட்டுக்கும், பூச்சுக்காட்டலுக்கும் நான் பயந்தவளல்ல. கவனித்துப்பேசு.

மாணி—நான் உனக்குப் பூச்சுக்காட்ட வரவில்லை. நான் சொல்லுவதைக்கேட்டுத் தக்கபடி யோசித்துப் பதிற்சொல்! என்னைக் கலியாணஞ் செய்து கொண்டால் சகலவிதமான வைபவத்தில் உன்னை வைத்திருப்பேன். மறுப்பாயானல் உன் வாழ்நாள் முழுதுந் துன்பமடைவாய். ஆகையால் என்னுடைய விருப்பைப்பெற உனக்குப் பிரியமா, அல்லது வெறுப்பைப்பெறப் பிரியமா?

வடிவு—உன்னுடைய விருப்பைப் பார்க்கிலும் வெறுப்பைப் பெறவே எனக்குப் பிரியம். நீ எனது வாழ்க்கையைக்கெடுப்பதற்குப்பதிலாக நான் உனது வாழ்க்கையைக் கெடுக்க முடியும். என் பேரில் நீ அபவாதம் ஏற்படுத்துவதற்குப்பதிலாக நான் உன் பேரிலேற்படுத்தவுங் கூடும். என்னோடு பேச இடங்கொடுத்ததே என்பேரில் பிசகு! இந்த க்ஷணத்திலிருந்து உனக்கும் எனக்கும் யாதொரு விதமான சம்பாஷணையும் வேண்டியதில்லை; தெரியுமா?

மாணிக்கம் மேலொன்றுஞ் செய்யமுடியாமல் நின்றிருந்தான். இவ்விதமாகமுடியுமென்று கனா விலு மெண்ணவில்லை. தன் தகப்பனிடத்தில் சொல்லிவிட்டுவந்ததை நினைக்க அவனுக்கு இன்னது செய்வதென்றுந் தோன்றவில்லை. வடிவுடையம்மை யை நயத்தினாலும் வசப்படுத்த முடியவில்லை; பயத்தி னாலும்முடியவில்லை. இருவருஞ் சற்றுநேரம் ஒருவரை யொருவர் பார்த்தவண்ணமாய் நின்றார்கள். அந்தச் சமயத்தில் தோட்டத்தின் இன்னொருபுறத்திலிருந்து தியாகராஜன் அவர்கள் நின்றிருந்த இடத்திற்கு வந் தான். உத்தியானத்தின் இயற்கைக் காட்சிகளைக் கண்டும், மற்றொருபுறத்தில் வாசிக்கப்பட்ட சங்கீத கானத்தைக் கேட்டும் மகிழ்ந்து, தன்னையே மறந்து பரவசப்பட்டிருந்தபடியால் அவன் அங்கு நின்றிருந் தவர்களையுங் கவனிக்கவில்லை. வடிவுடையம்மை அவ னைப் பார்த்ததும் 'தியாகு! இங்கு என்னசெய்து கொண்டிருக்கிறீர்கள்' என்று கேட்டாள். 'உலாத்து வதற்காக வந்தேன். உன்னை நான் பார்க்கவேயில்லை: சௌக்கியந்தானா?' என்றான் தியாகராஜன். 'ஆம் சௌக்கியமே. உங்களுடைய சுபக்ஷேமமெப்படி?' என்று வடிவுடையம்மை கேட்டாள்.

இந்தச் சம்பாஷணையைக் கேட்டதும், மாணிக் கத்தின் மனம் புழுங்கிக் கொதித்தது. முகமுந் தீய்ந் தது. உடனே 'வடிவு! நாழிகையாகிறது. உன்னை வீட்டில்விட்டுப் போகிறேன், வா!' என்று அழைத் தான். 'உன்னுடைய உபசரணை அவ்வளவோடிருக் கட்டும். தியாகுவைப் பார்த்து நெடுநாளாகிறது. அவரோடு பேசிக்கொண்டே வீடு போய்ச் சேரு வேன்' என்று சொல்லி 'வாருங்கள் நாம்போகலாம்' என்று தியாகராஜனுடைய கையைப்பற்றிக்கொண்டு 'நான் போய் வருகிறேன் மாணிக்கம்' என்று வடி வுடையம்மை சொன்னாள். வடிவு! என்ன வந்தாலும்

வாட்டேன். இவனேடு நீ தனியாய்வார்த்தையாட நான் பொறுக்கமாட்டேன். என்னையறியாமல் நான் பேசியதற்கு என்ன செய்யச்சொன்னலும் செய்யத் தயாராயிருக்கிறேன். என்னெதிரில் இவனேடு நீ போகவேண்டாம்' என்றன் மாணிக்கம். 'உன்னையு மறியாமற் சொல்லியதைப்பற்றி நீ துக்கிக்கவேண்டாம். குற்றம் என்னுடையதாகையால் மன்னிக்கத் தடையில்லை. ஆனல் எனக்கு இவரோடுபோகவே பிரியம். அதைத்தடுக்க உனக்கு அதிகாரமில்லை' என்று வடிவுடையம்மை சொல்லிவிட்டுத் தியாகராஜனுடன் வீட்டை நோக்கித்திரும்பினள். கடைசியாகச்சொல்லிய வார்த்தைகள் மாணிக்கத்தின் காதில் நாராசங்காய்ச்சியூற்றினதுபோலிருந்தன. தனதுபற்களைநெறநெறவென்றுகடித்து வடிவுடையம்மையை நோக்கி 'உன்னைக் கெடுக்க எனக்குப் பிரியமில்லை. அழைக்காமலிருக்கும் இவ்விடத்திற்கு வந்த பரிசாரகப் பயலைச்சரியாகப்பார்த்துக்கொள்ளுகிறேன்' என்று தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டான்.

வடிவுடையம்மை அவ்விடத்தினின்று நீங்கித் தியாகராஜனேடு சிறிதுதூரம் வந்து 'தியாரு! நீங்கள் எனக்குச் செய்யவேண்டிய உதவியொன்றுண்டு' என்றள். 'அதெதுவாயினும் செய்யத்தயாராயிருக்கிறேன். என் உயிரை வேண்டுமென்றாலுந்தருவேன்' என்றன் தியாகராஜன். 'என்னுடைய வீட்டுவரைக்கும் வர உங்களால் முடியுமா?' என்று வடிவுடையம்மைகேட்க, அவன், ஆட்சேபனையின்றி வர முடியும். ஆனல் இன்னும் பொழுதிருக்கிறதே' என்றான். 'இருந்தாலும் போகவேண்டும்; மாணிக்கம் என்னைப் பலவிதமாய்த் தொந்தரை செய்தான். அதனல் மனம் ஒருவாறு இருக்கிறது. அவனொரு விஷ சர்ப்பம். என்னை மறைத்துப் போம்படியாய் உங்களைக் கேட்

டேனோ, அதற்காக உனக்குக் கெடுதிசெய்வா னென்று பயப்படுகிறேன்' என்று வடிவுடையம்மை சொன்னாள்.

அத்தியாயம் - 9.

கொலைச் சம்பவம்.

தியாகராஜனுடைய மனோநிலைமையைக் கவனிப்போம். 'பார்க்' தோட்டத்தில் வண்டியிற கண்டதிலிருந்து வடிவுடையம்மையை இனிமேற் கண்டு சம்பாஷிப்பது முயற்கொம்புதான் என்று எண்ணியிருந்தவனுக்கு நீயென்று அவளே தன் னைக்கண்டு பேசவும், வீட்டிலனைவரின் நன்றேறுவருகும் படிக் கேட்கவும் நேரிட்டதனால் ஆனந்தம் பொங்கி மேலிட்டது. வடிவுடையம்மையோடு நின்றிருப்ப தைக் கருக்காட்சியாக நினைத்தான். 'வடிவு! நடந்த விருத்தாந்தம் இன்னதென்று நானறியேன். மாமாக் கமலனைக்குக் கெடுதிசெய்தாலுஞ் செய்வானென்று சொன்னதும் விளங்கவில்லை. ஆனால் ஒரு விஷயம் உனக்குச்சொல்லுகிறேன். அதாவது; நான் அவனைக் குப்பயந்தவனே யல்ல. நேரில்வந்து அவனுடைய சாமார்த்தியங்களை யெல்லாங் காட்டினாலும் அவனை நான் வெல்லமாட்டேனோ. அவன் எப்பொழுதும் எனக்கு விரோதியாகவே யிருக்கிறான். என்னைத் தொலைக்கத்தேடிய அவனுடைய பிரயத்தனங்களெல் லாம், வீணாய்ப்போயின' என்றான். இதைக் கேட்ட தும், வடிவுடையம்மை 'என்ன சொன்னீர்கள்? உங்க ளைத் தொலைக்க வகை தேடினான்?' என்று வினவ, தியாகராஜன் "யாகாவா ராயினும் நாகாக்க காவாக்

கார், சோகப்பா் போர்விழுந்துப் பட்டு.'' என்றதை யறியாமற் சொல்லிவிட்டோமே யென்று நினைத்து அவ்விஷயத்தைப் பலவிதத்திலும் மறைக்கப் பார்த்தான். எவ்வளவிருந்தும், மாணிக்கத்தை நாற்சந்தியில் இருக்கவைக்க மனமில்லாதிருந்ததேயே. முன்னொரு தடவை ஸ்வாமி பார்த்திருந்தகாரணத்தினால் தான் இவ் வழக்குடைய்மையைப் பற்றி பேசிவிட்டான். இவனுக்கும் சரித்து வரும்போது சொல்லாமலே வரவேண்டுமிட்டது. என்ன பிரயாசைப்பட்டும் தான்சொன்னதை மறைக்க முடியவில்லை. வடிவுடையம்மை தியாகராஜனைப்பார்த்து 'ஸ்வாமி! நான் சொல்லுவதைக் கவனியுங்கள்! நீங்கள் எவ்வளவும் பண்டிதர்களாயிருந்தாலும், மாணிக்கம் உங்களைப் பார்க்கிலும் எனக்கு வேண்டியவனல்ல. உங்களுடைய கல்வியையுங் குணத்தையும் கருதியே, உங்களிடத்தில் எனக்கு அத்தியந்த பிரேமை. மாணிக்கம் பள்ளிக்கூடத்தை விட்டபொழுதே அதாவது நடந்த காரணமிருக்க வேண்டுமென்று நினைத்தேன். உங்களையுங் கேட்டேன். நீங்கள் ஒன்றுஞ் சொல்லமாட்டேனென்று ஒரே பிடிவாதமாய் மறுத்துவிட்டீர்கள். இப்பொழுதாவது சட்டமாய் சொல்லியே தீரவேண்டும்' என்றான். அச்சமயத்தில் அம்பலவாணமுதலியாரைத் தெரிந்த ஓர் கனவான் அவ்வழிவர, அவரோடு வடிவுடையம்மை பேசிக்கொண்டிருந்தாள்.

தியாகராஜனும் சிறிது நேரம் விலகிவந்து உலாவிக்கொண்டிருந்தான். அந்நேரம் செடிமறைவில்நின்றிருந்த மாணிக்கம் உடனே தியாகராஜனை யணுகி 'தியாகராஜா! உன்னிடத்தில் ஒரு விஷயம் சொல்ல வேண்டும். நான் உன்னைச் சிநேகிக்க விரும்பினதே கிடையாது. ஜென்மப் பகையாளியாகவே எண்ணியிருந்தேன். ஆனால் உன்னுடைய உயர்ந்த குணத்திற்காக மெச்சுகிறேன். இப்பொழுது உன்னை ஒன்று

கேட்டுக்கொள்ளுகிறேன்' என்றான். 'அதென்னவிஷயம்?' என்று தியாகராஜன் கேட்க, மாணிக்கம் 'எனக்கும் வடிவுடையம்மைக்கும் கலியாணத்திற்கு வேண்டிய ஏற்பாடு செய்தாய்விட்டது. இனி அம்பலவாண முதலியாருக்குச் சொல்லவேண்டிய தொன்றுதான் பாக்கி. இதற்கிடையில் எங்களிருவருக்கும் சற்றுநேரத்திற்குமுன் சில பேச்சுகள் நடந்தன. அதன் விஷயமாய் அவளைச் சமாதானஞ் செய்ய வேண்டியிருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் அவள் உன்னோடு போய்விடுவாளானால் மறுபடியும் அவளைச் சந்திக்க முடியாது. ஆகையால் தயவுசெய்து நான் அவளைக்கூட்டிக்கொண்டு போகும்படி விடுவாயா?' என்று கெஞ்சினான்.

சூதுவாதறியாத தியாகராஜன் மாணிக்கம் சொன்னவைகளை நம்பி அவனுடைய வேண்டுகோளின்படித் தன்வழியே போய்விட எண்ணினான். 'மாணிக்கம் உங்களைப்பார்க்கிலும் வேண்டியவரல்ல' என்று சற்றுநேரத்திற்கு முன்பு வடிவுடையம்மை சொன்னது அவன் ஞாபகத்தில் வர, 'வடிவுடையம்மை பொய் சொல்லமாட்டாள். உண்மையிலேயே அவளுக்கும் இந்தப் போக்கிரிக்கும் யாதொருவிதமான சம்பந்தமும் ஏற்படாது. இவனே கிரியாவாக்காரன். இல்லாத சமாசாரத்தைச் சொல்லி என்னை ஏமாற்றப்பார்த்தாலும் பார்க்கலாம்' என்றெண்ணி 'மாணிக்கம் நீ யெனக்குப் பொய்க்கதை புகட்ட வேண்டாம். உண்மையைத் தெரிவித்திருந்தாலும் உன் வேண்டுகோளுக் கிணங்கியிருப்பேன். இப்பொழுது முடியாது' என்றான். 'நானா பொய்க்கதை சொன்னேன்?' என்று பயமுறுத்திப் பேசினான் மாணிக்கம். 'ஆம், அதற்காட்சேபனையில்லை. வடிவுடையம்மை தன்னோடு என்னை வரும்படிக் கேட்டுக்கொண்டாளேயன்றி, உன்னைக் கேட்கவில்லை யென்ப

ணைதக்கவனி!’ என்று தியாகராஜன் சொல்ல, எவ்வகையிலும் தன்னுடைய ஜபம் பலிக்கவில்லையேயென்று மாணிக்கம் ஏக்கங்கொண்டு நின்றுவிட்டான்.

தியாகராஜன் மறுகணம் அவ்விடத்தினின்றும் நீங்கி வடிவுடையம்மையை விட்டுவந்த விடத்திற்குப் போனான். அவளும் இவனுடைய வருகையை எதிர்பார்த்திருந்தாள். இருவரும் புறப்பட்டார்கள். ‘உங்களை என்னோடு வரும்படிக் கேட்டதற்காக நான் பெரிதுந் துக்கிக்கிறேன்’ என்றாள் வடிவுடையம்மை. அடங்கா மகிழ்ச்சியினால் ஆடாயிருந்த தியாகராஜனுடைய தேகம் உடனே சில்லிட்டது. முகத்திலிருந்த சந்தோஷக்களையும் பறந்துபோயிற்று. ‘வடிவு! இப்பொழுது வேண்டுமென்றாலும் நான் போய்விடுகிறேன். நீ அதற்காக விசனப்படவேண்டியதில்லை’ என்றான். ‘பிரமாதமாய் முடிந்தபிறகு இனியொன்றுஞ் செய்ய முடியாது’ என்று வடிவுடையம்மை சொல்லவும், தியாகராஜன் ‘நீ பேசுவது பரிபாஷையாயிருக்கிறது. எனக்கொன்றும் விளங்கவில்லை’ என்றான். இப்படிப் பேசிக்கொண்டே அம்பலவாணமுதலியார் வீட்டை யடைந்தார்கள்.

தெருவாயிற்படியண்டை வந்ததும் ‘நான்போய் வருகிறேன், வடிவு!’ என்று சொல்லித் தியாகராஜன் திரும்பினான். வடிவுடையம்மை அவன் கையைப் பற்றி ‘நீங்கள் உள்ளே வந்து காப்பி சாப்பிட்டுவிட்டுப்போகவேண்டும். உங்களிடமிருந்து சில விஷயங்களும் அறியவேண்டியிருக்கிறது’ என்று சொல்லி வீட்டுக்குள்ளே யழைத்துப்போய், கூடத்திலிருந்த ஒரு மேசையின்பக்கத்தில் நாற்காலியிலமர்த்தி, உட்சென்று ஒரு வெள்ளிச்செம்பில் காப்பியும் ஒரு தட்டில் பலகாரங்களுங் கொண்டுவந்து வைத்தாள். சாப்பிட்டானதன்மேல் வேலைக்காரனொருவன் தட்டையு

ஞ்சொர்ணையம் எடுத்துப்போய் விட்டான். அதன் பிறகு வடிவுடையம்மை 'பொறு! வைரவபுரத்தில் நானிருந்தபொழுது, நான் இங்கு வருவதற்குச் சிலதினங்களுக்கு முன்பு ஒருநாள் சாயங்காலம் உங்களுடைய அறைக்கு வந்தேன். மாணிக்கம் அவ்வூரை விட்டதின் காரணங்கேட்டேன். 'காரணஞ்சொல்லமாட்டேன். அவனைத் தண்ணீரில் தள்ளினதும், ஊரைவிட்டோட்டினதும் உண்மைதான்' என்று சொன்னீர்களே, ஞாபகமிருக்கிறதா?' என்றாள். 'ஆம், ஞாபகமிருக்கிறது' என்றவன் சொல்ல, வடிவுடையம்மை 'என்னே நீங்கள் அதற்குக் காரணம் அவ்வளவு கொடூரமாகப் பேசினது கிடையாது. ஆகவே, அதன் விஷயமாவொன்றும் எனக்குச் சொல்லக் கூடாதென்று மறைத்தீர்களென்றும், மாணிக்கம் உங்களாலும் பொறுக்கமுடியாத கோபத்தை உண்டாக்கியிருக்க வேண்டுமென்றும் எண்ணினேன். கூடுமானால், அந்த விருத்தாந்தத்தை இப்பொழுதாவது சொல்லமுடியுமா? என்று கேட்டாள். 'இப்பொழுது சொல்லத் தடையில்லை. அவனைத் தண்ணீரில் தள்ளினதும், ஊரைவிட்டோடும்படிப்பயமுறுத்தியதும்வாஸ்தவமா?' என்று கேட்டாயே, அவ்விஷயம் உனக்கெப்படித் தெரியவந்தது?' என்று தியாகராஜன் கேட்க, வடிவுடையம்மை 'மாணிக்கம் அசௌக்கியமாயிருந்தபொழுது மருந்து கொடுத்துவந்த வைத்தியராலறிந்தேன். ஆனால், அதைநம்பாமலே உங்களுடைய வாக்குமூலத்தைக் கேட்க விரும்பி அன்றுவந்தேன். நீங்களோ ஒன்றுஞ்சொல்லாமல் என்னை அனுப்பி விட்டீர்களல்லவா?' என்றாள்.

தியாகராஜன் 'ஜகன் மோகனு' நாடகம் நடந்த இரவு நடந்த ஆபத்தையும், அதன்பிறகு துப்பாக்கி கத்தி முதலியவைகளால் தன்னுடைய உயிரைவாங்க

மாணிக்கம் எதிரொலித்ததைப்போற் சொன்னாள். 'ஆனால் இந்தச்சமாசாரங்களை வெளியிடாதிருந்தது உங்களுடைய குற்றமே. நான் கேட்டபொழுதாகிலும் சொல்லியிருக்கப்படாதா? இந்த நாலு வருஷ காலமாக அவனோடு நான் அதிகமாகப் பழகினதுமல்லாமல் பலபெரியமனுஷாளிடத்தும் சிபாரிசு செய்து வைத்தேன். கொலைபாதக னென்றறிந்திருந்தால் அவனுடைய முகத்திலேயே விழித்திருக்க மாட்டேனே' என்று சொல்லிக் கோபங்கொண்ட பெண்புலியைப் போல் வடிவுடையம்மை அக்கூடத்தில் உலாத்தினாள். பிறகு 'தியாகு! உங்களை என்னோடு அழைத்துவந்ததற்காக நான் அதிக விசனப்படுகிறேன். அந்தப்பாதகனால் உங்களுக்கு வழியிலேதேனுங் கெடுதிநேரிடுமென்றே பயப்படுகிறேன். ஆகையால் நீங்கள் இன்றிரவு இங்கேயே தங்கிப்போகலாம்' என்றாள். 'நீயொன்றுக்கும் பயப்படவேண்டாம். கடவுளை நம்பியிருக்கும்படியான எனக்கு யாதொரு கெடுதியும் சம்பவியாது. நான் போய்வருகிறேன். சமயம் நேரிடுமேயானால் உன்னை வந்து பார்க்கிறேன்' என்று சொல்லித் தியாகராஜன் புறப்பட்டான்.

தெருவில் நடந்துபோனபொழுது அவனுடைய மனதில் சபல எண்ணங்கள் தோன்றி மறைந்து கொண்டிருந்தன. தெருக்கடைசியில் 'ஐயோ! ஐயோ!! என்கிற சப்தங் கேட்க, அச்சப்தம் வரும் திக்கை நோக்கிப் போனான். வழியோரத்தில் ஒரு ஆள் விழுந்திருக்கக் கண்டு, கிட்ட நெருங்கினான். 'கொலை! கொலை!! காப்பாற்றுவாரில்லையா?' என்று கீழே விழுந்திருந்தவன் கத்தினான். குரல்சப்தத்தைக்

கவனித்து, அவன் மாணிக்கமா யிருக்கலாமென்று கருதி, தியாகராஜன் குனிந்து பார்த்து 'மாணிக்கம்! நீயா விழுந்திருக்கிறாய்? உனக்கென்ன நேரிட்டது?' என்று கேட்டதுதான் தாமதம்; உடனே ஓராள் பின்புறமாய் வந்து தியாகராஜனைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டான். 'ஐயா! அவனை விடாதீர்கள். அவன்தான் என்னைக் கொலை செய்யப் பார்த்தவன். அவன் பெயர் தியாகராஜன். ஐயோ! அப்பாடி!!' என்று கூச்சல்போட்டான் மாணிக்கம். தியாகராஜனைப் பிடித்திருந்த போலீஸ்வீரன் 'பிகில்' என்னுங் குழலை யூதியதும், வேறிரண்டு போலீஸார்கள் வந்து சேர்ந்தார்கள். அவர்களில் போலீஸ் இன்ஸ்பெக்டர் 'சமாச்சாரமென்ன?' என்று கேட்க, 'துணிகரமானகொலை. இந்த ஆள் அவனைக் கீழேதள்ளிக் கத்தியால் குத்தினபோது நான் பார்த்தேன்' என்றான் தியாகராஜனைப் பிடித்திருந்தவன். தியாகராஜன் இதைக்கேட்டதும் 'சார்! நானிவனைக் கீழே தள்ளினவனுமல்ல, கத்தியாற் குத்தினவனுமல்ல. என்வழியே நான் போய்க்கொண்டிருந்தபொழுது, ஐயோ! ஐயோ!! என்கிற சப்தங்கேட்டு அருகாமையில் வந்து குனிந்து பார்க்கவும், கீழேயிருந்தவன் கொலை! கொலை! யென்று கூச்சலிட்டான். என்னை வந்து பிடித்துக்கொண்டார்கள். இவனை யார் குத்தினார்களோ நானறியேன்?' என்றான். 'நீ சொல்லுவதெல்லாம் சுத்தப்பொய். உன் பின்னுகவே நான் நெடுந்தூரம் நடந்து வந்தேன். அந்த ஆளை நீ கீழே தள்ளிக் குத்தும்போது நான் என்னிரண்டு கண்ணுலும் பார்த்தேன். அவனிறந்து விடுவானுனல் நீ தூக்குமரத்துக்கு இரையாவது நிச்சயம்!. இதைப்போலவே முன்னெரு கேசு பிடித்திருக்கிறோம்' என்றான் முதல் போலீஸ்வீரன்.

பிறகு தியாகராஜனை அருகாமையிலிருந்த போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டுபோனார்கள். அங்கேயிருந்த குமாஸ்தாவினிடத்தில் கொலைக்கேஸை யறிவித்துப் புத்தகத்தில் பதிவுசெய்தார்கள். மாணிக்கம் இறந்துபோனதாகவும் இடையில் தெரிவிக்கப்பட்டது. தியாகராஜன் கையிலிருந்ததாக இரத்தத்தில் தோய்ந்த ஓர் கத்தியை அக்குமாஸ்தாவினிட மொப்புவித்து அவனையும் ஓரறையில் அடைத்தார்கள்.

மறுநாள் காலை நீதி ஸ்தானத்திற்கு நியாயாதிபதி முன்னிலையில் தியாகராஜனைக் கொண்டுபோய் நிறுத்தினார்கள். அங்கு கொடுக்கப்பட்ட வாக்குமூலங்களால் மாணிக்கம் இறக்கவில்லையென்று தியாகராஜனறிந்தான். விசாரணை நடந்தது. மாணிக்கம் ஆஸ்பத்திரியிலிருந்தபடியால் அவன் நேராக வந்து வாக்குமூலங்கொடுக்க முடியவில்லை. 'காயம் படுகாயமாய் முடிகிறதா, இல்லையா,' என்பதைத் தெரிந்துகொள்ளும் பரியந்தம் கேஸைத் தள்ளிவைக்க நியாயாதிபதி உத்தரவு செய்தார். தியாகராஜனை மறுபடியும் தாணாவுக்கு அழைத்துப்போய் அடைத்துவைத்தார்கள். தியாகராஜன் அன்றைய காலை சமாசாரப் பத்திரிகை யொன்று தருவித்து அதில் வெளியிட்டிருந்த கொலைக்கேஸைப் படித்துப்பார்த்தான். கொலையுண்டவனுடைய வாக்குமூலமும் அச்சிட்டிருந்தது. அவ்வாக்குமூலத்தில் தியாகராஜனே கொலையாளியென்று தக்க ருஜுப்படுத்தியும், கொலைக்குக் காரணங் காட்டியுமிருந்தன.

அன்றைய பிற்பகல் பி. எல். பரீட்சைக்குத் தன்னோடு வாசித்துவரும் நண்பரொருவர் தியாகராஜனைப் பார்க்க வந்தார். அவர் பெயர் இராமச்சந்திர ஐயர். அவரிடத்தில் நடந்த விஷயங்களை யெல்லாப்

ஒன்றையுமொளிக்காமல் தெரிவித்தான். அவைகளைப் பொறுமையுடன் கேட்டுவந்த ஐயர் 'நல்லது, தியாகராஜா! நீ சொல்லுவது நிஜமோ, பொய்யோ, அவனிறந்துவிடுவானேயானால் உன்னைத் தூக்கிவிடுவது நிச்சயம்' என்றார். தன்னோடு படித்துவரும் நண்பரே, தனது குணத்தையறிந்திருந்தும் அப்படிச் சொன்னதைக் குறித்து வெகுவாக விசனித்தான். தனது வாழ்நாளும் இதோடு முடிந்தது என்று எண்ணினான், தன்னைப் பார்க்கவேண்டி அநேக நண்பர்கள்வந்தார்கள். யாரையும் பார்க்கவேண்டாமென்று முன் வந்த பிராமண நண்பர் தெரிவித்தபடியால் யாரையும் பார்க்கமுடியாதென் றனுப்பிவிட்டான். 'ஈசன் விட்டவழி யாகிறது. 'திக்கற்றவர்களுக்குத் தெய்வந்துணை' யென்பது உண்மையானால் நிரபராதியாகிய நமக்கு ஒன்றும் வராது' என்பதாகத் தன் மனதைத் திடப்படுத்திக்கொண்டு நாட்கழித்து வந்தான்.

அத்தியாயம் - 10.

ஆப்தசகாயன் - (தந்தையும், மகனும்).

அன்றுடம் பத்திரிகைகளில் வெளிவரும் விஷயங்களைத் தியாகராஜன் படித்துவந்தான். தான் தண்டனை யடைவது நிச்சயமென்று அவனுக்குத் தோன்றினது. 'கடவுளே வந்து சாட்சி சொன்னாலொழிய நம்பேரில் சுமத்தப்பட்டிருக்கும் அபவாதத்திலிருந்து மீளமுடியாது. மாணிக்கம் என்ன சூட்சி செய்தான்! உலகத்தில் யாரை நம்புகிறது? அவனே தன்னுடைய மார்பில் குத்திக்கொண்டானென்பதில் சந்தேகமில்லை. இரத்தந் தோன்றும்படியாய்க் கூரியகத்

தியால் காயஞ் செய்துகொண்டானே யன்றித் தன் னுயிருக்கு ஹானியாகக்கூடியவிதமாய்ச் செய்து கொள்ளவில்லை. பிறனைக் கெடுக்கவேண்டுமென்றால் தன் தேகத்திலுண்டாகுந் தொந்தரவையும் நினைக்க முடியவில்லை யல்லவா? சரி, இருக்கட்டும். அவரவர் எண்ணத்தையு மறிந்து படியளந்துவரும் பரமதயாநிதியுமா என்னுடைய நிரபராதத்தையும், மாணிக்கம் வஞ்சகத்தையு மறியமாட்டார்?' என்று தனக்குத் தானே பிதற்றிக்கொண்டிருந்தான். 'வடிவுடையம் மை இந்தச் சமாசாரத்தை யறிந்தால் தன்னைப்பற்றி யென்ன நினைப்பாளோ?' என்கிற எண்ணம் ஒருபக் கம் போராடியது. இராமச்சந்திர ஐயர் தினந்தோ றும் தியாகராஜனை வந்து பார்த்துப்போனார். விசார ணைகாலத்தில் தகுந்த வக்கீலையமர்த்தித் தன்னால் கூடியவரை பிரயாசை யெடுத்து எந்த விதத்திலும் விடுதலையடையும் வழியைத் தேடுவதாகச்சொல்லி வந்தார்.

ஒருநாள் தானடைப்பட்டிருக்கும் அறை திறக் கப்பட்டுப் பாதாதிகேசம் முக்காடிட்டு ஒரு பெண் உள்ளே வந்தாள். வந்தவள் யாரா யிருக்கலாமென் கிற சந்தேகம் தியாகராஜனுக்கு ஏற்படவில்லை. ஏனென்றால், வைரவபுரத்தில் வடிவுடையம்மையைப் பிரிந்த பிறகு அவளைக் கண்டுபேசியதெல்லாம் தானிந்த அபவாதத்திற்குள் அகப்படுவதற்குச் சற்று முந்தியல்லவா? அவளைத்தவிரத் தன்னைப்பார்க்க வேண்டிய வேறுபெண்பிள்ளைகள் யாருமில்லையென்ற வனுக்குத் தெரியும். கொண்டுவந்துவிட்டஆள் வெளி யே போனதும், வந்தவள் முக்காட்டை யெடுத்தாள். அவள் வடிவுடையம்மையே. பேச நாவெழவில்லை. இருவரும் ஒருவரை யொருவர் பார்த்தவண்ணமாய் நின்றார்கள். பிறகு, தியாகராஜன் 'இந்தக்கோலபாத கனைப் பார்க்கவந்ததற்காக ரொம்பவும் நன்றியறியக்

கடமையுள்ளவனாயிருக்கிறான்' என்றான். 'நீங்களொருக்காலுங் கொலைபாதகஞ்செய்யமாட்டீர்கள். எனக்கு நன்றாய்த் தெரியும்' என்றாள் வடிவுடையம்மை.

தியாக—நான் நிரபராதி யென்பதாகக் கடவுள் ஒருவருக்குத்தான் தெரியுமென்றெண்ணியிருந்தேன். பெண்மணியே நீயும் என்னை நிரபராதியென்றே நம்புகிறபடியால், இனி யெனக்குத் தூக்குத் தண்டனையே விதிக்கப்படினும் அதைப்பொருட்டாகக் கவனிக்கமாட்டேன்.

வடிவு—நான் இறந்துபோனபின்பு உங்களை வந்து பார்த்திருப்பேன். ஆனால், உமக்குத் தீமைசெய்த தோன்றிய ஆபத்திலும் நான் தங்களைக் கண்டபோதிலும் உண்மையென்றும் உங்கள் வாயினின்று வரவேண்டுமென்றே யாகையால், இப்பொழுதே யான தெய்த மேதாவது கேட்டேனென்று பயந்தால் உங்களை யென்னிடம் அத்தாட்சிப்பொழுது தந்தேப் பொருளும்படியாய் வேண்டுமேன், தங்கமயமாகுதனது சொல்லி வந்திருக்கிறார்கள். வழியில் யாதொரு கேடுமேனும் சேரிடாமல் காப்பாற்றும்படியாக எங்கள் வழிப்படி தெய்வத்தையெல்லாம் வேண்டினேன். என் பெயர்போன என்ன பலனைத் தந்ததோ? கடைசியிலிந்தச்சாலையில் சிக்கப்பட்டுத் தீர்ப்பைத் தெதிர் பார்த்திருப்பது என் பொருட்டல்லவா? உங்களுக்கிந்தவளவு கெடுதியை விளைவிக்க இப்பாவியா யென்ன செய்தாளோ ஆ! (என்றழுதாள்.)

தியாக—வடிவு! சாட்சிகளெல்லாம் ஜோடிக்கப் பட்டிருக்கின்றன. ஆகையால், நான் தண்டனையடைவது நிச்சயம்.

வடிவு—பொய்ச் சாட்சிகள்தானே? ஆயினும், விசாரணைக் காலத்தில் என்னுடைய வாக்குமூலத்தை யுங் கொடுக்கவரமாட்டேனா?

தியாக—நீ என்ன சொன்னாலும், என்பேரில் சுமத்தப்பட்டிருக்கிற குற்றஞ் சாமான்யமானதா யில்லையே!

வடிவு—இருந்தாலும் பரவாயில்லை. இதுவரை யில் நடந்திருப்பதெல்லாம் ஒருதரப்பு வாக்குமூலங் களும் அவைகளைப்பற்றிய அனுமானங்களுமே. இனி மறுதரப்பு வாக்குமூலங்களும் அனுமானங்களும் வேண்டாமா?

தியாக—என்னோடு படித்தவரும் அத்தியந்த சிநேகரொருவர்க்கு நடந்தவைகளையெல்லாம் உள்ள படியே சொன்னேன். என் வார்த்தைகளை யெப்பொ ழுதும் நம்பப்பட்டவர், இப்பொழுதேனோ சற்றே னும் நம்பிக்கையின்றி 'நீ தண்டனையடைவது நிச்ச யம்' என்று சொன்னார். நான் என்ன செய்யட்டும்?

வடிவு—உங்களுக்கு யாதொரு கெடுதியும் சம் பவியாது. விசாரணைக்காலத்தில் உங்களுக்கு எல்லா விதத்திலும் உதவி செய்யத்தகுந்தவர் ஒருவரிருக்கி றார். சரியான விசாரணையில்லாமல் அநியாயத்தீர்ப்பு ஏற்பட்டாலும், அதற்காக எவ்வளவு திரவியம் விரய மானாலும் மேலதிகாரிகளுக் கெழுதி மறுவிசாரணை நடத்தும்படியான ஏற்பாடுகள் செய்வோம். நீங்கள் யாதொன்றுக்கும் பயப்படவேண்டாம்!

தியாக—ஆபத்துக்காலத்தி லுதவிசெய்யக்கூடிய வர்கள் உன்னைத் தவிர யாரிருக்கிறார்கள்?

வடிவு—ஏன்; என்னுடைய தகப்பனாரே. அவ ருக்கு எல்லாவிஷயங்களையுஞ் சொல்லியிருக்கிறேன்.

என்றெண்ணியே பின்னர் 'சங்கடத்தில் அகப்பட்டபடியாய் உங்களுக்கு நேரிட்டதென்று சொன்னேன்.

தியாக—(மனம் ஆறுதலடைந்து) நான் நிர்த்தோஷியென்று நீ நம்புகிறதானே'யெனக்குப்போதும். நடந்த விஷயத்தை நான் சொல்லுகிறேன் கேள்.

வடிவு—நீங்கள் சொல்லவேண்டியதில்லை. உங்களோடு வீண் சண்டையிட மாணிக்கம் வந்திருக்கலாம். அதனால் உங்களுடைய உயிருக்குக்கெடுதி நேரிடாவண்ணம் கத்தியெடுத்துப் பயமுறுத்தியிருப்பீர்கள். சொற்பகாயமாய் அவன் மார்பில் பட்டிருக்கும். அதை யாதாரமாகக்கொண்டு கொலை! கொலை!! யென்று கூச்சலிட்டு உங்களைப் பிறகு சங்கடத்துக்குள்ளாக்கியிருக்கவேண்டும். நான் யோசித்தது சரிதானே?

தியாக—உன்னுடைய அபிப்பிராய முழுதும் பிசகு. அவன் சண்டையிடவுமில்லை; என்னைக் காத்துக்கொள்ளக் கையிற் கத்தியெடுக்கவுமில்லை.

வடிவு—(முகஞ் சுளித்து) என்ன! உங்களைக் காப்பாற்றிக்கொள்ளக் குத்தவில்லையா? நீங்கள் சொல்லுவது எனக்கு விளங்கவில்லையே?

தியாக—நானவனைத் தொட்டவனுமல்ல. அன்றிரவு உன்னை வீட்டில்விட்டு மீளுங்கால் வழியில் 'ஐயோ! காப்பாற்றுவாரில்லையா!' என்பதாகச் சப்தங் கேட்டது. சமீபத்தில் போய் மாணிக்கங் குரலாயிருக்கிறதே யென்று குனிந்து பார்த்து 'மாணிக்கம்! உனக்கென்ன?' என்றுகேட்டதுதான், அவன் உடனே கொலை!கொலை!யென்று கூச்சலிட்டு, நானே குத்தியதாகப் பிரமிசெய்துவிட்டான்.

வடிவு—(பொறுமையுடன் கேட்டிருந்து) எனக்கு ஞாபகமிருக்கிறது. அப்படிச் சொல்லுங்கள்; சரி சரி, அதேதானிது! தியாகு! மாணிக்கம் செய்த ஏற்பாட்டையும், நீங்கள் அபத்திலகப்பட்டதையும், நீங்கள் சொல்லும்போதே இதைப்போன்ற சம்பவம் முன்னெங்கேயோ நடந்தமாதிரியாகத்தோற்றினது. அஃதிப்பொழுதுதான் புலப்பட்டது. மாணிக்கம் ஒருதடவையோர் தமிழ் நாவல் கொண்டுவந்து கொடுத்தான். அஃது ஆங்கிலபாஷையிலுள்ள ஓர் நாவலின் மொழி பெயர்ப்பு. அதில் இதே மாதிரியான சம்பவம் நடந்ததாகக் காட்டியிருந்தது. ஓர் துரை தன்னுடைய விரோதியொருவனைத் தொந்தரவுக் குள்ளாக்கவேண்டி, அவன் தன்னிடமிருக்குஞ் சமயம்பார்த்துத் தற்கொலை செய்துகொண்டான். மாணிக்கம் அந்தப்பாகத்தை யெனக்குக்காட்டி 'இந்தத்துரை சுத்த முட்டாள். தன்னையேன் கொலைசெய்துகொள்ளவேண்டும்? தன்னுடைய தேகத்தி லெங்கேயாவது படுகாயஞ் செய்துகொண்டு, தன் விரோதியை ஜெயிலுக்கனுப்பித் தானிராஜாபோலத்திரியவேண்டும். நானிருந்தால் அப்படியே செய்திருப்பேன்' என்று சொல்லியிருக்கிறான். சொன்னது போலவே செய்துவிட்டான். ஆனாலவனெண்ணப்படி இராஜாமாதிரியாகத் திரிய முடியாது.

தியாக—(ஆச்சர்யத்துடன்) ஆ! ஹா! அவன் செய்த சூழ்ச்சியப்படியா! ராஜா மாதிரிதான் திரிவான். நீ எண்ணிய பிரகாரம் தற்பாது காப்பின் பொருட்டு நானவனைக் கத்தியாற் குத்தியிருப்பேனால், உன் முயற்சிகளும் அனுகூலப்படும். ஆனால், நான் ஒன்றுமே யறியாத நிரபராதி யானபடியால் நியாயத் தீர்ப்பும் பிரதிகூலமாகவே முடியும்.

வடிவு—தானே குற்றவாளியென் றங்கீகரிக்கும்படி நான் வற்புறுத்தினலோ?

தியாக—தன் குற்றத்தை வெளியிட்டு அவனே தண்டனைக்குள்ளாகப் பார்ப்பானே?

வடிவு—அவனைச் சம்மதிக்கும்படியாய் நான் வேறேற்பாட்டினல் செய்தாலோ? பலவந்தமாக அவனுடைய வாக்குமூலத்தையும், உடனே வாங்குகிறேன் பாருங்கள்!

தியாக—நீ என்ன செய்தாலும் தன் குற்றத்தை யவன் வெளியிடமாட்டான். என்னை நிரபராதியென்று சொல்லிவிட்டாலே போதுமே; சொல்லுவானே? அவனென்னுடைய ஜென்மப் பகையாளன், நான் வைரவபுரப் பாடசாலையிற் சேர்ந்தநாள் முதற்கொண்டு என்பேரில் வஞ்சமே வைத்திருக்கிறான். நீயெனக்குச் செய்யவேண்டிய உபகாரமாவது நீ இந்த விஷயமாய் யாதொருமுயற்சியுஞ் செய்யாமலிருக்கவேண்டியதே. நீ செய்ய எத்தனிக்கும் உபகாரம் காலகதியில் அபகாரமாயும் முடியலாம்.

வடிவு—அப்படியானல் உங்களுடையயோசனை தானென்ன? மீளும்வகை யெப்படி?

தியாக—என்னுடைய யோசனை யின்னும் முற்றுப்பெறவில்லை. முடிந்ததும் உனக்குச் சொல்லுகிறேன்.

இப்படிச் சம்பாஷணை நடந்தபின் சிறிது நேரத்தில், வடிவுடையம்மை மறுபடியும் வருவதாகச் சொல்லிப் போய்விட்டாள்.

தியாகராஜன் பலவிதமான சிந்தனைகளோடே தன்னறையிலுலாவிக் கொண்டிருந்தான். அந்தச்சமயத்தில் கதவு திறக்கப்பட்டு உள்ளே யொருவர் வந்

தார். அவரைத் தியாகராஜன் இதற்குமுன் பார்த்த தில்லை. விநோதமான அங்கியைத் தரித்திருந்தார். வயது சென்றவர்; பெரிய தாடியிருந்தது. வந்தவர் வெகுநேரம் தியாகராஜனுடைய முகத்தை உற்றுப் பார்த்த வண்ணம் நின்றார். தன்னை யவ்வாறு பார்ப் பதைக்கண்டு சந்தேகித்து "ஐயா! நீங்கள் யாரென் றும், என்ன உத்தேசித்து வந்தீர்களென்றும் சொல் லமுடியுமா?" என்றான் தியாகராஜன்.

பெரியவர்—நான் யாரென்று பிறகு சொல்லு கிறேன். உன்னைச் சில கேள்விகள் கேட்க வந்தேன்.

தியாக—நீங்கள் கேட்கவேண்டியவைகளைச் சீக் கிரம் கேட்டுவிட்டுப் போங்கள்!

பெரி—நானின்றுக் கேட்கவேண்டிய கேள்விக ளனைத்திற்கும், நீ யவைகளுக்குப் பொறுமையுடன் பதில் சொல்லுவாயென்று நம்புகிறேன்.

தியாக—நீங்களென்னைத் தொந்தரவுசெய்ய வந் திருப்பதாகத் தெரிகிறது. அப்படியானால் உடனே புறப்பட்டுப்போங்கள்! இல்லாவிட்டால் ஒரு ஆளா ளைக் கூப்பிட்டு உங்களை வெளியேயனுப்பச் சொல்லு வேன்!

பெரி—அப்பா! அவ்வளவு பதட்டம்வேண்டாம். வீண் கேள்விகள் கேட்க நான் வந்தவனல்ல. உன்னு டைய பிறப்பைப்பற்றி யுனக்குத்தெரிந்திருப்பதைப் பார்க்கிலும் அதிகமாகத் தெரிந்தவன் நான். உனது தாய் தந்தையர் யாவர்?

(இவ்வாறு சொல்லவும், தியாகராஜன் அவரைக் கூர் மையாய்ப் பார்த்தான். தன் ஜெநநத்தைப்பற்றியந்த வாக்குத் தோற்றப்பட்டதுமல்லாமல், அவருடைய தாடி பொய்த்தாடியென்று மறிந்தான், உடனே.)

தியாக—ஐயா! நீங்கள் என் வார்த்தையோடேயா வந்தீர்கள்? அப்படியானால், உலகிலாகிய போல இது சமயமன்று. எனது தற்காலத்தையே மறந்திருக்கும் வண்ணம் போதுமானதாய்ப் போனது. இப்போது உங்களுக்கு அநேககோடி நமஸ்காரம். போய் வாருங்கள்.

பெரி—அப்பா! நீ திருடனைப்போல் பேசாதே. உன் குலத்தின் பெருமையையறிவேன். உன் பேரில் சுமத்தப்பட்டிருக்கும் குற்றத்தையும் அது நடந்த சந்தர்ப்ப முதலியவற்றையும் பத்திரிகையில் பார்த்தேன். உன்னுடைய பெயர், பிறப்பு முதலானவைகள் எழுதியிருந்ததைப்பார்க்க, உன் பெற்றோரை நானறிவேனென்பதாக மனதிற்பட்டது. அதைப்பற்றி உன்னிடத்திலிருந்து சில விஷயங்களைக் கேட்கவே வந்தேன். நான் யோசித்திருக்கும் காரியத்தை உத்தேசித்து என் கேள்விகளுக்கு விடையளிக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தியாக—அப்படியானால், கேளுங்கள்; சொல்லுகிறேன்.

பெரி—உன் பிறப்பைப்பற்றி உனக்கென்ன தெரியுமோ, அதையுள்ளபடியே சொல்லவேண்டும்.

தியாகராஜன் தன்னுடைய பரிதாபமான சரித்திரத்தைச் சொன்னான். வந்தவர் அவனைத் தன்னிரு கைகளாலும் தழுவிப்பிடித்து, 'அப்பா! என் கண்ணே! என்னைச் சற்றுநேரத்திற்கு முன்பு வெளியே தள்ளியிருப்பாயானால் உன் தகப்பனையே தள்ளியிருப்பாயே!' என்றார். தியாகராஜன் திருதிருவென விழித்தான்.

பெரி—என், ஆச்சர்யமாயிருக்கிறதோ?

தியாக—ஆம், ஐயா. நீங்கள் சொல்லுவதை நம்ப இடமில்லையே!

பெரி—என்னப்பா! நான் சொல்லுவதை நம்பு. நீ எனது குமாரன்.

தியாக—நான் உங்கள் குமாரனால், இவ்வளவு காலம் என்னை எப்படி மறந்திருந்தீர்கள்?

பெரி—என் செல்வமே! அதையெல்லாம் சொல்லப்புகுந்தால் பெரும் பாரதமாகும். நீ உயிரோடிருக்கிறதாக நானறியேன், அறிந்திருந்தால், நீயிப்படி அநாதையாய் இருக்க விட்டிருப்பேனா? உன் தகப்பனுடைய நிலைமையைப்பற்றி நீ விசனப்படமாட்டாய், அசங்கதம் கொள்ளவுமாட்டாய். உலகத்தில் என்னைத் தெரியாதவர்களொருவருமில்லையாது. என்னுடைய ஏகபுத்திரனாகிய நீயே என் சொத்திற்குடையவன். நீ குற்றவாளியோ, நிரபராதியோ?

தியாக—ஐயா! நான் நிரபராதியே.

பெரி—சரி, கொலையைப்பற்றிய சமாசாரமென்ன?

தியாகராஜன் முன்பு தன் சரித்திரத்தைச் சொன்ன பொழுது மாணிக்கம், அருணாசலம் இவர்களைப்பற்றித் தெரிவிக்கவில்லை. இப்பொழுது அவர்களைப்பற்றியும், மாணிக்கத்தால் தனக்கு நேர்ந்த சர்வ விபத்துகளையுஞ் சொன்னான். அவனது தந்தை 'என்னைப்போலும் பாக்கியசாலியுண்டா? நான் கனவிலும் நினைக்காத விதமாய் இறந்தவென் புத்திரனை மீண்டும் அடையப்பெற்றேன். அவன்பேரில் சுமத்தப்பட்டதும் பொய்க்குற்றமாயிருக்கிறது' என்றுதனக்குள்ளேயே சொல்லிக்கொண்டார். 'ஐயா, என் கதையைச் சொல்லிமுடித்தேன். இனி நீங்களென்னை எப்படி யநாதரவாகவிட்டீர்களென்பதைச் சொல்லுகிறீர்களா?' என்று தியாகராஜன் கேட்க, அவர் 'நான் சொல்லுவதைக்கேள். என்பெயர் சுப்பிரமணிய முத

லியார்' என்றார். 'எந்த சுப்பிரமணிய முதலியார்?' என்று தியாகராஜன்கேட்க, அவர் ஜட்ஜி சுப்பிரமணிய முதலியார்' என்றார். தியாகராஜன் பிரமித்து நின்றான். ஏனென்றால், ஜட்ஜி சுப்பிரமணிய முதலியாரைப்பற்றியும் அவருடைய [illegible] களைப்பற்றியும் அவன் பலதடவை பத்திரிகைகளில் படித்திருக்கிறான். நகரத்தில் அவரைப் புகழ்ந்து பேசாத நாவே கிடையாது. நீதிபதியென்பது அவருக்கே தகும்.

'நீங்க ளுண்மையில் என்னுடைய தந்தையா?' என்றான் தியாகராஜன். 'அதில் சந்தேக மென்ன? நாட்டாருடைய திருப்திக்காகவேண்டிச் சிலவிசாரணைகள் செய்தேனே யன்றி நீ என்புத்திரனென்று ஸ்திரமாயறிவேன். இந்தச்சம்பாஷணையும் உன் தாயாரையப்படியே [illegible] போலிருக்கிறது. உன் [illegible] கண்டதும், நீ என் புத்திரனென்று நான் சொல்ல முடியும்' என்று ஜட்ஜி சொன்னார். 'ஐயா, எல்லாமெனக்கொரு கனவுமாதிரியிருக்கிறது' என்றான். 'ஆம், அப்படித்தான் தோற்றும். உன் பிறப்பைக் குறித்து நான் சொன்னதன்மேல் எல்லாம்ஸ்பஷ்டமாகத் தெரியும். என்னுடைய ஆச்சரியத்திற்கும் எல்லையில்லை. ஒருகாலத்தி லிழந்தபுத்திரனை காணக்கூடியதில்லையென்றால், என்னுடைய உளமகிழ்ச்சிக்கு அளவிருக்குமா? ஒரு விஷயத்தைப்பற்றி யெனக்குச் சந்தோஷம். உன்னை யபகரித்துப்போன அந்தப் பைத்தியக்காரி உன்பெயரை மாற்றாமற்போயினள். அதுதான் நான்செய்த பாக்கியம். அந்தப்பெயரை யாதரவாகக்கொண்டுதான் உன்னைத் தேடிவந்தேன். உன்னுடைய ஜாதகப்பெயரே தியாகராஜன். உனது பூர்வோத்தரத்தைக் கேள்' என்று ஜட்ஜி சுப்பிரமணியமுதலியார் சொல்லத் தொடங்கினார்.

அத்தியாயம் - 11.

ஓர் விநோதக் கதை.

'எனது தந்தை சாம்பசிவ முதலியார், ஓர்பெரிய தனவந்தர். பராக்கிரமமை தெரிந்தவர். தன்னுடைய ஒரே புத்திரனாகிய என்னைச் சிறுவயதாயிருக்கும் பொழுதே உலகானுபவமறியும்பொருட்டு வெளிதேசங்களுக்கனுப்பினார். அவர் 90-வயது வரைக்கு மிருந்தார். அவர் காலத்திலேயே நான் ஜட்ஜி உத்தியோகம் வகித்தேன். தன்னுடைய புத்திரன் உன்னத பதவியை யடைந்ததைக்கண்டு மகிழ்ந்திருந்தார். அவர் இறந்துபோன பிறகுதான் அவருடைய ஆஸ்தியின்னளவென் றெனக்குத் தெரியும். அநேக கோடிகள் பெறுமான ஆஸ்தியை வைத்துப்போனார். நான் 40-வது வயதுவரையில் விவாகமின்றி யிருந்தேன். வடநாட்டில் உத்தியோகத்தி லிருந்தபொழுது அங்கொரு பெரிய மனுஷருடைய பெண்ணை வதுவை செய்தேன். ஒருவருடகாலம் உனது தாயார் விசாலாட்சியோடு தேசயாத்திரைசெய்து, நான் உத்தியோகஞ்செய்திருந்த வூருக்குத்திரும்பினேன். திரும்பின மறுவருடத்தில் எனக்கோர் புத்திரன் ஜனித்தான். அவன்தான் "தியாகராஜன்" என்னும் பெயருடைய நீ. நீ 10-மாதக் குழந்தையா யிருக்கையில், வீட்டுப் பணிப்பெண்ணொருத்தி யுன்னை யெடுத்துக் கொண்டு போய்விட்டாள்.

காணாமற்போன உன்னைக் கண்டுபிடிப்பதற்காக நான் செலவழித்த பணத்திற்குக் கணக்கே கிடை யாது. பத்திரிகைகளில் பிரசுரித்தும், வேறு பிரயத் தனப்பட்டும் உன்னைப்பற்றியாவது திருடிப்போன பணிப்பெண்ணைப்பற்றியாவது ஒன்றாகிலும் புலப்பட வில்லை. குழந்தையைச் சாகாமலே இழந்த ஏக்கத்தி னால் நாங்கள்பட்டமனஸ்தாபங்கொஞ்சமல்ல. உ-வ ருஷம் சென்றிருக்கும். ஒருநாளிரவு நானும் உனது தாயாரும் வீட்டு முற்றத்தில் நிலவுவெளிச்சத்தி லுட் கார்ந்திருந்தபொழுது, நீ காணாமற் போய்விட்ட தைப்பற்றி இருவரும் பேசிக்கொண்டிருந்தோம். அப்பொழுது நான் உன் தாயாரைப்பார்த்து 'பெண் ணே, விசாலாட்சி! உன்னை நான் மணந்தபொழுது நீ பிள்ளை துக்கத்திற்காளாவாயென்று நினைக்க வில்லை' என்றேன். உனது தாயார் சிறிதுநேரஞ் சும் மாவிருந்து, பிறகு 'நாயகா! நம்முடைய அருமைக் குழந்தை காணாமற்போனதற்குக் காரணம் இப்பொ ழுதுதான் விளங்குகிறது. நம்முடைய குழந்தையை யெடுத்துப்போனவள் பாலாம்பாள்' என்றாள். 'நீ சொல்லுவ தெனக்கு விளங்கவில்லையே' என்று கேட்க, 'நான் விளங்கச் சொல்லுகிறேன் கேளுங்கள். என்றையதினம் நம்முடைய வீட்டிற்கு அவள் வந் தாளோ, அன்றையதினத்திலிருந்தே அவள்பேரில் என்னையறியாமலே சந்தேக மேற்பட்டிருந்தது. நம் முடைய குடும்ப வைத்தியர் சிபாரிசு செய்தபடியால் அவளை நான் வேலையிலமர்த்திக்கொண்டேனேயன்றி யில்லாவிட்டால் நான் சேர்த்தே யிருக்கமாட்டேன். அவளுடைய பேச்சுத்தோரணைக்கவனிக்க அவளை நா னிதற்கு முன்பே பார்த்தேன்போல் தோற்றினது. அவள் தலைமயிர் பொய்ம்மயிரென்றும், தன் சுயரூபத் தை மறைத்து வந்தாளென்றும் இப்பொழு தெனக் குத் தோற்றுகிறது. இவைகளெல்லாம் அப்பொழு

தே தோற்றுப் போய்விட்டன. 'பழிக்குப்பழிவாங்குவேன்' என்று சொன்னவள் என்னுடைய கண்ணில் கொப்பமேயோ, பிசாசுப் பூனைத் தானே பழிவாங்கி விட்டாள்' என்று ஆயாசத்தோடு சொன்னேன்.

அவளென் பழிவாங்கவேண்டுமென்று நான் கேட்டேன். 'அந்த இரகசியத்தைச் சொல்லுகிறேன், அந்தப்பெண் உங்களைக் காதலித்து வந்தாளாம்' என்று அவள் சொன்னவுடன், 'நானவளை ஏறெடுத்தும் பார்த்ததில்லையே' என்றேன். அதற்குத் தாயார் 'அவள் காதலித்து வந்தாளென்று எனக்கெப்படித் தெரியுமென்றால், நமக்கு விவாகமான சிலநாள் பொறுத்து, யாருமில்லாத சமயத்தில் பாமாம்பாள் என்னிடம் வந்து 'எனக்கும் என்னுடைய காதலனுக்கு மிடையில் நீ வந்து குறுக்கிட்டுக்கொண்டாயல்லவா? அந்த மாப்பிள்ளையுடைய என்னென்ன மாயஜால மெல்லாம் செய்தாயோ? இல்லாவிட்டாலவர் என்னைத்தான் கல்யாணஞ் செய்திருப்பார். என்னுடைய காதற்கரும்பை நீ திருடினமையால், உனக்கு மெய்யாயுள்ள பொருளை ஏதாவதொருகாலத்தில் திருடிக்கொண்டுபோவேன்' என்று சபதஞ் செய்தாள்' என்று கூறினவுடன், 'ஏடீ, இந்த விஷயங்களை முன்னமே யெனக்குச்சொல்லி யிருக்கக்கூடாதா? பாமாம்பாளை நான் அதிகமாக அறியமாட்டேன். உன் தகப்பனாருடைய வைப்பாட்டியின்பெண்ணென்ற மாத்திரம் எனக்குத்தெரியும். ஆனால் அவளிடத்தி லதிகமாகப் பேசியுமறியேன். சரி, இப்பொழுது அவள்தான் திருடிக்கொண்டு போயிருக்கவேண்டுமென்று நீ நம்புகிறாயா?' என்றேன். ஆம், அவளே

மாறுவேடம் போட்டுக்கொண்டு நம்முடைய பணியாளை ஏமாற்றி, சமயம் பார்த்து எனது குழந்தையைக் கொண்டுபோய்விட்டான். பாவி! குழந்தையை என்ன செய்திருப்பானோ?' என்று கையைப் முறித்துக்கொண்டு அழுதாள்.

அந்தப் பணிப்பெண் தாயாருடையவும், கடகக் கருகாமையிலுள்ள செம்மிக்குப்பத்திலென்று கேள்வி. மறுநாளே அவளுக்கு உன் தாயாரும் நானுமாகப் புறப்பட்டுப்போய் அவளைக் கண்டுபிடித்தோம். அவளை முனிசிப்பைக்கொண்டு விசாரணைசெய்ததில் தான் குழந்தையைத் திருடவந்தது உண்மைதானென்றும், அக்குழந்தையும் இரண்டொருநாளில் இறந்துவிட்டதென்றுசொல்லி, குழந்தை புதைக்கப்பட்டவிடத்தையுங் காட்டினாள். இன்னுமதைப்பற்றிச் சரியாக விசாரிக்கலாமென்றிருக்க, அன்றிரவே பாவம் பாள் தன்னுடைய அறையில் தற்கொலை புரிந்துகொண்டாள். அவளுடைய பெட்டியைப் பரிசோதிக்கையில், அதில் ஓர் கடிதமெழுதி வைக்கப்பட்டிருந்தது. அதைப் படித்துப் பார்த்தபோது 'குழந்தை சாகவில்லையென்றும், அஃதிருக்குமிடம் தெரிவிக்க முடியாதென்றும், அதப்படிதான் கஷ்டமென்றும் எழுதியிருந்தது. அக்கடிதமும் அவள் கொலைபுரிந்துகொள்ளுவதற்குச் சற்று முன்னதாகவே எழுதப்பட்டதாகத் தெரியவந்தது. பிறகு எவ்வளவோ பாடுபட்டும் உன்னைக்கண்டுபிடிப்பது கஷ்டமாய் முடிந்தபடியால் நாங்களிருவரும் கடகத்திற்கு வந்துவிட்டோம். இதுவரையில் உன்னையிழந்த புத்திரசோகத்தாலேயே வருந்துகிறோம்' என்று சுப்பிரமணியமுதலியார் கூறினார்.

இவ்வளவையும் பொறுமையுடன் கேட்டுவந்த தியாகராஜன் 'அப்பா! என்னுடைய தாயாரெப்படி

யிருக்கிறாரென்பதைச் சொல்லவில்லையே! சுகமாயிருக்கிறார்களா?' என்றுகேட்க, அவர்'உன்னுடைய தாயார் சுகமாகவே யிருக்கிறாள். உன்னைப் பார்த்தால் உன் தாயாரைப் பார்க்கவேண்டியதில்லை. ஒரே மாதிரியான ரூபம். உன்னை யிழந்த விசாரத்தினாலேயே தன்னுடையகாலத்தை யொருவிதமாகக் கழித்து வருகிறாள். உனக்குப் பிறகு எங்களுக்கு வேறு சந்தானமும் உண்டாகவில்லை' என்றார். 'நான் உங்களுடைய குமாரனென்று உங்களுக்கு நன்றாய் மனதிற் பட்டுவிட்டதா?' என்று தியாகராஜன் மறுபடியும் கேட்டான். 'நீ யென்னுடைய குமாரனென்பதில் எள்ளளவும் சந்தேகங் கிடையாது. ஆனாலும், நீ வளர்ந்துவந்த தருமபாடசாலை யதிகாரிகளைப் போய்க்கண்டு நீ என்னுடைய குமாரனென்றே பலருமறியச் செய்கிறேன்' என்று சொல்லி, சுப்பிரமணியமுதலியார் போய்விட்டார்.

மறுநாள் காலை முதலியார் வந்து தியாகராஜனைக்கண்டு, தான் தருமபாடசாலை யதிகாரியைப் போய் பார்த்ததாகச் சொல்லி 'தியாகு! அக்காலத்தில் நீ யணிந்துகொண்டிருந்த உடையைக் கொண்டு வந்து காட்டினார்கள். அதில் உன்னுடைய பெயரெழுதப்பட்ட சீட்டிருந்தது. நீ அப்பள்ளியில் சேர்ந்த தேதியு மெழுதியிருக்கக்கண்டேன். என் வசத்திலிருந்த நீ பிறந்தது, காணாமற்போனது, நெல்லிக்குப்பத்தி லுன்னைத் தேடிவந்தது முதலான தேதிகளோடு கணக்கிட்டுப்பார்க்க, சந்தேகமில்லாமல்நீயே எனது ஸ்ரீமந்தபுத்திரனாகிறாய். உன்னுடையகேசைப் பற்றி ஒரு துப்பறியு முக்தியோகஸ்தரிடம் யோசித்தேன். அவர் துப்பறியுந்தொழிலி லதிக திறமைவாய்

ந்தவர். உன்னை யெப்படியுந் தப்புவிக்க முடியும். அவர் இன்றைக்கும், நாளையாகிலும் உன்னை வந்து காணுவார். நானும் நாளைக்குவந்து பார்க்கிறேன்' என்று சொல்லிப் போய்விட்டார்.

இந்த தகப்பனுடைய மன்னிப்படைந்த சந்தோஷமொருபக்கமும், 'நாம் விடுதலை யடைவமா?' என்கிற சந்தேகமற்றொருபக்கமுமுடையவனாய், தியாகராஜன் வடிவுடையம்மையின்னன்பையும் அவள் சொல்லிப்போன அதிசயமும் எண்ணிக்கொண்டிருந்த பொழுது வடிவுடையம்மை உள்ளே வந்தாள். அவளைப் பார்த்து 'மறுபடியும் என்னைப்பார்க்கவந்ததற்காக நான் நன்றியறிகிறேன்' என்று அவன் சொல்லவும், 'என் பொருட்டிட்டீர்கள் இப்படிப்பட்ட ஆபத்தி லகப்பட்டிருக்க, அடிக்கடி வந்துபார்ப்பதும் உங்களை விடுதலை செய்யும் பிரயத்தனஞ்செய்வதுந் தவிர, எனக்கு வேறு வேலை யென்ன? அது போகட்டும், நீங்கள் இனிக்கின்றபடியான சமாசாரமொன்று கொண்டுவந்திருக்கிறேன்' என்றாள். 'என்ன சமாசாரமது? மாமனிக்கம் செய்துவிட்டாரா?' என்றுஅவசரத்துடன் தியாகராஜன் கேட்க, அவள் 'இல்லையில்லை, சொல்லுவதைக் கேளுங்கள், அவனேன் தன்னைக் கலியாணஞ் செய்துகொள்ளும்படி என்னைத் துன்பப்படுத்தினன் தெரியுமா?' என்றாள். 'அதொன்று ஆச்சரியமல்ல, உலகத்தில் உன்னைக்கண்டு காதல் கொள்ளாதவர்களே இருக்கமாட்டார்கள்' என்றான் தியாகராஜன். வடிவுடையம்மை கொஞ்சநேரம் ஒன்றும் பேசாமலிருந்து 'அப்படியானால் நீங்களென்னைப் பலதடவை கண்டுங் காதல் கொள்ளாதிருப்பது ஆச்சரியந்தானே' என்றாள். 'நானுன்னைக் காதலித்தாலும் என்னுடைய பரிசாரக நிலைமையை யுத்தேசித்து, அதை வெளியிடவில்லை' என்றவன் கூறவும்; 'பரிசாரகனாயிருந்தா லென்ன? என் தகப்பனு

றும், ஏகதாலத்தில் ஏறாமிருக்கிறது. இப்பொழுது மாத்திரம் [illegible] வியாபாரிகளோ? [illegible] தியாகராஜனைக் கொண்டு [illegible], கண்கனிந்திட்டன. 'உன்னைக் காதலிக்கிறேனென்று [illegible] கூறாததெப்படி?' என்றான். 'காதலிப்ப துண்மைதானோ' என்றவள் கேட்கவும், 'அதற் காட்சேபமென்ன? தேவர்களெல்லாஞ் சாட்சிபகர்வார்களே' என்று கூறி மரம்போல நின்றான். வடிவுடையம்மை உவகை மேலிட்டு புன்னகையோடு [illegible]. தியாகராஜன் அவளைத் தன்னிருகைகளாலும் மார்புறத் தழுவ, இருவரும் ஒருவரை யொருவர் முத்தமிட்டுக்கொண்டார்கள்.

மெய்க்காதலர்கள் முதற்றடவை பரஸ்பரம் முத்தமிட்டபோ தடையுஞ் சந்தோஷத் [illegible] வை? பாலைவனத்தில் நாவறண்டு திரியும் பிரயாணிக்குச் சோலை [illegible] தோற்றமுண்டாகுஞ் சந்தோஷமும், [illegible] கடலில் [illegible] குக் கரைகண்டதும் [illegible] மும், [illegible] குக் கண்டோ [illegible] வாயிலிருக்கும் [illegible] யும், சமுத்திரத்தில் நெருப்புப்பற்றி யெரியு மரக்கலத்தி லுள்ளார்க்குத் தற்செயலா யங்குவந்த மற்றொரு மரக்கலத்தைக் கண்ணுறலா லவர்களடையும் பரமானந்தமும், தனித்தனியாயன்றி யொன்று சேர்ந்தாலு மீடாகாவாம். பிறகு வடிவுடையம்மை 'தியாகு! காதலிப்பதிற் பொருந்தினாற் போதாது. மாலையிட்டு விவாகத்தைப் போவோம்' என்றாள். [illegible] வது திண்ணம்' என்று தியாகராஜன் சொல்லவும்; அவள் 'அதைப்பற்றி மறுபடியும் [illegible]

பேசவேண்டாம். கட்டாயமாய் நீங்கள் விடுதலை யடைவீர்கள். மாணிக்கம் சமாசாரத்தைக் கேளுங்கள். அவன் தந்தை நடராஜ முதலியாருடைய வியாபாரம் முறிந்துவிட்டதாக இன்று காலை யெங்கும் பிரஸ்தாபமாயிற்று. பங்காளிகளெல்லாம் மோடி விட்டார்கள். கடகத்திலிதற்குமுன் இப்படியொரு வியாபாரமும் முறிந்ததில்லையாம். அவர்களுடைய வியாபார நிலைமையை என் தகப்பனார் அநேக மாதங்களாக அறிவாராம். ஆனால் எனக்குக்கூடச் சொல்லவரல்லை' என்றாள். 'இதற்கும் என்னுடைய தற்கால நிலைமைக்கு மென்ன சம்பந்தமிருக்கிறது?' என்றவன் கேட்க, 'மாணிக்கம் இப்பொழுது பரம ஏழையாய்விட்டான். என்னுடைய தகப்பனார் அதிக தொகை தருவதாகச் சொன்னால், உண்மையை வெளியிட்டு விடுவான். நீங்கள் விடுதலையடையும் பக்குவமிதுவே' என்றாள் வடிவுடையம்மை.

சிறிதுநேரம் தியாகராஜன் யோசனை செய்திருந்து 'வடிவு! உன்னுடைய உதார குணத்தை நானென்னென்று சொல்லுவேன்? நீயென்னை உண்மையிலேயே காதலிக்கிறதாயிருந்தால், உனக்கொரு சந்தோஷ சமாசாரஞ் சொல்ல விருக்கிறேன்' என்றான். 'நானுங்களை இன்று நேற்று காதலிக்கவில்லை. வைரவபுரத்துப் பாடசாலையில் படிக்கநாள் முதல் காதலித்து வருகிறேன்' என்று வடிவுடையம்மை சொல்லவும், அவன் 'உன்னுடைய தகப்பனார் எனக்காக ஒரு காசுஞ் செலவுசெய்ய வேண்டியதில்லை. என்னுடைய திசை திரும்பியிருக்கிறது. எனது தகப்பனார் எல்லாச் செலவுகளையுஞ் செய்வார். அவர் அநேக கோடி திரவியங்களுக்கு அதிபதி. அவருக்கு நான் ஏகபுத்திரன். ஆகவே, நானொரு கோடீஸ்வரன்' என்றான். வடிவுடையம்மை பிரமித்து நின்று, 'உங்கள் தகப்பனாரா? யாரவர்? நீங்களநாதையென்றீர்களே!'

என்று கூறவும், அவன் தன் தகப்பனுடைய கண்டனத்தையும், அவர் சொன்ன தன் பிறப்புக் கதையையும் மற்றவைகளையும் சொல்லி, 'வடிவு! உன் தகப்பனார் என் விஷயமாக யாதொரு பிரயாசையும் எடுக்க வேண்டியதில்லை. எனது தந்தை வேண்டிய ஏற்பாடுகள் செய்துவருகிறார். பகவான் நம்முடைய பக்தியில்லாமற் போகவில்லை' என்று சொன்னான். வடிவுடையம்மை இவைகளை யெல்லாம்கேட்டு ஆச்சரியமுஞ் சந்தோஷமு மடைந்து 'உங்களுடைய கதை அற்புதமாகவேயிருக்கிறது. நீங்களும் ஒரு அதிசயமான பிறவிதான். சக்ரவர்த்தியின் மகன் காலகதியால் தரித்திரனைப்போலிருக்கிறதே' என்றாள். கொஞ்சநேரம் வார்த்தையாடிப் பிறகு வீட்டிற்குப் போய்விட்டான்.

அத்தியாயம் - 12.

சுதாநாயகி காதலனைக் கலியாணம்.

இரண்டு நாட்களுக்குப்பிறகு சுப்பிரமணிய முதலியார் துப்பறிய முதலியாருடன் தியாகராஜனைப் போய்ப்பார்த்தார். அத்துப்பறிபவர் தியாகராஜனைப் பல கேள்விகள் கேட்டு அவன் வாக்குமூலத்தையறிந்தார். சற்றுநேரம் யோசித்து முதலியாரைப்பார்த்து 'உங்களுடைய குமாரனை இக்குற்றத்தினின்றுந் தப்புவிக்க ஆட்சேபனையில்லை. ஆனால், அந்தத் தம்பிரானுங் கலந்துபேசவேண்டு மாகையால், நான் போய்ப்பார்த்து மறுபடியும் வருகிறேன்' என்று சொல்லிப் போய்விட்டார். அவர் நேராக அம்பலத்திற்குப்போய், மாணிக்கம் படித்திருந்த அறைக்குள்

பிரவேசித்தார். மாணிக்கம் தன் தகப்பனுடைய வியாபாரம் முறிந்துபோன விஷயத்தைப்பற்றிய கவலையுடையவனாய், 'நாம் எண்ணியதெல்லாம் போய் [illegible] க்கவேண்டுமா? [illegible] தலையெழுத்தா? நம் பிற்காலத்தைமை யெப்படி ஸௌபாக்கியமாய் முடிந்த தல்லவா?' என்று எண்ணமிட்டுக் கொண்டிருந்தான். [illegible] னல்ல.

'[illegible]' என்று கேட்டார் துப்பறிபவர். மாணிக்கம் அவரை யொரு பார்வை பார்த்து, 'உங்களை நானறியேன். நீங்கள் யார்?' என்று கேட்கவும், அவர் 'நானும் உங்களை யிதற்கு முன் பார்த்தது கிடையாது' என்று சொல்லிக்கொண்டே தன் சட்டைப்பையில் கையிட்டு ஒரு கடிதத்துண்டை யெடுத்து அவனிடம் கொடுத்தார். அக்கடிதத்துண்டில்,

" வேணுகோபாலன்.,

துப்பறியு முத்தியோகஸ்தர்."

என்று அச்சிட்டிருந்ததை அவன் பார்த்து ஒன்றும் பேசாமலிருந்தான். 'காயம் பலமானதோ?' என்று அவர் கேட்க, மாணிக்கம் 'இல்லை; குணமாகிக்கொண்டிருக்கின்றது' என்றான். '[illegible] நான் [illegible]. ஆஸ்பத்திரியிலிருந்து சம்பத்தின் வீட்டிற்குப் போவதாகவுந் தெரிகிறது. ஆனால் ஆஸ்பத்திரியை விட்டதும், நீங்களெங்கே போக [illegible]' என்றார் வேணுகோபாலன். 'அதைப் பற்றி யுங்களுக்காகவேண்டியதென்ன?' என்று மாணிக்கம் சொல்லவும், அவர் 'அப்படியா சமாசாரம்?

ஏன்? நேராய்ச் ஜெயிலுக்குப் போவாய்' என்ருர். 'நா
னேன் ஜெயிலுக்குப் போகவேண்டும்?' என்று மீண்
டும் மாணிக்கம் கேட்க, அவர் 'உன்னுடைய சூழ்ச்சி
யெல்லாம் வெளியாய்விட்டன. நீ பாவாவைக் குத்
திக்கொன்றதைப் பொருள் பார்த்திருந்த ஒரு சாட்சி
கிடைத்திருக்கிறது. நீ பெரிய ஆபத்திலே அகப்
பட்டுக்கொண்டாய்' என்ருர். உடனே மாணிக்கம்
'உன் கதையைக் கட்டிவையையா! யாருக்குப் பூச்சி
காட்டுகிருய்?' என்ருன். 'என்னைப் பயப்படுத்தநான்
வரவில்லை; தப்புவிக்கவே வந்திருக்கிறேன். இதோ
பார்! உனக்கு 15 ஆயிரம் ரூபாய் வாங்கித்தருகிறேன்,
உண்மையைச் சொல்லிவிடு' என்று வேணுகோபால்
சொல்ல, அவன் 'நான் முதலிலேயே உண்மையைச்
சொல்லிப் போட்டேனே. இன்னும் வேறு உண்மை
யென்ன? என்னை ஆபத்துக்குள்ளாக்கப் பார்க்கி
றீரா?' என்ருன்.

வேணுகோபால் சில சமாசாரம் இரகசியமாய்
மாணிக்கத்தின் காதோடு பேசினர். அவன் கொஞ்ச
நேரம் யோசித்துப் பிறகு 'அவன் என்னைக் கொலை
செய்யப் பார்த்தான். இப்பொழுது தன்னுடைய கொ
லையை மறைத்து பயப்படுகிறன்போல் தெரிகிறது.
அவனுக்குச் சரியான புத்திபண்ணிவைக்க வேண்டி
யது என்னுடைய கடமை. 30-ஆயிரம் ரூபாய் வாங்
கித் தருவதாயிருந்தால் என்னுடைய எண்ணத்தை
யொருசமயம் மாற்றுவேன்' என்று சொன்னான்.
'ஒரு சமயம் இருசமயமெல்லா முதவாது; நேராய்ச்
சொல்' என்ருர் வேணுகோபால். 'முப்பதினுயிரம்
ரூபாய் வாங்கித் தருவீரா?' என்று அவன் கேட்க,
அவர் 'ஒரு நிபந்தனையின்பேரில் செய்வேன். அதெ
ன்னவெனில், ரூபாயைப்பெற்றுக்கொண்டதும் இவ்
வூரைவிட்டு இரங்கூனுக்குப் போய்விடவேண்டும்.
10 வருஷத்திற்குத் திரும்பிவரப்படாது' என்றுசொன்

னார். 'சரி, அந்த நிபந்தனைக்கு நானுட்படுகிறேன்' என்று மாணிக்கம் சொன்னவுடன், அவர் 'இன்னொரு விஷயம் சொல்லவேண்டி யிருக்கிறது' என்றார். 'நீர் வேறொன்றுஞ் சொல்லவேண்டியதில்லை. நான் எதாவதொரு சூட்சியினால் தியாகராஜன் விடுதலையடையும்படியான ஏற்பாடு செய்யவேண்டியது. உடனே என்னுடைய கையில் 30-ஆயிரம் ரூபாயைக் காணலாம். அவ்வளவுதானே? என்றான் மாணிக்கம். வேணுகோபால் 'ஆம், ஆனால் தியாகராஜன் நிரபராதி யென்கிறவனைக்கூட உன்னுடைய சூட்சியை யெடுத்துக்காட்டவேண்டும்' என்று சொல்லி, இரகசியமாய் ஏதோ சிலவிஷயங்களைத் தெரிவித்தவுடன், அவன் 'அதிலென்ன பிசகு நேரிடுமா? அவனுக்குங் கெட்ட பெயர் வராமல், என்னுடையபெயருங்கெடாமல் பார்த்துக்கொள்ள எனக்குத்தெரியும்' என்றான்.

தியாகராஜன் விடுதலையானவுடனே பணத்தை மாணிக்கன்கையில் கொடுப்பதாகவும், அதைப்பெற்றதும், அவன் 10 நாளைக்குள் அவ்வூரைவிட்டுப்போய் விடவேண்டுமென்றும் ஏற்பாடு செய்துகொண்டு வேணுகோபால் நேராய் கானாவுக்குப் போய், தியாகராஜனையும், அவன் தந்தையையுங்கண்டு 'காரியத்தைச் செவ்வனே முடித்துவிட்டேன்' என்றார். 'மாணிக்கத்தைப் பார்த்தீர்களா? உண்மையைச் சொல்லிவிடுவதாக ஒத்துக்கொண்டானா?' எனச் சுப்பிரமணிய முதலியார்கேட்க, 'ஒத்துக்கொண்டான். ஆனால் அவனுக்கு முப்பதினாயிரம் ரூபாய் நீங்கள்கொடுக்கவேண்டும். கோர்ட்டில் விசாரிக்கும்போது மாணிக்கங் கொடுக்கும்படியான வாக்குமூலத்தினால், உங்கள் குமாரனை விடுதலை செய்யும்படியான தந்திரமிருக்கிறது. விடுதலையானதும், நீங்கள் அவனுக்குப் பணத்தைக் கொடுத்துவிட வேண்டியது. அவனையும்

இரங்கூன் போகும்படியாக ஏற்பாடு செய்திருக்கிறேன்' என்று வேணுகோபால் சொன்னார்.

இரண்டொரு நாள் செல்ல, விசாரணை நடந்தது. அந்தக் குற்ற சம்பந்தமாக வரவேண்டியவர்களெல்லாரும் கோர்ட்டில் 'ஹாஜர்' ஆனார்கள். ஜட்ஜி மாணிக்கத்தைக் கூப்பிட்டு 'இவன்தானா உன்னைக் குத்தினவன்?' என்று தியாகராஜனைச் சுட்டிக் காண்பித்துக் கேட்டார். மாணிக்கம் அவனை (தியாகராஜனை) நிதானித்து ஏற இறங்கப்பார்த்து 'இவனல்ல' என்றான். நியாயாதிபதி மூன்றுமுறை கேட்டும், அம்மூன்று முறையும் 'இவனல்ல' என்றே சத்தியஞ் செய்தான். தியாகராஜன் குத்தியபோது பார்த்ததாகச்சாட்சியங் கொடுத்த போலீஸ்வீரனும், தான் முன் சொன்னது பிசகென்றும், மாணிக்கத்தைக் குத்தினவன் உடனே யோடிவிட்டிருக்கவேண்டுமென்றும், அவ்வழி வந்த தியாகராஜன் உதவி செய்யக் குனிந்திருந்ததால் இருட்டில் அவனே குத்தியதாகப் புலப்பட்டதென்றும் சொன்னான். இவைகளை யெல்லாங் கேட்ட கோர்ட்டார் 'தியாகராஜன் நிரபராதி' என்றுசொல்லி உடனே விடுதலை செய்யும்படிக் கட்டளையிட்டார்கள்.

நீதிஸ்தலத்தைவிட்டு வெளிப்பட்டதும், வேணுகோபால் மாணிக்கத்தை யழைத்து அவன்கையில் 30-ஆயிரம் ரூபாய்க்கு ஒரு 'செக்கு' (பத்திரம்) கொடுத்தார். அதைப் பெற்றுக்கொண்டதும், 'இத்தொகையைக்கொடுத்தது யார்?' என்று கேட்டான் மாணிக்கம். 'கொடுத்தவர்கள் யாராயிருந்தாலுனக்கென்ன? நமக்குள்ளாக ஏற்கெனவே நடந்திருக்கும் நிபந்தனையின்படி இன்றைய பத்தாம் நாளுக்குள் இரங்கூன் போகத்தவறாதே!' என்று வற்புறுத்தி

வெகுகோபமாய்ப் பேசிவிட்டார். பிறகு மாணிக்கம் அங்கிருந்து முதல் சாமான ஜெராட்டுக்குப் போய் பொறாமையுக்கினையின் சலியா யுட்கார்ந்து ஆலோசிக்கத்தொடங்கினான். 'நம்மெண்ணத்திலே தான் மு முடிந்தது போலிருக்கின்றது. அந்தப் பயலுக் கோமளவல்லா ளை புத்திராணியாக்கிவிட்டான். வடிவுடையம்மையும் அவனைக் காதலிக்கிறாளென்பதில் ஆட்சேபனையில்லை. ஆகவே, அவர்களிருவர்க்கும் விவாகம் நடக்கும். நம்முடைய கதி தொலைந்துபோக போயிட்டது. அந்தப் பயல் சந்தோஷமாயிருக்க நாம் பார்ப்பதா? இன்னொரு விளையாட்டு விளையாடித் தீரவேண்டும்' என்று சூழ்ச்சி செய்தான்.

ஜட்ஜி சுப்பிரமணிய முதலியாரும், தியாகராஜனும் அம்பலவாண முதலியார் வீட்டிற்குப் போய், அவரையும் வடிவுடையம்மையையுங் கண்டு பேசி விட்டுக் கடசத்திற்குப் பிரயாணமானார்கள். அங்கே வீட்டையடைந்ததும், தியாகராஜன் தாயாரைக் கண்டான். முதலியார் தியாகராஜனைத் திரும்பவடைந்த விருத்தாந்தத்தைச் சொன்னார். அவைகளைக் கேட்டு விசாலாட்சியம்மாள் தன் குமாரனை மார்புறத் தழுவி முத்தமிட்டு இணையில்லாச் சந்தோஷமடைந்தாள்.

'இழந்தமணி புற்றரவே தீர்ந்தநெடு வாளுனர்
பழந்தன மிழந்தன வடைந்தவரை யொத்தாள்
குழந்தையை யுயிர்த்தவ ளடைந்தவமை கொண்டாள்
உழந்தவிழி பெற்றதொரு மிப்பொறையு மொத்தாள்'

அவள் கொண்ட ஆனந்தத்திற் கெல்லையேகிடையாது.

சிலதினங் சென்றதன்மேல் ஒருநாள் நங்கதா நாயகன் 'கலிவர்த்தமானி' என்னும் பத்திரிகையைப் படித்துக்கொண்டிருந்தான். அதிலோர் புறத்தில் 'கோமளீஸ்வரவாசிய அம்பலவாண முதலியாருடைய ஏகபுத்திரி வடிவுடையம்மை காணமற் போய்விட்டாள். அவள் போனவிடம் தெரியவில்லை.' என்றெழுதியிருந்தது அவன் இதைப் பார்த்ததும், தாய் தங்கையரிடத்தில் சொல்லிக்கொண்டு அதே நேரத்தில் புறப்பட்டு ரயிலேறி, காசிக்குப் போய் அம்பலவாண முதலியாரைப்பார்த்தான். அவர் 'அப்பா! தியாகு!! உன்னுடைய காதலியை இழந்தாயா?' அவள் போனவிடமுந் தெரியவில்லையே!' என்று கதறினார். தியாகராஜன் அவருக்குச் சொல்லவேண்டிய தேறுதல்களைச் சொல்லிவிட்டு, தானங்கே தங்கியிருந்த ஹோட்டலுக்குப் போனான். அவ்விடத்தில் கிடைத்த சில ஆதாரங்களைக்கொண்டு துப்பறியும் வேணுகோபாலையழைத்துக்கொண்டு, உடனே சென்னப்பட்டணம் போகும் ரயிலேறி மறுநாள் பகல் 12-மணிக்குச் சென்னை சேர்ந்தான். அதிவிரைவான வாடகை வண்டியில் சமுத்திரக்கரையையடைந்து இருவரும் ஒரு படகையமர்த்திக்கொண்டு இலங்கைக்குப் போகுங் கப்பலைக் கிட்டினார்கள். அக்கப்பல் அன்றையசாயங்காலம் இலங்கைக்குப் புறப்பட ஆயத்தமாயிருந்தது. பிரயாணிகளும் நிறைந்திருந்தார்கள்.

மேலேறிப்போனதும், கீழ்மாடிக் கிறங்கும் படிக்கட்டு வழியோரத்தில் மாணிக்கம் நிற்கக்கண்டு 'அடே! கொலைபாதகா! வடிவுடையம்மை யெங்கே

யென்று சொல்லுகிருயா, அல்லது இந்தப் படிகட்டிற்கு உன்னைப் பலியிடுகிறதா?' என்று கேட்டான் தியாகராஜன். இந்தப் பயங்கரமான சப்தத்தைக் கேட்டு ஜனங்கள் கும்பு கூடினார்கள். அக்கூட்டத்தைப்பார்த்து 'விலகியிருக்கிறீர்களா?' இந்தத் திருடனோடு நீங்களும் ஜெயிலுக்குப்போகிறீர்களா?' என்றுவேணுகோபால் சொல்லவும், ஜனங்கள் விலகிவிட்டார்கள். தியாகராஜன் படிக்கட்டுகளின் வழியாய்க் கீழேயிறங்க, மாணிக்கம் அவனை யிறங்கவொட்டாமல் தடுக்கப் பார்த்தான். தியாகராஜன் ஓங்கித் தன் கையால் அவன் தலையில் பலமாய்க் குத்தவும், மாணிக்கம் சுழன்று விழுந்துவிட்டான். வேகமாய்க் கீழேயிறங்கி ஒவ்வொரு அறையையுஞ் சோதித்துப்பார்த்து ஓரறையில் வடிவுடையம்மை படுத்திருப்பதைக் கண்டான் தியாகராஜன். அவளுடைய கைகளுங் கால்களுங் கட்டப்பட்டிருந்தன. 'கண்ணே! வடிவு!! உன்னைக்காப்பாற்ற இதோநான்வந்திருக்கிறேன்!' என்று தியாகராஜன் சொல்லவும், நங்கதாநாயகிமூடியிருந்த தன் கண்ணைத் திறந்துபார்த்து 'தியாகு!' என்று அலறினாள். தியாகராஜன் உடனே அவளைக் கட்டியிருந்த கயிற்றை யறுத்தெறிய, இருவரும் மேல்மாடி ஏறிப்போனார்கள். அங்கே வேணுகோபால் மாணிக்கத்தைக் கெட்டியாய்ப் பிடித்திருந்தார். அவனைப்பார்த்ததும், கோபாவேசத்தனாய் 'இக்கொடிய வஞ்சகனையிப்பொழுது என்னசெய்கிறது?' என்று கேட்டான் தியாகராஜன். 'ஒன்றுஞ் செய்யவேண்டாம்; சுகமே இரங்கூனுக்குப் போகட்டும்' என்று துப்பறிபவர் சொல்ல, அவனை விட்டுவிட்டு மூவரும் படகேறிக் கரைசேர்ந்தார்கள். கொஞ்சநேரத்திற்கெல்லாம் இரங்கூன் கப்பல் புறப்பட்டுவிட்டது.

வடிவுடையம்மை எப்படி மாணிக்கத்தின் வலையிலகப்பட்டாளென்று அவள் வாக்கிலிருந்து அறிவோம்:—'நான் மாலை 6-மணி குமாருக்கு வீட்டுத் தெரு வாயிற்படியில் நின்றுகொண்டிருந்தேன். ஒரு சிறுபிள்ளை 'யாரோ வண்டியில்வந்து உன்னையழைக்கிறார்கள்' என்று சொல்ல, அவனைப் பின் தொடர்ந்தேன். தெருக்கோடியில் ஒரு கோச்சுவண்டி நின்றிருந்தது. சமீபத்தில் போகவும், முகமறியாத இரு பெண்கள் என்னைத்தூக்கி வண்டியிற்போட்டுக் கதவை யடைத்து வண்டியை விரைவாகச் செலுத்திக் கொண்டு போனார்கள். 'அவர்கள் யார்? எங்கே கொண்டு போகிறார்கள்?' என்று கேட்டும் பயன்படவில்லை. அவர்கள் நகரினைக்கடந்து அடுத்த வூர் ஸ்டேஷனுக்குக் கொண்டுபோய் ரயிலேற்றினார்கள். சென்னை சேர்ந்ததும், இன்று காலை என்னைக் கப்பலிலேற்றினார்கள். அவர்கள் கொடுத்த ஆகாரத்தையும் நான் வாயில் வைத்தவளல்ல. சதா அழுதுகொண்டேயிருந்தேன். கப்பலேற்றி என்னைக்கைகால்களைக் கட்டிவிட்டு, நீங்கள் வருவதற்குச்சற்று முன்புதான் அந்த ஸ்திரீகளும் போய்விட்டார்கள். அப்பொழுது தான் மாணிக்கத்தையும் பார்த்தேன். அதற்குமுன் பார்த்தவளல்ல. அவனே இப்படி யென்னை மோசஞ் செய்து கொண்டுபோகிறானென நினைத்துக் கண்ணை மூடி யழுது படுத்துக்கொண்டிருந்தேன். 'வடிவு! இதோ உன்னைக் காப்பாற்ற வந்திருக்கிறேன்' என்ற சப்தத்தைக்கேட்டு உங்களைப் பார்த்தேன்.'

அன்றைய சாயங்காலமே சென்னைவிட்டுப்புறப்பட்டுத் தியாகராஜனும் மற்றவரும் நகரி வந்து சேர்ந்தார்கள்.

இரண்டுவாரஞ்செல்ல, ஒரு நல்லிலக்கினங்கூடிய சுப முகூர்த்தத்தில்,

கடகம் ஜட்ஜி		நகரி வர்த்தகர்
சுப்பிரமணிய முதலியார்		அம்பலவாண முதலியார்
குமாரன்	ஸ்ரீ	குமாரத்தி
சிரஞ்சீவி		சௌபாக்கியவதி

தியாகராஜமுதலியாருக்கும், வடிவுடையம்மைக்கும்,

விவாகச்சடங்கு சர்வமங்களகரமாய் நிறைவேறியது.

திருந்து யாமணிச் செய்குன்றுந் தெளிபுனற் றடமும்
விருந்து வேனிலாற் கெழீஇய விரைமலர்க் காவும்
முருந்து வாணகை முகிழ்முலை மடந்தையோ டாடிப்
பொருந்த விண்ணிடைப் போகமுண் டேந்தனர் போ
[ன்றான்.
௧

எனத் தியாகராஜன் வடிவுடையம்மையோடு இனிது வாழ்ந்திருந்தான்.

சுபம்! சுபம்!!

முற்றிற்று.

இந்நூலாசிரியரா லியற்றப்பட்ட இதர புத்தகங்கள்.

---

1. அம்பிகாபதியின் சரித்திரம்.

இது கவிச் சக்ரவர்த்தியாகிய கம்பரது குமாரனாகிய அம்பிகாபதியின் திவ்ய சரிதம். எளிய நடையில் கல்விச் சாதுரியத்தோடு சம்பவங்களைத் தக்கபடியாய் எழுதப்பட்டிருக்கிறது. இதில் சம்பந்தப்பட்டவர்களுடையக் கல்வியையும், வித்தையின் மகிமையையும் நேர்த்தியாக விளக்கியிருப்பதன்றி, இடையிடையே மேற்குறித்தவர்களுடைய அற்புதக் கவிகளே மேற்கோளாகவுங் காட்டப்பட்டிருக்கின்றன. இதன் விலை அணா (4). இன்னுஞ் சில பிரதிகளே யிருக்கின்றன.

---

2. நாகரத்தினம் அல்லது விஷக்குன்றேசி.

ஓர் நூதன துப்பறியும் கதை, இதில், உலகில் ஒருவரையொருவர் பணவாசையினால் தாயாதிகளென்றும் பாராமல் கொல்லுந் தொழிலுக்கு மாயத்தப்படுகிறார்களென்பது விளக்கப்பட்டிருக்கிறது. துப்பறிவதில் சமர்த்தரான ராஜூ நாயுடுவின் தந்திரமெல்லாம் படிக்கப்படிக்க மட்டில்லாத சந்தோஷத்தை விளைவிக்கும். விலை அணா (8)

---

3. கண்ணம்மாள் அல்லது கண்டதும் காதல்.

இஃதோர் அற்புத நாவல், அநேகர் கருத்துக்களடங்கிய சரிதம். விவேகமும் பாக்கியமுமுற்ற ஓர்பெண், தனது கற்பின் திறத்தினால், நல்லொழுக்கத்தினாலும் உயர்ந்து நின்று தாழ்ந்து யாதொரு பங்கமுமின்றி யிருந்து, பிறகு உயர்ந்த பதவி யடைந்ததைக் குறிக்கும். இதில் கற்பைக்

சாதுர்யம், சாமர்த்தியமானவை, கட்டுக்கதை [illegible] கூடாதென்றல், பெண்கள் முக்கியம், தெய்வ வழிபாடு முதலிய பல அரிய விஷயங்கள் காட்டப்பட்டிருக்கின்றன. எத்தனை முறை வாசிப்பினும் இன்பம் பயக்கக்கூடியது.

விலை அணா (8)

---

4. சிவகாமி அல்லது தப்பியோடினபெண்.

இதுவும் ஓர் சரித்திர துப்பறியும் நாவல். இதில் பெரும்பாலும் பெண்மணிகள், புருஷர்கள், டெலிபாதி யாதிய மனோசக்தி அற்புதங்கள் படிப்போர் மனதில் பதியும் வண்ணம் அழகான நவீனநடையில் காண்பிக்கும்படி எழுதப்பட்டிருக்கின்றன. இதனால் பெயர் பெற்ற கோபால கிருஷ்ணன் என்னும் துப்பறியும் சமர்த்தனின் உதவியால் உளவறிந்து குற்றவாளிகளைத் தண்டனைக்குட்படுத்தினது மிகவும் சேர்த்தியாயிருக்கும். இப்போப்பட்ட துப்பறியும் நாவல் இதுவரையில் வெளிவந்தது கிடையாது. விலை அணா (8)

ஷை நாவல்களும்

தனபாக்கியம், சுந்தரேசன், மாயாவதி

என்னும் நாவல்களும்

கீழ்க்கண்ட விலாசத்தின்படி கிடைக்கும்.

(1) S. T. மூர்த்தி முதலியார்,
நெ. 37; 35-வது கல்லி,
இரங்கூன்.

(2) நவீன கதா புத்தகசாலை,
நெ. 111 மான்ட்கமரி கல்லி,
இரங்கூன்.

(3) T. S. கிருஷ்ணசாமி பிள்ளை,
நெ. 1763, மஞ்ஜியப்ப தெரு,
தஞ்சாவூர்.

OTHER WORKS BY S.T. MOORTHY

1. **Ambigapathy** or
Life Sketch of Kamba's Son ... 0 4 0
2. **Kannammal** or
Love at first sight (a Novel) ... 0 8 0
3. **Nagarathnam** or
Poisoned Pin (a detective Novel) 0 8 0
5 **Sivakami** or
Escaped girl (a detective Novel) 0 8 0
6 * **Thanabakkyam**
(Adaptation of Reynold's May Middleton.)
7 * **Sunthar[illegible]an**
(Adaptation of Reynold's Joseph Wilmot)
8. * **Mayawathi**
(Adaptation of Reynold's Necrowancer)

* In the Press.

COPIES OF THE ABOVE CAN BE HAD OF.—

I. The Author,
No. 37, 35th Street, Rangoon.

II. Naveena Katha Book Depot,
No. 111. Montgomery Street,
Rangoon.

III. Mr. T. S. Krishnasawmy Pillay,
1763, Manajiappa Street, Tanjore